මැතිවරණ කොමිෂන් සභාව

தேர்தல் ஆணைக்குழு

ELECTION COMMISSION

2025 අයවැය කාරක සභා අවස්ථාවට ඉදිරිපත් කරනු ලබන

ප්‍රගති වාර්තාව 2024

2025 வரவு செலவுத் திட்ட குழு நிலை விவாதத்திற்கு சமர்ப்பிக்கப்படும்

முன்னேற்ற அறிக்கை 2024

PROGRESS REPORT 2024

TO BE TABLED IN PARLIAMENT AT COMMITTEE STAGE OF THE BUDGET 2025



தேர்தல் ஆணைக்குழு

2025 வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்திற்கு சமர்ப்பிக்கப்படும்

முன்னேற்ற அறிக்கை 2024

2025 வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்திற்கு சமர்ப்பிக்கப்படும் முன்னேற்ற அறிக்கை - 2024

தயாரிப்பு, கணினிப் பக்க வடிவமைப்பு மற்றும் திட்டமிடல்:
சட்டம், விசாரணை மற்றும் திட்டமிடல் பிரிவு

வெளியீடு
தேர்தல் ஆணைக்குழு, சரண மாவத்தை, இராஜகிரிய.

உள்ளடக்கம்

பகுதி I

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் விடுக்கும் செய்தி vi

தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் விடுக்கும் செய்தி viii

1. தேர்தல்கள் திணைக்களம் 1

2. தேர்தல் ஆணைக்குழு 1

3. தேர்தல் ஆணைக்குழுவின் குறிக்கோள்களும் தத்துவங்களும் 2

4. தேர்தல் ஆணைக்குழுவின் தொலைநோக்கு, பணித்திட்டம், பெறுமானங்கள், கவன ஈர்ப்புப் பகுதிகள், மூலோபாயங்கள், குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்கள் 4

5. 1931 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை தேர்தல் ஆணைக்குழுவினால் அமுல்படுத்தப்படும் சட்டங்கள் 8

6. தேர்தல் ஆணைக்குழுவின் நிர்வாகக் கட்டமைப்பு 10

7. தேர்தல் ஆணைக்குழுவின் கிளைகளும் அவற்றின் செயற்பொறுப்பும் 11

   I. ஆணைக்குழுப் பிரிவு 11

   II. தேசிய தேர்தல்கள் கிளை 11

      II.I தகவல் தொழில்நுட்பப் பிரிவு 12

   III. உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கிளை 12

      III.I விசேட கருத்திட்டப் பிரிவு 13

   IV. நிர்வாகக் கிளை 13

      IV.I தாபனப் பிரிவு 13

      IV.II. போக்குவரத்துப் பிரிவு 14

      IV.III. பெறுகை மற்றும் சொத்து முகாமைத்துவப் பிரிவு 14

   V. நிதிக் கிளை 14

   VI. சட்டம், விசாரணை மற்றும் திட்டமிடல் கிளை 15

   VII. உள்ளக கணக்காய்வுக் கிளை 15

   VIII. மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்கள் 16

8. தேர்தல் ஆணைக்குழுவின் பணியாட்குழு 17

பகுதி II

1. 2022 - 2025 பங்கேற்பு மூலோபாயத் திட்டம்.....19
2. வருடாந்த செயல் திட்டம்.....19
3. தேர்தல் ஆணைக்குழுக் கூட்டங்கள்.....19
4. தேர்தல் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட தேர்தல் சட்ட மறுசீரமைப்புகள்.....20
5. தேர்தல்களின் நோக்கத்திற்காக அரசியற் கட்சிகளை ஏற்றுங்கீகரித்தல்.....20
6. தேருநர்களைப் பதிவுசெய்தல்.....22
7. 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டம்.....23
8. தேருநர் இடாப்பு மீளாய்வு - 2024.....25
9. 2023(3) குறைநிரப்பு தேருநர் இடாப்பைத் தயாரித்தல்.....29
10. 2024 குறைநிரப்பு தேருநர் இடாப்புகளைத் தயாரித்தல்.....30
11. 2025(1), 2025(2), மற்றும் 2025(3) குறைநிரப்பு தேருநர் இடாப்புக்களைத் தயாரித்தல்.....32
12. தேருநர் இடாப்புச் செயன்முறைக்கு தகவல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தல்.....32
13. 2025 தேருநர் இடாப்பு மீளாய்வு.....34
14. பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடங்ளை நிரப்புதல.....35
15. சனாதிபதித் தேர்தல் - 2024.09.21.....36
16. பாராளுமன்றத் தேர்தல் - 2024.11.14.....43
17. தேர்தல் பிணக்குத் தீர்வு.....50
18. மாகாண சபைகள் தேர்தல்.....51
19. உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்.....51
20. உள்ளூர் அதிகார சபை உறுப்பினர் பதவி வெற்றிடங்களை நிரப்புதல்.....54
21. விசேட கருத்திட்டங்கள்.....54
22. வலிமையிழந்த ஆட்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்தும் பொறுப்பு.....56
23. தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தையும் தேர்தல் சட்டங்களையும் அமுல்படுத்துதல் தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்.....57
24. தகவல் தொழில்நுட்ப பாவனை.....59
25. சட்ட அலுவல்கள்.....63
26. கட்டுமானங்களும் புதுப்பித்தல்களும் (செலவு விடயம் - 2001).....65
27. நிதிக் கட்டுப்பாடு.....65
28. உள்ளக கணக்காய்வுப் பிரிவு.....65
29. வெளிநாட்டுப் பயிற்சிகளும் புலமைப்பரிசில்களும்.....66
30. வெளிநாட்டுக் கருத்தரங்குகளும் உத்தியோகபூர்வ விஜயங்களும்.....67
31. 2024 உள்நாட்டுப் பயிற்சிகள்.....67

32. தேர்தல் முறைமைகளுக்கான சர்வதேச அமைப்பினால் (IFES) நடத்தப்பட்ட பயிற்சிகள் 68
33. அரசியல் ரீதியாக பெண்களை வலுவூட்டல் 69
34. பயிற்றுவிப்பாளர் குழாமொன்றை நிறுவுதலும் அலுவலர்களை அறிவுறுத்துதலும்.....69
35. இடமாற்றங்களும் சேவைக்கு இணைத்தல்களும்.....69
36. வாகனப் பாவனையும் பராமரிப்பும்.....69
37. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்திற்கு உரிய அலுவல்கள்.....70
38. ஊடக ஒருங்கிணைப்பு அலுவல்கள் 70
39. சுவடிக்கூடம் 70
40. அறிவு முகாமைத்துவ அலகும் அரும்பொருட் காட்சியகமும்.....71
41. தேர்தல் ஆணைக்குழுவின் வெளியீடுகள் 71

பகுதி III

1. 2025 ஆம் ஆண்டில் அமுல்படுத்த எதிர்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்களும் 73

தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் விடுக்கும் செய்தி

மக்களினால் மக்களுக்கு மக்களின் பங்கேற்போடு நடைபெறும் ஆட்சி, சனநாயக ஆட்சி என்றழைக்கப்படும். ஒரு சனநாயக ஆட்சியில் மக்களின் தேவைகளின் அடிப்படையில் ஒரு நாடு ஆளப்படுகிறது. இங்கு, மக்களின் தேவைகளையும் விருப்பையும் அடையாளம் காண்பதற்கு பயன்படுத்தப்படும் மிக முக்கிய கருவி, தேர்தலாகும். இலங்கையின் அரசியலமைப்பிற்கிணங்க இறைமை மக்களுக்கு உரியதாகும். ஆட்சித்துறைத் தத்துவங்கள், அடிப்படை உரிமைகள், வாக்குரிமை என்பன இதிலடங்கும். இந்நாட்டின் அரசியலமைப்பிற்கான பதினேழாவது திருத்தத்தின்படி 103(2) ஆம் உறுப்புரையில் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களையும் மக்கள் தீர்ப்புகளையும் நடத்துவது தேர்தல் ஆணைக்குழுவின் குறிக்கோளாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தேர்தல் சட்டங்களின்படி குறித்த தேர்தல்களை நடத்துவதற்கும், வருடாந்த தேருநர் இடாப்புக்களைத் தயாரிப்பதற்கும் ஆணைக்குழுவுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. அதேபோல், அரசியலமைப்பில் காட்டப்பட்டுள்ளவாறு இயற்றப்பட்டுள்ள சட்டதிட்டங்களின்படி தேர்தல்களை நடத்தும் பொறுப்பும் அரசியல் கட்சிகளை ஏற்றங்கீகரிப்பதும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளபோதும், அவற்றுடன் மாத்திரம் நின்றுவிடுவதில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு தேர்தல் ஆணைக்குழுவுக்கு மிகவும் சிறப்பான ஓர் ஆண்டாக விளங்கியது. இவ்வாண்டின் இறுதி இரண்டு காலாண்டுகளிலும் இந்நாட்டின் ஒன்பதாவது நிறைவேற்று சனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பத்தாவது பாராளுமன்றத்திற்கு உறுப்பினர்களைத் தெரிந்தனுப்புவதற்கான பாராளுமன்றத் தேர்தலையும் வெகு சிறப்பாக நடத்துவதற்கும் குறிப்பாக சம போட்டித் தளமொன்றை உருவாக்குவதற்காக விஞ்ஞானபூர்வமாக மதிப்பீடு செய்யப்பட்ட விடயங்களின் அடிப்படையிலமைந்த சூத்திரமொன்றைப் பயன்படுத்தி 2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துதற்கும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு இயலுமாகியது. அதன்படி, 2024 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையான காலத்தினுள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட நியதிச்சட்ட செயற்பணியை நிறைவேற்றுதற்காக ஆற்றப்பட்ட பணிகளும் அதன் முன்னேற்றமும் குறித்த மீளாய்வு இந்த அறிக்கையில் முன்வைக்கப்படுகிறது.

முன்னாள் தேர்தல்கள் திணைக்களம், தேர்தல் ஆணைக்குழு போன்றே இன்றைய தேர்தல் ஆணைக்குழுவும் தற்போதைய தேவைகளுக்கு அமைய தேர்தல் முறை மற்றும் தேர்தல் சட்டங்களில் அத்தியவசியமாக செய்யப்பட வேண்டிய திருத்தங்களை அடையாளம் கண்டு அதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அவற்றினிடையே தேர்தல் சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வைப்புப் பணத்தின் அளவை அதிகரித்தல், தேர்தல் சட்டங்களில் காணப்படும் வைப்புப் பணத்தொகைகளை அதிகரித்தல், வாக்களிக்கும்போது தோதான குறியீட்டினால் அடையாளமிடும் முறையை நீக்குதல், நடமாடும் வாக்களிப்பு நிலையங்களுக்கத் தேவையான வசதிகளை ஏற்படுத்தல், திறந்த அடிப்படையிலான வாக்காளர் பதிவு புலம்பெயர்ந்தோர்களுக்கு வாக்களிக்கும் உரிமையைப் பெற்றுக்கொடுத்தல் போன்றவற்றிற்கான சட்டவாக்கங்கள் முக்கியமானவையாகும். அதேபோல், இளைஞர்களையும் பெண்களையும் வலிமையிழந்தோரையும் விளிம்புநிலை இனக்குழுமங்களையும் தேர்தல் செயன்முறையில் செயலூக்கமுடன் பங்கேற்கச்செய்வதற்கு அதனோடு சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் இணைந்து செயலமர்வுகளையும் பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்துவதற்கும் நடவடிக்கை

எடுக்கப்பட்டது. இது தவிர, பூரண வலிமையிழந்தவர்களுக்கு வாக்கெடுப்பு நிலையங்களில் நேரடியாகவே அவர்களுக்கு அவசியமான உதவிகளை வழங்குவதற்காக தற்காலிக அடையாள அட்டையொன்றை விநியோகித்தல், விழிப்புலனற்ற ஆட்களுக்கு வாக்குச் சீட்டில் அடையாளமிடுவதற்கு வழிகாட்டும் தொடுகைச் சட்டகங்களை அறிமுகப்படுத்தல், செவிப்புலனற்ற ஆட்களுக்கு தேர்தல் தொடர்பான சொற்கள் அடங்கிய சைகைமொழிச் சொற்கோவையொன்று பற்றி அறிவுறுத்துதல், வாக்கெடுப்பு நிலையத்தில் ஏற்படக்கூடிய தொடர்பாடல் தடங்கல்களைக் குறைப்பதற்கு தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு சைகைமொழிப் பயிற்சியை வழங்குதல் என்பவற்றுடன் தேர்தல் காலப்பகுதியினுள் விசேட தேவையுள்ள சமூகத்தின் வாக்குரிமையைக் காப்பதற்கு ஆணைக்குழு உயர்ந்தபட்சம் முயற்சி எடுத்தது. மேலும், தேர்தல் காலப்பகுதியில் அது சம்பந்தமான சட்டமீறல்களும் கிடைக்கும் முறைப்பாடுகளும் சம்பந்தமாக செயலாற்றுவதற்கு தேர்தல் ஆணைக்குழுவின் தலைமையில் தேர்தல் பிணக்கு முகாமைத்துவ நிலையங்கள் நாடுபூராவும் அமுல்படுத்தப்பட்டன. சமூக ஊடகங்கள் சம்பந்தமான முறைப்பாடுகள் தொடர்பில் செயலாற்றுவதற்கு விசேட அலகொன்றும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைமையகத்தில் நிறுவப்பட்டது. எவ்வாறாயினும், சட்ட சட்டகத்தினுள் போட்டியிடும் அனைத்துக் கட்சி வேட்பாளர்களுக்கும் நியாயமாக சமவாய்ப்புகளை வழங்குவதற்கு தேர்தல் ஆணைக்குழு உயர்ந்தபட்சம் நடவடிக்கை எடுத்தது என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன். அது மாத்திரமன்றி, தேர்தல் நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் தேர்தல் ஆணைக்குழுவின் 2022-2025 காலப்பகுதிக்கு தயாரிக்கப்பட்ட பங்கேற்பு மூலோபாயத் திட்டம் வரையான செயற்பாடுகளுக்கு உரிய இலக்குகளை அடைந்துகொள்வதற்கும் அவசிய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த அறிக்கையில் அடங்கியுள்ள விடயங்களின் அடிப்படையில் மீளாய்வு காலப்பகுதியில் தேர்தல் ஆணைக்குழுவின் இன்றைய முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கு ஆணைக்குழு அங்கத்தவர்களும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், செயலாளர், மேலதிக தேர்தல்கள் ஆணையாளர்கள், தலைமை நிதி அலுவலர் உள்ளிட்ட தலைமை அலுவலகத்தின் அனைத்து அலுவலர்களும் வழங்கிய ஒத்துழைப்பை பெரிதும் போற்றுவதுடன், ஒவ்வோர் அலுவலருக்கும் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை செயற்றிறனுடனும் பயன்கூர் விதத்திலும் உரிய காலப்பகுதியில் நிறைவேற்றியமையும் இந்த முன்னேற்றத்திற்கு சிறந்த உந்துசக்தியாக அமைந்ததென்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன். இந்த முன்னேற்ற அறிக்கையைத் தயாரிப்பதற்கு பங்களிப்பு வழங்கிய அனைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள், அனைத்து மாவட்ட பிரதி.·.உதவி தேர்தல்கள் ஆணையாளர்கள் உள்ளிட்ட மாவட்ட தேர்தல்கள் பணியாட்டொகுதி அலுவலர்கள், அரசியல் கட்சிகள், கண்காணிப்பு அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள், ஊடக நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து பங்கீடுபாட்டாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். இதற்கு அவசியமான தகவல்களையும் புள்ளிவிவரங்களையும் புகைப்படங்களையும் வழங்கிய அனைத்து பிரிவுத் தலைவர்களுக்கும், வெளியீட்டைத் தயாரித்து கணினிப் பக்க வடிவமைப்புச் செய்த சட்டம், விசாரணை மற்றும் திட்டமிடல் பிரிவின் அலுவலர்களுக்கும் மொழிபெயர்ப்புப் பணியை சிரமேற்கொண்ட ஆணைக்குழுவின் மொழிபெயர்ப்பு அலுவலர்களுக்கும் அறிக்கையை அச்சிட்டு புத்தகமாகக் கட்டியவர்களுக்கும், ஆட்பதிவுத் திணைக்கள பணியாட்குழுவுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க,

தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு

தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் விடுக்கும் செய்தி

“சர்வசன வாக்குரிமையைப் பாதுகாக்கின்ற ஒரு நாடு” என்ற தொலைநோக்கை முன்வைத்து, மக்களின் இறைமையை பாதுகாப்பதற்கு சர்வசன வாக்குரிமையோடு தொடர்புடைய சனநாயக மூலக்கோட்பாடுகளைக் காத்து, பிரசைகளின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்ற விதத்தில் உரிய அனைத்து திறத்தவர்களையும் அறிவுறுத்தும் சுதந்திரமானதும் நீதியானதும் நம்பத்தகுந்ததுமான ஒரு தேர்தல் செயன்முறையை வினைத்திறனாகவும் பயன்கூர் விதத்திலும் நெறிப்படுத்தும் பணியை முன்வைத்து செயலாற்றுவது தேர்தல் ஆணைக்குழுவின் முக்கிய பணியாகும். இலங்கைப் பாராளுமன்றத்தின் 2025 ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்ட குழுநிலை விவாதத்திற்கு முன்வைக்கப்படும் 2024 ஆம் ஆண்டின் தேர்தல் ஆணைக்குழுவினால் ஆற்றப்பட்ட பணிகளின் முன்னேற்றம் இந்த அறிக்கையில் முன்வைக்கப்படுகிறது.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பினால் உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் வண்ணம் 2024 ஆம் ஆண்டில் தேசிய மட்டத்தில் இரண்டு தேர்தல்களான சனாதிபதித் தேர்தலையும் பாராளுமன்றத் தேர்தலையும் நடப்பு சட்டத்திற்கிணங்க சுதந்திரமாகவும் நீதியாகவும் நடத்துவதன் மூலம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள நியதிச்சட்ட பொறுப்பை உரிய முறையில் நிறைவேற்ற முடிந்தது. நிரந்தர பொலிஸ்மா அதிபரொருவர், சிரேட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் (நிர்வாகம்) ஆகியோர் இல்லாத ஒரு சூழலில் இவ்விரு தேர்தல்களையும் நடத்த நேரிட்ட போதும் சுதந்திரமான, நீதியான தேர்தல்களை நடத்தும் பொருட்டு அன்றைய சனாதிபதியின் செயலாளர், பதில் மேலதிக சிரேட்ட பிரதி பொலிஸ்மா அதிபர், தேர்தல் விடயப்பொறுப்பு சிரேட்ட பிரதி பொலிஸ்மா அதிபரும் அனைத்து மாகாண சிரேட்ட பிரதி பொலிஸ்மா அதிபர்களும் உள்ளிட்ட முழு பொலிஸ் திணைக்களத்திடமிருந்தும் கிடைத்த ஒத்தாசை பாராட்டுக்குரியது.

இவ்விரு தேர்தல்களையும் மிகச் சிறப்பாக நடத்தி முடித்த கௌரவம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு மாத்திரம் உரியதல்ல. மாறாக அரசாங்க அச்சகம், அஞ்சல் திணைக்களம் உள்ளிட்ட அனைத்து அரச நிறுவனங்களுக்கும் உரியதாகும். அதேபோல், உகந்த முறையில் பிரசைகளை அறிவுறுத்தி தமது செயற்பொறுப்பை சரியான முறையில் நிறைவேற்றிய அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு நிறுவனங்களும், அதன் பங்கீடுபாட்டாளர்களாகும்.

2022-2025 காலச் சட்டத்திற்கு தயாரிக்கப்பட்ட பங்கேற்பு மூலோபாயத் திட்டத்தின்படி செயலாற்றி எட்டு குறிக்கோள்களின் கீழ் இருபது நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு விழிப்பூட்டல்களும் செயலூட்டமும், சட்ட மறுசீரமைப்பு, நிறுவன அபிவிருத்தி, தொழில்நுட்பம் என்பவற்றை ஈடுபடுத்திக்கொள்ளல் என்ற நான்கு கவன ஈர்ப்புப் பகுதிகளுக்கு முன்னுரிமையளித்து தேர்தல் ஆணைக்குழு செயலாற்றியது.

மிகவும் வரையறுத்த ஒரு காலப்பகுதியில் நெருக்கடியான சூழ்நிலைக்கு மத்தியிலும் சளைக்காமல் இரண்டு தேர்தல்களை நடத்தி, நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழுவை நெறிப்படுத்த உரம் சேர்த்த தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் திரு. ஆர்.எம்.எல்.கே.ரத்நாயக்க அவர்கள் உள்ளிட்ட ஆணைக்குழுவின் உறுப்பினர்களையும் நன்றியுடன் நினைவுகூர்கின்றேன். அனைத்து சிரமமான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் நிறுவனத்தின் நாளாந்தப் பணிகளை குறையின்றி நிறைவேற்றி இவ்விரு தேர்தல்களையும் வெற்றிகரமாக நடத்துவதற்கு அளப்பரிய பணியாற்றிய, தேர்தல் ஆணைக்குழுவின் முனைப்பான கரமான தேர்தல்கள் செயலகம் உள்ளிட்ட அனைத்து மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களின் அலுவலர்கள் உள்ளிட்ட முழு

பணியாட்குழுவினரையும் இவ்வேளை விசேடமாக பாராட்ட விரும்புகின்றேன். அதேபோல், அனைத்து மாவட்ட செயலாளர்களும் தேர்தல் ஆணைக்குழுவின் பணிகளில் நெருக்கமாக செயலாற்றும் அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளிடமிருந்து கிடைத்த ஒத்துழைப்பையும் மேலும் நினைவூட்ட விரும்புகின்றேன். அனைத்து அரச அலுவலர்களையும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளையும் அரசியல் கட்சிகளையும் கண்காணிப்பு அமைப்புக்களையும் அரச சார்பற்ற அமைப்புக்களையும் அனைத்து ஊடக நிறுவனங்களையும் இவ்வேளை நன்றியுடன் நினைவுகூர்கின்றேன்.

இந்த வெளியீட்டைத் தயாரிப்பதில் முன்னின்று செயலாற்றிய பணிப்பாளர் (திட்டமிடல்) உள்ளிட்ட சட்டம், விசாரணை மற்றும் திட்டமிடல் பிரிவின் தலைவர்களும், முழு பணியாட்குழுவினரும் அதற்கு அவசியமான அனைத்துத் தகவல்களையும் வழங்கி உதவிய தலைமை அலுவலகத்தின் அனைத்து பிரிவுத் தலைவர்களும் உள்ளிட்ட முழு பணியாட்குழுவினரையும் நன்றியுடன் நினைவுகூர்கின்றேன்.

சமன் ஸ்ரீ ரத்நாயக்க
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

01. தேர்தல்கள் திணைக்களம்

நாட்டின் ஆட்சி அலுவல்களில் பங்குபற்றுவதற்கு அதிகளவு வாய்ப்பை உள்நாட்டு மக்களுக்கு வழங்க வேண்டுமென 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுந்த பெரும் ஆர்ப்பாட்டங்களுக்குப் பதிலளிக்கும் வகையில் புதிய யாப்பொன்றை உருவாக்குமுகமாக பிரித்தானிய முடியினால் 1944 ஆம் ஆண்டில் சோல்பரி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. வாக்காளர்களைப் பதிவுசெய்வதற்கும் பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதற்குமான சட்டங்களை சோல்பரி ஆணைக்குழு உருவாக்கியதுடன் 1946 செப்தெம்பர் 26 ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தலுக்கான அரச கட்டளையைப் பிறப்பித்தது. உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்காக 1946 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி கட்டளைச்சட்டம் முன்வைக்கப்பட்டது. 1946 முதல் 1955 வரையான காலப்பகுதியில் வாக்காளர்களைப் பதிவுசெய்வதற்கும் பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கும் ஆணையாளரொருவரின் கீழ் பாராளுமன்றத் தேர்தல்கள் திணைக்களமும், உள்ளூராட்சி நிறுவனங்களின் தேர்தலை நடத்துவதற்காக மற்றும் ஆணையாளரின் கீழ் உள்ளூராட்சித் தேர்தல்கள் திணைக்களமும் செயற்பட்டது. இவ்வாறு வெவ்வேறாகக் காணப்பட்ட பாராளுமன்றத் தேர்தல்கள் திணைக்களம், உள்ளூராட்சித் தேர்தல்கள் திணைக்களம் என்பவற்றை ஒன்றிணைத்து 1955 அக்டோபர் மாதம் 01 ஆம் திகதி தேர்தல்கள் திணைக்களம் தாபிக்கப்பட்டது.

02. தேர்தல் ஆணைக்குழு

2001 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 03 ஆம் திகதி அரசியலமைப்பிற்கான 17 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது. அத்திருத்தத்திற்கு அமைய அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் பேரில் சனாதிபதியினால் தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டியிருந்தது. எனினும், நியமனங்கள் தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக எதிர்பார்த்தவாறு தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்படவில்லை. அரசியலமைப்பிற்கான 17 ஆவது திருத்தத்திற்கு அமைய தேர்தல் ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படும் வரை அப்பதவிகளை வகித்த ஐந்தாவது தேர்தல்கள் ஆணையாளருக்கு தேர்தல் ஆணைக்குழுவின் கடமை அலுவல்களை நிறைவேற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. 2010.09.09 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புக்கான 18 ஆவது திருத்தத்தின் மூலம் தேர்தல் ஆணைக்குழுவின் இணைப்பாக்கம் ஐந்து (05) உறுப்பினர்கள் வரை அதிகரிக்கப்பட்டது. அதேபோல், தேர்தல் ஆணைக்குழு தாபிக்கப்படும் வரை ஆணைக்குழுவின் தத்துவங்களையும் கடமைகளையும் அமுலாக்கும் பொறுப்பு, தேர்தல்கள் ஆணையாளரினால் நிறைவேற்றப்பட வேண்டும். எனினும், அதுவரையிலும் தேர்தல் ஆணைக்குழு தாபிக்கப்படவில்லை.

2015 ஆம் ஆண்டின் அரசியலமைப்பிற்கான 19 ஆவது திருத்தத்திற்கமைய சுயாதீன ஆணைக்குழுக்களைத் தாபிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. அதற்கமைய அதுவரை காணப்பட்ட தேர்தல்கள் திணைக்களம் இரத்துச்செய்யப்பட்டு அரசியலமைப்புப் பேரவையின் பரிந்துரையின் பேரில் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் தவிசாளர் உட்பட மூன்று(3) உறுப்பினர்களைக் கொண்ட தேர்தல் ஆணைக்குழு 2015.11.13 ஆம் திகதி தாபிக்கப்பட்டது.

2020 அக்டோபர் மாதம் 29 ஆம் திகதி கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பிற்கான 20 ஆவது திருத்தத்தின் மூலம் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை ஐந்து(05) வரை அதிகரிக்கப்பட்டது. அதற்கமைய 2020.12.10 ஆம் திகதி பாராளுமன்றச் சபையின் பரிந்துரையின் பேரில் இரண்டாவது தேர்தல் ஆணைக்குழு அதிமேதகு சனாதிபதி அவர்களினால் நியமிக்கப்பட்டது. அது, தவிசாளர் உட்பட ஐந்து(5) உறுப்பினர்களைக் கொண்டதாகும். சட்டத்தரணி நிமல் ஜீ. புஞ்சிஹேவா அவர்கள் தவிசாளராகவும், பொதுத் திறைசேரியின் முன்னாள் பிரதிச் செயலாளரொருவரான திரு. எஸ்.பி.திவாரத்ன அவர்கள், முன்னாள் தேர்தல்கள் ஆணையாளரொருவரான திரு. எம்.எம்.மொஹமட் அவர்கள், முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபரொருவரான திரு. கே.பீ.பீ.பத்திரண அவர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளரொருவரான திரு. ஜீவன் தியாகராஜா அவர்கள் ஆகியோர் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாகவும்

நியமிக்கப்பட்டனர். திரு. ஜீவன் தியாகராஜா அவர்கள் வடமாகாண ஆளுநராக 2021.10.10 அன்று நியமிக்கப்பட்டார். அவருக்குப் பதிலாக சிரேட்ட நிர்வாக அலுவலரொருவரான முன்னாள் வடமாகாண ஆளுநர் திருமதி பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் அவர்கள் 2021.10.28 ஆம் திகதி நியமிக்கப்பட்டார். அந்த ஆணைக்குழுவின் கூட்ட நடப்பெண் மூன்று(3) உறுப்பினர்களைக் கொண்டதாக இருந்தது.

2022.10.31 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பிற்கான 21 ஆவது திருத்தத்திற்கமைய அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் பேரில் மூன்றாவது தேர்தல் ஆணைக்குழு அதிமேதகு சனாதிபதி அவர்களினால் நியமிக்கப்பட்டது. அந்த ஆணைக்குழுவுக்கு தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் நாயகமொருவரான ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க அவர்கள் தவிசாளராகவும், முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் ஒருவரான திரு.எம்.ஏ.பீ.சி.பெரேரா, சட்டத்தரணி அமீர் பாயிஸ் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். அவர்கள் 2023.07.05 ஆம் திகதி தமது கடமை அலுவல்களை ஆரம்பித்தனர். சட்டத்தரணி (செல்வி) ஏ. சண்முகநாதன் அவர்கள் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்பட்டதுடன் 2023.09.11 ஆம் திகதி தமது கடமை அலுவல்களை ஆரம்பித்தார். மூன்றாவது தேர்தல் ஆணைக்குழுவின் 05 ஆவது உறுப்பினராக பேராசிரியர் டீ.எம்.எஸ். ல்க்ஷ்மன் திசாநாயக்க அவர்கள் 2024.01.02 ஆம் திகதி நியமிக்கப்பட்டார். அதன் படி பேராசிரியர் லக்ச்மன் திசாநாயக்க அவர்கள் 2024.01.02 ஆம் திகதி நியமிக்கப்பட்டதுடன் 2024.01.10 ஆம் திகதி தனது கடமைகளை ஆரம்பித்தார். ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை ஐந்தாக பூர்த்தியடைந்தது.

03. தேர்தல் ஆணைக்குழுவின் குறிக்கோள்களும் தத்துவங்களும்

அரசியலமைப்பின் 103(2) ஆம் உறுப்புரைக்கமைய சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களையும் மக்கள் தீர்ப்புக்களையும் நடத்துதல் தேர்தல் ஆணைக்குழுவின் குறிக்கோளாயமைதல் வேண்டும். அத்தோடு செயல்வலுவிலுள்ள தேர்தல் சட்டங்களுக்கமைய தேர்தல்களை நடத்துவதற்கும், வருடாந்த தேருநர் இடாப்பை தயாரிப்பதற்கும் மீளாய்வுசெய்வதற்கும் ஆணைக்குழுவுக்கு தத்துவமுள்ளது. ஆணைக்குழுவின் அலுவல்கள் அந்த தத்துவங்களுடனும் கடமைகளுடனும் வரையறுக்கப்படவில்லையென அரசியலமைப்பின் 104ஆ(1) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏற்புடைய சட்ட ஒழுங்குவிதிகளுக்கமைய தேர்தல்களை நடத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள தேர்தல்கள் திணைக்களத்தை விட கூடுதலான ஒரு விசேட பொறுப்பு தேர்தல் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளது. அதனுடன் தொடர்புடைய அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் ஊடாக முதன்மைச் சட்டவாக்கத்தில் விசேட ஏற்பாடுகளை உட்சேர்ப்பதன் மூலம் தேர்தல் ஆணைக்குழுவின் தத்துவங்கள் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவை அமைக்கும்போது ஆணைக்குழுவுக்கு விசேட தத்துவங்கள் வழங்கப்பட்டுள்ளன. அரசியலமைப்பின் 104அ உறுப்புரையின் கீழ் நீதிமுறை நியாயாதிக்கத்தின் கீழ்,

I. ஆணைக்குழுவின் முடிவுகள், ஏற்பாடுகள் அல்லது செயற்பாடுகள் இறுதியானதும் அறுதியானதுமாக இருத்தல் மற்றும்
II. தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர் அல்லது அலுவலரொருவர் தேர்தலொன்றை நடத்துவதுடன் தொடர்புடைய யாதேனுமொரு சட்டத்தின் கீழ் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட யாதேனுமொரு செயல் சம்பந்தமாக சிவில் வழக்கொன்றை அல்லது வழக்கு நடவடிக்கையொன்றை தாக்கல் செய்ய முடியாதுள்ளமை

போன்ற விசேட விடுபாட்டுரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்தகைய விசேட விடுபாட்டுரிமைகள் 126 ஆவது உறுப்புரையின் கீழ் அடிப்படை உரிமை மீறல் சம்பந்தமான மேன்முறையீட்டு நீதிமுறை நியாயாதிக்கம், 130 ஆவது உறுப்புரையின் கீழ் சனாதிபதித் தேர்தல், தேர்தல் மனுக்கள் முதலியன சம்பந்தமாக காணப்படும் மேன்முறையீட்டு நீதிமுறை நியாயாதிக்கம், 144 ஆவது உறுப்புரையின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் பதவியொன்றுக்கு தெரிவுசெய்யப்படுவதற்கு உரிய மனுக்களை விசாரிப்பதற்கான மேன்முறையீட்டு நீதிமுறை நியாயாதிக்கத்தின் கீழேயே வழங்கப்பட்டுள்ளன. மேலும்,

தேர்தல் செயன்முறையை செயற்படுத்தும்போது சட்டங்களை வினைப்படுத்தலும் பாதுகாத்தலும் தனது அலுவல்கள் சம்பந்தமாக ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் என்பன தவிர, ஏனைய பொறுப்புக்களுக்கான கடப்பாட்டை தேர்தல் ஆணைக்குழு கொண்டிருப்பதில்லை என்பது ஒரு சிறப்பம்சமாகும். இது தவிர, அரச ஆதனங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுத்தல் சம்பந்தமான விசேட அதிகாரம் 104ஆ(4)(அ) உறுப்புரையின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. 104(5)(அ) உறுப்புரைக்கமைய தேர்தல் காலப்பகுதியில் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடத்துவதை உறுதிப்படுத்துவதற்காக ஊடக நிறுவனங்களுக்கு ஊடக வழிகாட்டிநெறிகளை விதித்துரைப்பதற்கும், அது சம்பந்தமான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. 104இ உறுப்புரையின் கீழ் பொலிஸாரை ஈடுபடுத்திக்கொள்வதற்கும், 104ஈ உறுப்புரையின் கீழ் ஆயுதப் படையினரை ஈடுபடுத்திக்கொள்வதற்கும் ஆணைக்குழுவுக்கு விசேட தத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

04. தேர்தல் ஆணைக்குழுவின் தொலைநோக்கு, பணித்திட்டம், பெறுமானங்கள், கவன ஈர்ப்புப் பகுதிகள், மூலோபாயங்கள், குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்கள்

தொலைநோக்கு

"சர்வசன வாக்குரிமையைப் பாதுகாக்கின்ற ஒரு சனநாயக நாடு"

பணித்திட்டம்

"மக்கள் இறைமை, சர்வசன வாக்குரிமை மற்றும் அதனோடு தொடர்புடைய சனநாயக மூலக்கோட்பாடுகள் என்பவற்றைப் பாதுகாத்து, பிரசைகளின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்ற விதத்தில் ஏற்புடையவாறு அனைத்துத் திறத்தவர்களையும் அறிவுறுத்துகின்ற சுதந்திரமானதும், நீதியானதும் நம்பத்தகுந்ததுமான தேர்தல் செயன்முறையொன்றை வினைத்திறனும் விளைதிறனும் கொண்டதாக மேற்கொள்ளல்"

பெறுமானங்கள்

- **நேர்மை (உறுதி)**

  தேர்தல் ஆணைக்குழு மற்றும் அதன் அலுவலர்களின் நேர்மை, உயர் நன்நடத்தை மற்றும் உறுதியான கொள்கைகளைப் பேணி வரல்.

- **வெளிப்படைத்தன்மை**

  தேர்தல் ஆணைக்குழுவும் அதன் அலுவலர்களும் உண்மையாகவும், நீதியாகவும் மற்றும் திறந்த மனதுடனும் அனைத்து நடவடிக்கைகளின்போதும் செயலாற்றுதல்.

- **திறந்த தன்மை**

  தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலர் எவரும் ஒளிவுமறைவின்றி கதைத்தலும் செயலாற்றுதலும்.

- **அர்ப்பணிப்பு**

  தேர்தல் ஆணைக்குழுவின் அலுவல்களின்போது அதன் தெலைநோக்கு, பணித்திட்டம், அபிலாசைகள் மற்றும் நோக்கங்களுக்கு முழுமனதுடன் இணங்கிச் செயலாற்றுதலும் முன்வைக்கப்படும் பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் தயக்கமின்றி முகங்கொடுத்தலும்.

- **பொறுப்புக்கான கடப்பாடு**

  கடமை அலுவல்களின்போது தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலர்கள் தார்மிக ரீதியிலான பொறுப்புக்கூறலுக்கான கடப்பாட்டைக் கொண்டுள்ளமை.

- **வகைகூறல்**

  தேர்தல் ஆணைக்குழு மற்றும் அதன் அலுவலர்கள் தமது அனைத்து நடவடிக்கைகளும் சம்பந்தமாக பொறுப்புக்கூறும், அந்த நடவடிக்கைகள் தொடர்பாக பொறுப்புக் கூறுவதற்கான கடப்பாடு, தாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் பெறுபேறுகளை ஒளிவுமறைவின்றி வெளியிடுதல்.

- **பக்கச்சார்பின்மை**

  தேர்தல் ஆணைக்குழு மற்றும் அதன் அலுவலர்கள் ஆளொருவர் அல்லது குழுவொன்றுக்கு கடப்படாதிருத்தலும், அவ்வாறான அழுத்தங்களுக்கு உள்ளாகாமையும், பக்கஞ்சாராமையும்.

- **குழு உணர்வும் குழுவொன்றாகச் செயற்படுதலும்**

  தேர்தல் ஆணைக்குழுவின் உயரதிகாரிகள் உள்ளிட்ட அலுவலர்கள் அனைவரும் சரியான மனப்பாங்குடன் இணைந்து பணியாற்றுவதற்கான உணர்வுடையவர்களாக இருத்தல்.

கவன ஈர்ப்புப் பகுதிகள்

- **விழிப்புணர்வூட்டலும் செயலூட்டமும்**

  முழுதுமளவிய தேர்தல் செயன்முறை குறித்து பொது மக்களை அறிவுறுத்துவது காலத்தின் தேவையென தேர்தல் ஆணைக்குழு பெரிதும் நம்புகின்றது. குறிப்பாக, சர்வசன வாக்குரிமையை உரிய முறையில் பயன்படுத்திக்கொள்வதன் மூலம் நாட்டின் ஆட்சிக்கு தமது பொறுப்பை சாதுரியமான முறையில் நிறைவேற்றும் பொருட்டு வாக்காளர்களை அணிதிரட்டுவதை நோக்காகக்கொண்ட பரந்ததொரு கல்வியைப் பெற்றுக்கொடுப்பதன் மீது விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதன் ஊடாக மக்களின் இறைமை மிகவும் பொருள்பொதிந்ததாகும் என்பது ஆணைக்குழுவின் எதிர்பார்ப்பாகும்.
  வாக்குரிமையின் பொறுப்பு குறித்து அனைத்துப் பிரசைகளையும் அறிவுறுத்துவது தேர்தல் அதிகாரிகளின் தலையாய ஒரு பொறுப்பாகும். வாக்குரிமை என்பது மக்களின் இறைமையாகும். அதேபோல், நாட்டின் ஆட்சியில் பங்குகொள்வதற்கான ஆற்றலின்படி தாம் விரும்பும் ஆட்சியாளரொருவரைத் தெரிவுசெய்தல் வாக்குரிமையின் ஊடாகவே இடம்பெறுகிறது. வக்குரிமையின் முக்கியத்துவம் அரசியலமைப்பில் உயர் முன்னுரிமையுடன் உட்சேர்க்கப்பட்டுள்ளது. அது, மக்களின் இறைமையின் முக்கிய ஓர் அங்கம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வாக்குரிமை மக்களின் ஓர் அடிப்படை உரிமை என்பது வழக்குத் தீர்ப்புகளின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தேர்தலும் மக்களின் இறைமையாக அமைவதுடன் சுதந்திரமானதும் நீதியானதுமான இரகசிய வாக்கு என்பது பிரசைகளின் அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்கான் உரிமையின் ஓரங்கமாகும்.

  வாக்குரிமையின் முக்கியத்துவம் பற்றி மிக விரிவாக பாடசாலைப் பிள்ளைகள் முதல் இளைஞர்கள், பெண்கள், இளைஞர் சமூகத்திற்கும் வயதுவந்தவர்களுக்கும் போதியளவில் பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்கும் அதனை அர்த்தபுஷ்டியுள்ளதாக மாற்றுவதற்கும் பரந்ததொரு

கல்வியை தயார்படுத்துவதற்கும் தேர்தல் ஆணைக்குழு உறுதியாக செயற்படுவதற்கு தயாராகவுள்ளது.

- **சட்ட மறுசீரமைப்புகள்**

முழுதுமளாவிய தேர்தல் செயன்முறையில் ஏற்படுத்தப்பட வேண்டிய சட்ட மறுசீரமைப்புகள் குறித்து ஆணைக்குழு கடந்த ஆண்டு முழுவதும் தீவிர முயற்சி எடுத்தது என்பதைக் குறிப்பிட வேண்டும். அதன்படி, பாராளுமன்ற விசேட தெரி குழுவொன்றை நியமித்துக்கொள்வதற்கு ஆணைக்குழு மும்முரமாக இயங்கி சட்ட மறுசீரமைப்புகளுக்கான பல்வேறு பிரேரணைகளை தெரி குழுவின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளது. குறித்த பிரேரணைகளில் கணிசமானவற்றுக்கு பாராளுமன்ற விசேட தெரிகுழுவின் விதப்புரை கிடைக்கின்றமை குறித்து ஆணைக்குழு பெரிதும் மகிழ்ச்சியடைவதைப் போலவே, அவற்றை அமுல்படுத்துவதற்கு எடுக்கப்படக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் நிறைவேற்றுவதற்கான துரித நிகழ்ச்சித்திட்டமொன்று ஏலவே முடுக்கிவிடப்பட்டுள்ளது. அதனூடாக மக்களின் இறைமையை யதார்த்தமாக மலரச்செய்யும் பொருட்டு மக்களின் உரிமைகளைக் காத்து, சாதுரியமான முறையில் சர்வசன வாக்குரிமையை அமுல்படுத்துவதன் ஊடாக சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் செயன்முறையைப் பலப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. 2022-2025 மூலோபாயத் திட்டத்தின் சட்ட மறுசீரமைப்புச் செயன்முறை முற்றிலும் இப்பிரேரணைகளை அமுல்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படுகிறது.

- **நிறுவனம் சார் அபிவிருத்தி**

இந்த மூலோபாயத் திட்டத்தில் கவன ஈர்ப்புப் பகுதிகளின் ஊடாக நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படும் புதுப்பாதையை மிகவும் பயனுறுதியடையச் செய்வதற்காக நிறுவனக் கட்டமைப்பைப் பலப்படுத்துவது இன்றியமையாததாகும். அதற்கு அவசியமான பௌதிக வளங்களை உரிய முறையில் கையாண்டு நிறுவனம் வசமுள்ள மனித வளத்தை உயர் கொள்திறன் கொண்டதாக நெறிப்படுத்தி, நிறுவனத்தின் பலத்தை அதிகரிப்பதன் ஊடாக நிறுவனத்தின் வினைத்திறனையும் விளைதிறனையும் உறுதிப்படுத்துவது குறித்து ஆணைக்குழு விசேட கவனம் செலுத்துகிறது. ஆணைக்குழுவின் தொலைநோக்கு, பணித்திட்டம், நோக்கங்கள் என்பவற்றை பேண்தகு அடிப்படையில் அடைந்துகொள்வதற்கு நிறுவனத்தின் பௌதிக, மனித, நிதி மற்றும் தொழில்நுட்ப வளங்களை சிறப்பாக முகாமைசெய்வது இன்றியமையாத ஒரு மூலோபாயமென்று ஆணைக்குழு நம்புகிறது.

- **தொழில்நுட்பத்தை பயன்படுத்திக்கொள்ளல்**

வாக்காளர்களின் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு நிறுவனத்தின் அலுவல்களை மக்களின் எதிர்பார்ப்புகளை செயல்வலுப்படுத்தக்கூடிய விதத்தில் மிக எளிதாகக் கையாண்டு, ஒழுங்கமைப்பதற்கு நவீன தொழில்நுட்பத்தின் கருவிகளைப் பயன்படுத்துவதை பெரிதும் விஸ்தரிப்பதற்கு ஆணைக்குழு ஏலவே பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தேர்தல் செயன்முறை குறித்து மக்களை அறிவுறுத்துவதற்கும் விழிப்பூட்டுவதற்கும் தொழில்நுட்பத்தை உயர்ந்தபட்சம் ஈடுபடுத்துவதற்கான ஒரு விசேட வேலைத்திட்டம் பயன்படுத்தப்படுகிறது.

மூலோபாயங்கள்

- நிறுவனம்சார் அபிவிருத்தி.
- பணியாட்குழுவின் ஆற்றல் அபிவிருத்தி.
- நிதிசார் ஊக்குவிப்பு.
- வலையமைப்பாக்கம்.

குறிக்கோள்கள்

- பிரசைகள், வாக்காளர்கள் ஆகிய இரு திறத்தவர்களும் வாக்குரிமையும் சனநாயக உரிமைகளும் பற்றி போதியளவு விழிப்புணர்வைப் பெற்றுள்ளனர்.
- தகைமை பெற்ற அனைத்துப் பிரசைகளும் தேர்தல்களின்போது அச்சமின்றியும் சுதந்திரமாகவும் நம்பிக்கையுடனும் வாக்களிக்கின்றனர்.
- மக்களின் இறைமையைப் பாதுகாப்பதற்காக தேர்தல் ஆணைக்குழு போதியளவு சட்ட ரீதியாக பலப்படுத்தப்பட்டுள்ளது.
- தேர்தல்களில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களுக்கும் சமமானதும் நியாயமானதுமான வாய்ப்புகள் உள்ளன.
- ஒரு சுயாதீன நிறுவனம் என்ற வகையில் தேர்தல் ஆணைக்குழு மீதான பிரசைகளின் நம்பிக்கை நீடுறுதியானதாக உள்ளது.
- பயன்கூர் அடிப்படையில் இயங்குவதற்கு தேர்தல் ஆணைக்குழு அனைத்து வளங்களினாலும் (மனித, பௌதிக, நிதி) பரிபூரணமடைந்துள்ளது.
- தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலர்கள் தமது பணிகளை பயனுறுதிவாய்ந்த விதத்தில் நிறைவேற்றுவதற்கான நிபுணத்துவத்தைக் பெற்றுள்ளனர்.
- தேர்தல் ஆணைக்குழு நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பயனுறுதிவாய்ந்த தேர்தல் முகாமைத்துவ நிறுவனமொன்றாக இயங்குகிறது.

நோக்கங்கள்

- சிறப்பாகத் திட்டமிடப்பட்ட வாக்காளர்களை அறிவுறுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குசெய்தல்.
- வயதுவந்தோருக்கான வாக்குரிமையின் முக்கியத்துவம் குறித்து பாடசாலை மாணவர்களை அறிவுறுத்துதல்.
- தேர்தல் முறைகளும் தேர்தல் நடவடிக்கைமுறைகளும் பற்றிய பாடத்தை ஊக்குவிப்பதற்காக பல்கலைக்கழகங்களை தொடர்புபடுத்திக்கொள்ளல்.
- பிரதிநிதித்துவ சனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக பெண்களையும் இளைஞர்களையும் அணிதிரட்டுதல்.
- வாக்குரிமையும் உரிய முறையில் வாக்கு அடையாளமிடலும் பற்றி வெகுசனத் தொடர்புசாதனங்கள் ஊடாக வாக்காளர்களை அறிவுறுத்துதல்.
- சட்ட ஏற்பாடுகளுக்கமைய தேருநர் இடாப்பு மீளாய்வை மேற்கொள்ளலும் இற்றைப்படுத்தலும்.
- தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் செயற்பாடுகளை அவதானிப்பதற்காக பிரசைகளுக்குத் தேவையான வசதிகளை அளித்தல்.
- தேர்தல்களை நடத்துதல்.
- தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கு வசதியளித்தல்.
- அரசியற் கட்சிகளை ஏற்றங்கீகரித்தல்.
- சட்ட மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்காக கொள்கைவகுப்பாளர்களுக்கு ஆலோசனைகளை வழங்குதல்.
- புதிய சட்ட மறுசீரமைப்புகள் குறித்து வாக்காளர்களை அறிவுறுத்துதல்.
- போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவருக்கும் சம வாய்ப்பளித்தல்.

- தேர்தல் ஆணைக்குழு பற்றிய நம்பகத்தன்மையைப் பேணுதல்.
- தேர்தல் ஆணைக்குழுவின் மூலோபாயத் திட்டத்தை அமுல்படுத்துவதற்குப் போதுமானளவு வளங்களை வழங்குதல்.
- தேர்தல் ஆணைக்குழுவின் மூலோபாயங்களை அமுல்படுத்துதல்.
- தேர்தல் ஆணைக்குழுவின் இயல்திறனை விருத்திசெய்தல்.
- நடைமுறையிலுள்ள தேர்தல் முகாமைத்துவப் பொறிமுறையை இலக்கமிடல்.
- மேம்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவின் பணியாட்குழுவினர் அனைவருக்கும் பயிற்சியளித்தல்.
- பங்கீடுபாட்டாளர்கள் அனைவரையும் நவீன தொழில்நுட்பத்துடன் இயைபுபடுத்துதல்.

5. 1931 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை தேர்தல் ஆணைக்குழுவினால் அமுல்படுத்தப்படும் சட்டங்கள்

- **சனாதிபதித் தேர்தல்கள்**

-1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டம்
-1988 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் - 1988 மே 24
-1988 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் - 1988 அக்டோபர் 21
-2004 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் - 2004 நவெம்பர் 18
-2011 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் - 2011 மே 25

- **பாராளுமன்றத் தேர்தல்கள்**

- 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம், 1981 சனவரி 22
- 1988 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் - 1988 மே 24
- 1988 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் - 1988 ஆகஸ்ட் 16
- 1988 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் -1988 அக்டோபர் 21
- 1988 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் -1988 திசெம்பர் 17
- 2004 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் - 2004 நவெம்பர் 18
- 2009 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் - 2009 அக்டோபர் 16
- 2011 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் - 2011 மே 25

- **மாகாண சபைகள் தேர்தல்கள்**

- 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம் -1988 சனவரி 27
- 1988 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் - 1988 அக்டோபர் 21

- 1988 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் - 1988 திசெம்பர் 17
- 1990 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் - 1990 யூலை 06
- 1993 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் - 1993 பெப்புருவரி 18
- 2004 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் - 2004 பெப்புருவரி 03
- 2004 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் - 2004 நவெம்பர் 18
- 2011 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் - 2011 மே 25
- 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் - 2017 செப்டெம்பர் 22

- **உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள்**

  - உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டம் (262 ஆம் அத்தியாயம்)
  - 1990 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
  - 1990 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம்
  - 2002 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம்
  - 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் - 2017 ஆகஸ்ட் 31
  - 2017 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
  - 2017 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம்

- **மக்கள் தீர்ப்பு**

  - 1981 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, மக்கள் தீர்ப்புச் சட்டம் - 1981 பெப்புருவரி 27
  - 1988 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, மக்கள் தீர்ப்பு (திருத்தச்) சட்டம் - 1988 மே 24

- **தேருநர்களைப் பதிவுசெய்தல்**


  - 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டம் - 1980 அக்டோபர் 24
  - 2017 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவுசெய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் - 2017 யூலை 21
  - 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டம் - 2021 அக்டோபர் 13

- **2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டம்.**

- **2023 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்.**

6. தேர்தல் ஆணைக்குழுவின் நிருவாகக் கட்டமைப்பு

தேர்தல் ஆணைக்குழு, தலைமை அலுவலகத்தையும் 26 மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களையும் உள்ளடக்கியதாகும். அதற்கமைய தமது நியதிச்சட்ட, நிர்வாக மற்றும் அபிவிருத்தி அலுவல்களைத் திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் சம்பந்தமாக பிரதான விடயங்களை உள்ளடக்குகின்றவாறு கிளைகள்/பிரிவுகள் தாபிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிளையினாலும் பிரிவினாலும் ஆற்றப்பட வேண்டிய பணிகள் இந்நிர்வாகக் கட்டமைப்பில் அடங்கியுள்ளது.



7. தேர்தல் ஆணைக்குழுவின் கிளைகளும் அவற்றின் செயற்பொறுப்பும்

I. ஆணைக்குழுவின் செயலாளர் பிரிவு

- தேர்தல் ஆணைக்குழுவின் நிர்வாகப் பணிகள்.
- நியதிச்சட்டப் பணிகளை ஒருங்கிணைப்புச் செய்தலும் நெறிப்படுத்தலும்.
- தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களின் தாபன அலுவல்கள்.
- தேர்தல் ஆணைக்குழுவின் பணியாட்குழு அங்கத்தவர்களின் ஆட்சேர்ப்பு, இடமாற்றல், விடுவிப்பு. தேர்தல் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்திலும் மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களிலும் பணிபுரியும் நாடளாவிய சேவைகளைச் சேர்ந்த 65 பதவிநிலை அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றல், ஓய்வுறுத்தல் தொடர்பான அலுவல்கள்.
- ஆணைக்குழுக் கூட்டங்களும் அறிக்கைகளைத் தயாரித்தலும்.
- பதவிநிலை அலுவலர்களின் தாபன அலுவல்கள் உள்ளிட்ட மனித வள அபிவிருத்தி அலுவல்கள்.
- பாராளுமன்றம், சனாதிபதி செயலகம், பிரதம அமைச்சர் அலுவலகம் ஆகிய நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு அலுவல்கள்.
- சுயாதீன ஆணைக்குழுக்கள், அமைச்சுக்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு அலுவல்கள்.
- பதவிநிலை அலுவலர்களின் வருடாந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகை தொடர்பான அலுவல்கள்.
- ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்படுகின்ற தேர்தல்களை சுதந்திரமாகவும் நீதியாகவும் நடத்துவதற்கு அவசியமான கொள்கைத் தீர்மானங்களை எடுத்தல் அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல்களையும் வழங்குதல் மற்றும் அதன்படி செயலாற்றுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்.

II. தேசிய தேர்தல்கள் கிளை

- தேர்தல் ஆணைக்குழு மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின் கீழ் சனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் மற்றும் மக்கள் தீர்ப்புக்களை நடத்துவதற்கான அலுவல்களை நெறிப்படுத்துதல்.
- 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்திற்கமைய வருடாந்த தேருநர் இடாப்பு மீளாய்வும் குறைநிரப்பு தேருநர் இடாப்புக்களைத் தயாரிப்பதற்கு உரிய அனைத்து அலுவல்களையும் மேற்கொள்ளலும், இலங்கைச் சனநாய சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 98 (8) ஆம் உறுப்புரையின் வண்ணம் ஒவ்வொரு தேருநர் இடாப்பினை அத்தாட்சிப்படுத்திய பின்னர் அதற்கியைய பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கையைக் கணித்தலும் தேருநர் இடாப்புக்கள் சார்ந்த வேறு கருமங்களை ஒழுங்கு செய்தலும் அமுல்படுத்தலும்.
- பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பான பூர்வாங்க அலுவல்கள்.
- தேருநர் இடாப்பு மற்றும் தேர்தல் செயன்முறை தொடர்பாக பிரசைகளை அறிவுறுத்துதலும், வாக்காளர் தினத்துடன் தொடர்புடைய அலுவல்களை ஒருங்கிணைப்புச் செய்தலும்.

- வலிமையிழந்தோர் சமூகத்தை தேர்தல் செயற்பாடுகளில் முனைப்புடன் தொடர்புபடுத்திக் கொள்வதற்கான அலுவல்களும் விளிம்புநிலை இனக்குழுமங்களின் பதிவு தொடர்பான அலுவல்களும்.

II. I. தகவல் தொழில்நுட்பப் பிரிவு

- தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நிறுவனத்தின் அலுவல்களை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கும், பங்கீடுபாட்டாளர்களுக்குத் தேவைப்படும் தகவல் தொழில்நுட்ப சேவைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும், தகவல் தொழில்நுட்பக் கற்கை, திட்டமிடல், கருத்திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அனுமதிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பக் கருத்திட்டங்களை நிறுவுதலும் பேணி வருதலும்.
- புதிய தொழில்நுட்ப காப்பு முறைகளைக் கையாண்டு தேர்தல் ஆணைக்குழுவுக்கு உரிய தகவல் தொழில்நுட்ப முறைமைகளையும் துணையுறுப்புக்களையும் பாதுகாத்துப் பேணி வருதல் மற்றும் கணக்காய்வு செய்தல்.
- நவீன தொழில்நுட்ப பாதுகாப்பு முறைகளைக் கையாண்டு தேர்தல் ஆணைக்குழுவிற்குரிய தகவல் முறைமைகளையும் துணையுறுப்புக்களையும் பேணிவருதல்.
- தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் நிர்வாகமும், தகவல்களை மும்மொழிகளிலும் இற்றைப்படுத்துதலும்.
- தேர்தல் ஆணைக்குழுவின் இ-சேவை முறைமையை முன்னேற்றலும் பொது மக்கள் மற்றும் பல்வேறு பங்கீடுபாட்டாளர்களுக்கு மிகவும் வசதியானதாக சேவையினை வழங்குவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதலும்.
- மையப்படுத்திய தேருநர் இடாப்புத் தரவு முறைமையை முன்னேற்றலும் பேணி வருதலும்.
- தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் நிர்வாகமும், தகவல்களை இற்றைப்படுத்தலும், இ-சேவைகளை வழங்குதலும்.
- தரவு மையத்தையும் அனர்த்த முகாமைத்துவ மையத்தையும் பேணி வருதல்.
- கணினி வலையமைப்பையும் VPN வலையமைப்பையும் பேணி வருதல்.
- தகவல் தொழில்நுட்ப அலுவல்களை உரியவாறு நிறைவேற்றிக்கொள்வதற்காக தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலர்களைப் பயிற்றுவித்தல்.
- சமூக வலையமைப்புத் தகவல் முறைமைகளைப் பேணி வருதல்.
- உத்தியோகபூர்வ மின்னஞ்சல் (e-mail) வலையமைப்பைப் பேணி வருதல்.
- தேர்தல் கல்வி நுழைபாதையை அறிமுகப்படுத்துதலும் பல்லூடகம் மூலம் தேர்தல் கல்விப் பங்கேற்பை முன்னேற்றுதலும்.
- தகவல் தொழில்நுட்பப் பாவனைக்கான வழிகாட்டிநெறிக் கோவையில் அடங்கியுள்ள விடயங்கள் குறித்து அலுவலர்களுக்கு அறிவுறுத்தலும், சம்பந்தப்பட்ட தகவல்களை இற்றைப்படுத்தலும்.
- தேர்தல் பெறுபேறுகளைத் தயாரிக்கும் அலுவல்களுக்கு தொழில்நுட்பத்தை ஈடுபடுத்திக்கொள்ளல்.

III. உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கிளை

- உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்களை நடத்துவதுடன் தொடர்புடைய கருமங்களும் அறிக்கைகளைத் தயாரித்தலும்.
- மாகாண சபைகள் தேர்தல்களை நடத்துவதுடன் தொடர்புடைய கருமங்களும் அறிக்கைகளைத் தயாரித்தலும்.

- உள்ளூர் அதிகாரசபை உறுப்பினர் பதவி வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பான ஒருங்கிணைப்பு கருமங்களும், மாகாண சபை உறுப்பினர் பதவி வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பான கருமங்களும்.
- உள்ளூர் அதிகாரசபை வட்டாரங்களின் எல்லை நிர்ணயம் தொடர்பான அலுவல்களை ஒருங்கிணைப்புச் செய்தல்.
- உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் சட்டத்தில் கொண்டுவரப்படும் திருத்தங்கள் தொடர்பான அலுவல்கள்.
- வெளிநாட்டு தேர்தல் முகாமைத்துவ நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு அலுவல்கள்.
- உள்நாட்டு தேர்தல் கண்காணிப்பு ஒழுங்கமைப்புகளுடனான ஒருங்கிணைப்பு அலுவல்கள்.
- அரச சார்பற்ற ஒழுங்கமைப்புகளுடனான ஒருங்கிணைப்பு அலுவல்கள்.
- இளைஞர் பாராளுமன்ற நிகழ்ச்சித்திட்டமும் விளிம்புநிலை இனக்குழுமங்களை தேர்தல் செயன்முறையுடன் செயலூக்கத்துடன் ஈடுபடுத்திக் கொள்வதற்குரிய கருமங்களும்.

III. I. விசேட கருத்திட்டப் பிரிவு

- அரச சார்பற்ற ஒழுங்கமைப்புகளுடனான ஒருங்கிணைப்பு.
- மக்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்களுக்கான மகளிர் பிரதிநிதித்துவத்தைப் பலப்படுத்துதல் தொடர்பான விழிப்புணர்வூட்டல்.
- இளம் பங்கீடுபாட்டாளர் குழுக்களுடனான ஒருங்கிணைப்பும் விழிப்புணர்வூட்டலும்.
- வலிமையிழந்த பங்கீடுபாட்டாளர் குழுக்களுடனான ஒருங்கிணைப்பும் விழிப்புணர்வூட்டலும்.
- மக்கள் பங்கீடுபாட்டாளர் குழுக்களுடனான ஒருங்கிணைப்பும் விழிப்புணர்வூட்டலும்.
- சமூக ஊடகங்களுடனான ஒருங்கிணைப்பும் அது தொடர்பான அலுவல்களும்.
- தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஏற்புடைய சர்வதேச தின நினைவு வைபவங்களை ஒழுங்குசெய்தல்.

IV. நிர்வாகக் கிளை

- தேர்தல் ஆணைக்குழுவின் பௌதீக வள முகாமைத்துவம்.
- வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைத் தயாரித்தல்.
- அலுவலர்களின் வெளிநாட்டு உத்தியோகபூர்வ கருத்தரங்குகளும் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் தொடர்பான அலுவல்கள்.
- ஆக்கபூர்வமான அணுகுமுறையொன்றின் ஊடாக திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக அறிவு, திறன் மற்றும் உளப்பாங்கு விருத்திக்கான திட்டங்களைத் தயாரித்தல்.
- பணியாட்குழுவின் உள்நாட்டுப் பயிற்சிகளும் கொள்திறன் விருத்தி தொடர்பான அலுவல்களும்.
- மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களின் நலனோம்புகைக்கான அலுவல்களை மேற்பார்வை செய்தலும் ஒருங்கிணைப்பும்.
- பதவிநிலை அலுவலர்களின் கலந்துரையாடல்களை ஒழுங்குசெய்தல் தொடர்பான அலுவல்களும்.
- கட்டிட நிர்மாண மற்றும் புதுப்பித்தல் அலுவல்கள்.
- பால்நிலை சமத்துவத்தை அமுல்படுத்தல் மற்றும் தேர்தல் செயன்முறையின்போது மகளிர் பிரதிநிதித்துவத்தைப் பலப்படுத்துவதற்குரிய கருமங்களும்

- நாளாந்த அஞ்சலுக்குரிய கருமங்கள்
- மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களின் பதவிநிலை அலுவலர்களுக்கு உரிய நிர்வாக அலுவல்களை ஒருங்கிணைத்தல்
- தேர்தல் ஆணைக்குழுவின் மூலோபாயத் திட்டத்திற்குரிய நிர்வாகப் பிரிவுக்கு ஒப்படைக்கப்படும் கருமங்களை நிறைவேற்றுதல்.

IV. I. தாபனப் பிரிவு

- தேர்தல் ஆணைக்குழுவின் ஆலோசனைக்கமைய பதவிநிலை சாராத அனைத்து அலுவலர்களதும் ஊழியர்களதும் பெயர்வழிக் கோப்புக்களை இற்றைப்படுத்தி பேணி வருதல்.
- பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்பு சேவைகள் தொடர்பான அலுவல்கள்.
- அலுவலக ஊழியர்களின் நலனோம்புகை தொடர்பான அலுவல்கள்.
- தேர்தல் ஆணைக்குழுவின் ஆலோசனைக்கமைய பதவிநிலை சாராத பணியாட்குழுவினரின் ஆட்சேர்ப்பு, இடமாற்றல், ஓய்வுறுத்தல் தொடர்பான அலுவல்கள்.
- லீவு முகாமைத்துவம்.

IV. II. போக்குவரத்துப் பிரிவு

- ஆணைக்குழுவின் வாகனங்களின் நிர்வகிப்பு, பராமரிப்பு மற்றும் கடமை அலுவல்களுக்கான போக்குவரத்து வசதியளித்தல்.

IV. III. பெறுகை மற்றும் சொத்து முகாமைத்துவப் பிரிவு

- பெறுகை அலுவல்கள்.
- களஞ்சியசாலை முகாமைத்துவம்.
- வருடாந்த பொருளிருப்புக் கணக்கெடுப்பு.
- சொத்து முகாமைத்துவம்.
- தொடர்பாடல் கருவிகள் உள்ளிட்ட இயந்திரங்களதும் உபகரணங்களதும் பராமரிப்பு.
- தொலைபேசி, மின், நீர் சிட்டைகளை செலுத்தித் தீர்த்தலும் ஏனைய தொடர்புடைய அலுவல்களும்.

V. நிதிக் கிளை

- தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களின் நிதிசார் அலுவல்களை மேற்பார்வை செய்தலும், கணக்குகள் தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குதலும்.
- வருமானங்கள் சேகரிப்பும் கணக்குப் பதிதலும்.
- அனைத்து கொடுப்பனவுசார் அலுவல்களும் அவற்றின் கணக்கு வைத்தலும்.
- உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகளை வழிநடாத்தல்.
- வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல்.
- அரசாங்க அலுவலர்களின் முற்பண "B" கணக்கு தொடர்பான அலுவல்கள்.
- பொது நிர்வாகமும் தேர்தல்களுக்கான நிதிஒதுக்கீடும் பணி முற்பணக் கட்டுப்பாடும்.
- தேர்தல் செலவுகளை மதிப்பீடுசெய்தல்/செலவு அறிக்கைகளைத் தயாரித்தல்.

- வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கு/ இறுதி கணக்குகளைத் தயாரிக்கும் அலுவல்கள்
- பொது வைப்புக் கணக்குகள் தொடர்பான அலுவல்கள்.
- நிலையான சொத்துக்களின் நிர்வாகம் தொடர்பான அலுவல்களும் கணக்கு வைத்தலும்.
- சம்பளக் கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம் (Payroll) தொடர்பான அலுவல்கள்.
- சிகாஸ் (CIGAS) நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான அலுவல்கள்.
- ITMS நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான அலுவல்கள்.
- EMS நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான அலுவல்கள்.
- கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல், வரவுசெலவுத் திட்ட குழுநிலை விவாதத்திற்குரிய அலுவல்கள் மற்றும் அரச கணக்குகள் குழு தொடர்பான அலுவல்கள்.
- கணக்கு மற்றும் நிதிக் கட்டுப்பாட்டு அலுவல்கள் தொடர்பாக பணியாட் குழுவினரைப் பயிற்றுவித்தல்.
- தேர்தல்கள் நடைபெறும் காலப்பகுதிகளில் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் கொடுப்பனவுகளை மீள்நிரப்பல் செய்தல்

VI. சட்டம், விசாரணை மற்றும் திட்டமிடல் கிளை

- தேர்தல் ஆணைக்குழுவின் சட்ட அலுவல்கள் தொடர்பில் செயலாற்றுதல்.
- தேர்தல் சட்டவாக்கப் பணிகளின் ஒருங்கிணைப்பு.
- அரசியற் கட்சிகளின் பதிவு மற்றும் அதன் மேற்பார்வை தொடர்பான அலுவல்கள்.
- அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் பட்டியலை வருடாந்தம் தயாரித்தலும், அத்தகைய கட்சிகளுக்கு ஏற்புடைய திருத்தங்களை இற்றைப்படுத்தலும்.
- அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் உத்தியோகத்தர் சபையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையை வருடாந்தம் பெற்றுக்கொள்ளலும் வருடாந்த கணக்கறிக்கைகளை பெற்றுக்கொள்ளலும்.
- கட்சிச் செயலாளர்களுடனான கூட்டங்களை நடத்துதல் தொடர்பான அலுவல்களை ஒழுங்குசெய்தல்.
- அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளுக்கு ஏற்புடைய கட்சிச் சின்னங்களையும் கட்சிகளுக்கு குறித்தொதுக்கப்பட்டில்லாத சின்னங்களையும் சட்ட ஏற்பாடுகளுக்கமைய வர்த்தமானியில் பிரசுரித்தல்.
- தேர்தல் பிணக்கு முகாமைத்துவம் தொடர்பான அலுவல்கள்.
- 2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தை அமுல்படுத்தல்
- இளைஞர் சமூகத்தை தேர்தல் செயன்முறையுடன் செயலூக்கத்துடன் தொடர்புபடுத்திக்கொள்வதற்கு உரிய பணிகள்.

- தகவலுக்கான உரிமைச் சட்டம் தொடர்பான அலுவல்கள்.
- தேருநர் பதிவு தொடர்பாக ஏற்படக்கூடிய பிரச்சினைகள் தொடர்பாக அவதானிப்புகளை சமர்ப்பித்தல் மற்றும் அரசியலமைப்பின் 89 (ஈ) உறுப்புரையின் பிரகாரம் வாக்குரிமையை உறுதிப்படுத்துதல்.
- சமூக ஊடக செயற்பாடுகள்
- மூலோபாயத் திட்டத்தைத் தயாரித்தலும், முன்னேற்ற மீளாய்வு நடவடிக்கைகளும்.
- வருடாந்த வரவுசெலவுத்திட்ட முன்னேற்ற அறிக்கையைத் தயாரித்தல்.
- தேர்தல் ஆணைக்குழுவின் வருடாந்த செயல் திட்டத்தைத் தயாரித்தலும், அதன் முன்னேற்ற மீளாய்வு அலுவல்களும்.
- ஆணைக்குழுவின் பணிகளுக்கு ஏற்புடைய ஆராய்ச்சிகளை நடத்துதலும் மேற்பார்வை செய்தலும் தகவல்களையும் தரவுகளையும் முகாமைசெய்தலும்.
- அறிவு முகாமைத்துவக் கூறு, சுவடிக்கூடம் மற்றும் வெளியீடுகளை வெளியிடுவதற்கு உரிய பணிகளும் வெளியீடுகளை வெளியிடும் விற்பனைக் கருமபீடத்தை நடத்திச் செல்லலும்.
- தேர்தல் ஆணைக்குழுவின் வெளியீடுகளை/பருவ சஞ்சிகைகளை வெளியிடுதல் தொடர்பான அலுவல்கள்.
- ஊடக ஒருங்கிணைப்பு அலுவல்கள்.

VII. உள்ளக கணக்காய்வுக் கிளை

- தேர்தல் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தினதும் மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களினதும் கவன ஈர்ப்புப் பகுதிகளை இனங்காணலும், அத்தகைய கவன ஈர்ப்புப் பகுதிகளுக்கு உரிய உள்ளக கணக்காய்வை மேற்கொள்ளலும், அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பித்தலும்.
- உள்ளக கணக்காய்வு மற்றும் வெளியக கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களை சீர்செய்தல் குறித்து கவனம் செலுத்தலும், தொடராய்வை மேற்கொள்ளலும்.
- தேர்தல் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தினதும் மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களினதும் நிதிசார் அலுவல்கள் சம்பந்தமாகவும், நடப்பிலுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைகளை மதிப்பீடுசெய்தலும், அதன் மூலம் எழக்கூடிய குறைபாடுகளையும் பலவீனங்களையும் தடுத்தலும்.
- உள்ளக பரிசோதிப்பின் முறையாந்தன்மையையும் அளவறிதல் சம்பந்தமான தொடராய்வையும் சுயாதீன மதிப்பீட்டையும் மேற்கொண்டு, மிகவும் பயனுறு வாய்ந்த விதத்தில் பேணி அரச வளங்களை சிறப்பாக முகாமை செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல்.

- தேர்தல் காலப்பகுதியில் தேர்தல் சட்டமீறல்கள் குறித்து விசாரணைசெய்தல் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவினால் ஒப்படைக்கப்படும் விசேட கடமைகள்.
- தேர்தல் காலப்பகுதியில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு மையத்துடன் இணைந்து விசாரணைகளை மேற்கொள்ளல்.

VIII. மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்கள்

- வருடாந்த தேருநர் இடாப்பு மீளாய்வு தொடர்பான மாவட்ட மட்ட அலுவல்களை மேற்கொள்ளல்.
- தேருநர் இடாப்பு பிரித்தெடுப்புக்களை விநியோகித்தல்.
- தேர்தலை நடத்துதல் தொடர்பான அலுவல்களை ஏற்பாடுசெய்தலும், வாக்கெடுப்பை நடத்துதல் தொடர்பான அலுவல்களும்.
- உள்ளூர் அதிகாரசபை உறுப்பினர் பதவி வெற்றிடங்களை நிரப்புதலுடன் தொடர்பான அலுவல்கள்.
- தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகளை/ தகவல்களை வழங்குதல்.
- சனநாயகம்/ சர்வசன வாக்குரிமை/ மாணவர் மற்றும் இளைஞர் பாராளுமன்றம்/ மகளிர், இளைஞர், வலிமையிழந்த குழுக்கள் தொடர்பான விழிப்புணர்வூட்டல்களை ஒழுங்குசெய்தலும், தேவைப்படும் சந்தர்ப்பங்களில் வேறு நிறுவனங்களுக்கு அதற்கான வளப் பங்களிப்பு வழங்குதலும், மூலோபாயத் திட்டத்திற்குரிய மாவட்ட செயற்பாடுகளை அமுலுக்கிடலும்.
- நீதிமன்ற உத்தரவின் பேரில் சட்டமுறை நடவடிக்கைகளுக்குத் தேவைப்படும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல்.
- வழக்கு நடவடிக்கைகள் தொடர்பாக தலைமை அலுவலகத்திற்கு தகவல்களை வழங்குதல்.
- மாவட்டத்தில் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் அலுவலராக செயற்படுதல்.

8. தேர்தல் ஆணைக்குழுவின் பணியாட்குழு

தேர்தல் ஆணைக்குழுவின் முழு பணியாட்குழு, கீழ்க்காணும் பதவிகளை வகிக்கின்ற அலுவலர்களைக் கொண்டமைந்தது. தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் உள்ளிட்ட ஐந்து(5) உறுப்பினர்கள் தவிர, தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், செயலாளர் உள்ளிட்ட தேர்தல் ஆணைக்குழுவின் பணியாட்குழு, இலங்கை நிர்வாக சேவை (இ.நி.சே.) அலுவலர்கள், இலங்கை கணக்காளர் சேவை (இ.க.சே.) அலுவலர்கள், இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை (இ.த.தொ.தொ.சே.) அலுவலர்கள், இலங்கை திட்டமிடல் சேவை (இ.தி.சே.) அலுவலர்கள், பணிப்பாளர் (சட்டம்) மற்றும் சட்ட அலுவலர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், இணைப்புச் செயலாளர், அரச முகாமைத்துவ சேவையின் (அ.மு.சே.) அதியுயர் தர அலுவலர்கள் ஆகிய பதவிநிலை அலுவலர்களும், பதவிநிலை அல்லாத பணியாட்குழுவில் அரச முகாமைத்துவ சேவை அலுவலர்கள், அபிவிருத்தி அலுவலர் சேவை அலுவலர்கள், தகவல் தொழில்நுட்ப உதவி அலுவலர்கள், ஆவண உதவியாளர்கள், அலுவலகப் பணியாளர்கள் மற்றும் சாரதிகள் அடங்குவர். அதற்கமைய 2024.12.31 அன்றுள்ளவாறான தேர்தல் ஆணணக்குழுவின் முழு பணியாட்குழுவின் இணைப்பாக்கம் பின்வருமாறு :

பதவி	**அனுமதித்த எண்ணிக்கை**	**2024.12.31 அன்றுள்ளவாறு பணியில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கை**
பதவிநிலை அலுவலர் (இ.நி.சே., இ.க.சே., இ.த.தொ.தொ.சே., இ.தி.சே., பணிப்பாளர் (சட்டம்), சட்ட அலுவலர், இணைப்புச் செயலாளர், மொழிபெயர்ப்பாளர், அ.மு.சே. அதியுயர் தர அலுவலர் உள்ளிட்ட)	77	60
முகாமைத்துவ சேவை அலுவலர்	390	365
அபிவிருத்தி அலுவலர்	67	57
இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர்	14	10
ஆவண உதவியாளர்	51	38
வரவேற்பாளர்	01	01
தொழில்நுட்ப அலுவலர் (சிவில்)	01	-
அலுவலகப் பணியாளர் சேவை	126	101
அலுவலகப் பணியாளர் சேவை - அ.நி.சு. 25/2014	31	31
சாரதி	52	48
வாகன சுத்திகரிப்பாளர்	01	-
மின் தொழில்நுட்பவலர்	01	-
குழாய்நீர் பொருத்து தொழில்நுட்பவலர்	01	-
மொத்தம்	**813**	**711**

பகுதி II

முன்னேற்றம் 2024

1. 2022 – 2025 பங்கேற்பு மூலோபாயத் திட்டம்

தேர்தல் ஆணைக்குழுவின் 2022-2025 காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்ட பங்கேற்பு மூலோபாயத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள செயற்பாடுகளை வருடாந்த செயல் திட்டத்தில் உள்ளடக்கி அமுல்படுத்தி வருகிறது.

2. வருடாந்த செயல் திட்டம்

தேர்தல் ஆணைக்குழுவில் ஒவ்வொரு பிரிவினாலும் அமுல்படுத்தப்படும் செயற்பாடுகள் அடங்கிய வருடாந்த செயல் திட்டத்தை தயாரித்தல், வருடாந்த செயல்திட்டம் பற்றி காலாண்டு ரீதியில் முன்னேற்ற மீளாய்வை மேற்கொண்டு முன்னேற்ற அறிக்கைகளை தயாரிப்பதுடன் அவ்வறிக்கைகள் நிதி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. இவ்வாண்டிலும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்தி செயல் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள செயற்பாடுகளின் முன்னேற்றத்தை ஆராய்வதற்கும் உரிய இலக்குகளை அடைந்து கொள்வதற்கும் அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

3. தேர்தல் ஆணைக்குழுவின் கூட்டங்கள்

தேர்தல் ஆணைக்குழுவிற்கு உரித்தாக்கப்பட்ட பணிகளும் கடமைகளும் தொடர்பில் சமர்ப்பிக்கப்படும் ஆணைக்குழுப் பத்திரங்கள் குறித்து கலந்துரையாடுதல், முடிவுகளை எடுத்தல் மற்றும் வேறு சிபார்சுகளின் அடிப்படையில் ஆணைக்குழுக் கூட்டங்கள் தேவைக்கேற்ப நடாத்தப்படுகின்றன. இதன் அடிப்படையில், 2024 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டினுள் 11 கூட்ட அமர்வுகளும், இரண்டாவது காலாண்டில் 10 கூட்ட அமர்வுகளும், மூன்றாவது காலாண்டில் 16 கூட்ட அமர்வுகளும், நான்காவது காலாண்டில் 11 கூட்ட அமர்வுகளும் என்ற அடிப்படையில் 2024 ஆம் ஆண்டில் 48 கூட்ட அமர்வுகள் நடைபெற்றுள்ளன.

3.1 ஆணைக்குழுவுடன் நடைபெற்ற விசேட கலந்துரையாடல்கள்

முன்னால் தேர்தல் ஆணைக்குழுவினால் ஒத்திவைக்கப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளுக்கு அவசியமான வெளிநிலை சட்டத்தரணிகளின் உதவியைப் பெற்றக்கொள்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்துடனும் வெளிநிலை சட்டத்தரணிகளுடனும் விசேட கலந்துரையாடல்களை பல்வேறு சந்தர்ப்பங்களில் மேற்கொள்ள வேண்டியிருந்தது. அதேபோல் மேற்குறிப்பிட்ட வழக்குகளுக்குரிய வழங்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் தேர்தலை நடாத்துவதற்கு உரிய தரப்புகளுடன் அவ்வப்போது விசேட கலந்துரையாடல்களை நடத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

இதனிடையே சனாதிபதித் தேர்தலை உரிய காலப்பகுதியினுள் நடத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட வேண்டியிருந்ததன் காரணமாக அது தொடர்பான விசேட கூட்டங்களும் கலந்துரையாடல்களும் ஆணைக்குழுவினால் ஒழுங்குசெய்யப்பட்டன. இங்கு அரசியல் கட்சிகள், ஊடக நிறுவனங்கள் மற்றும் வேட்பாளர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடல்கள் தவிர பெயர் குறித்த நியமனங்கள் கையேற்றல் உள்ளிட்ட தேர்தல் செயன்முறையை உரிய முறையில் முன்னெடுத்து செல்வதற்கு அவசியமான தரப்புகளுடன் கலந்துரையாடல்கள் நடைபெற்றன. ஆணைக்குழுவின் விசேட கூட்டங்களை நடாத்துவதற்கும் டவடிக்கையெடுக்கப்பட்டது.

சனாதிபதித் தேர்தல் முடிவடைந்தவுடன் பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவதற்கு நேரிட்டதன் காரணமாக அதற்கும் ஆணைக்குழுவினால் கூட்டங்களும் கலந்துரையாடல்களும் கருத்தரங்குகளும் தேவைக்கேற்ப ஒழுங்கு செய்யப்பட்டன. உரியவாறு, முறையாக சுதந்திரமானதும் நீதியானதுமான இரு தேர்தல்களை மிகவும் குறுகிய ஒரு காலப்பகுதியினுள் நடாத்துவதற்கு முடிந்தமைக்கு ஆணைக்குழு உரிய தரப்புகளுடன் நடாத்திய கலந்துரையாடல்களும் கூட்டங்களும் பெரிதும் தூண்டுதலளித்தன.

ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுத் தலைவர், ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் வதிவிட பிரதிநிதி, பிரான்ஸ் தூதுவர், பிரித்தானிய

உயர்ஸ்தானிகர், ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட இணைப்பாளர், அமெரிக்க தூதுவர், ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழு, பொதுநலவாய தேர்தல் கண்காணிப்புக் குழு, நெதர்லாந்து தூதுவர், ரஷ்ய கூட்டமைப்பின் தூதுவர்கள் , தூதுக்குழுத் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் இந்த காலகட்டத்திற்குள் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவும் தேர்தல் செயலகத்தில் பல சந்தர்ப்பங்களில் சந்தித்தனர்.

4. தேர்தல் ஆணைக்குழுவினால் தேர்தல் சட்ட மறுசீரமைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்

4.1 தேர்தல் சட்டங்களை திருத்துவதற்கு முன்னால் பிரதம நீதியரசர் ஒருவரான சனாதிபதி சட்டத்தரணி பிரியசாத் டெ.்ப் அவர்கள் தலைமையில் நியமிக்கப்பட்ட குழு அறிக்கையின் சிபார்சுகள் சம்பந்தமாக தேர்தல் ஆணைக்குழுவின் அவதானிப்புக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

4.2 பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் அவர்களினால் 2022 யூலை மாதம் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தில் திருத்தம் கொண்டுவருவதற்கான சட்டமூலம் சம்பந்தமாக தேர்தல் ஆணைக்குழுவின் கருத்துக்களும் யோசனைகளும் இலங்கை பாராளுமன்ற சட்டமூலங்கள் பணியகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

4.3 சட்ட வரையுநரினால் தயாரிக்கப்பட்டு சனாதிபதியின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட தேர்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்திற்கு உரிய தேர்தல் ஆணைக்குழுவின் யோசனைகளையும் சமர்ப்பித்த பின் அது பற்றி கவனம் செலுத்தி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு சனாதிபதியின் செயலாளருக்கு அறிவித்து கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. இருப்பினும், சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட தேர்தல் சட்ட மறுசீரமைப்பிற்கான ஆணைக்குழுவின் சிபார்சுகளை சனாதிபதித் தேர்தல் காரணமாக அமுல்படுத்த முடியவில்லை. ஆகையால், தேர்தல் ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணைகள் குறித்து கவனம் செலுத்தி தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு அவசிய நடவடிக்கையெடுக்குமாறு சனாதிபதியின் செயலாளருக்கு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

4.4 "தோதான குறியீட்டினால்" அடையாளமிடும் நடவடிக்கைகளை அனைத்து தேர்தல்கள் சட்டங்களிலிருந்தும் நீக்குவதற்காக தயாரிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று அனுப்பிவைக்கப்பட்டது. அதற்கான அமைச்சரவை முடிவு 2024.03.26 ஆம் திகதி கிடைக்கப் பெற்றுள்ளது. அச்சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டிருந்த யோசனைகள் சம்பந்தமாக கிடைக்கப் பெற்றிருந்த அமைச்சரவை முடிவுக்குரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு எடுக்கப்பட்டுள்ளன.

4.5 தேர்தல் சட்டங்களில் காணக்கூடிய வைப்புத்தொகைளை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டத் திருத்தமொன்று சம்பந்தமாக தயாரிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனம் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. 2024.04.26 ஆம் திகதி அதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்தது. சட்டமா அதிபரின் விசாரணையின் அடிப்படையில் வைப்புப்பணங்களை ஒழுங்குபடுத்துதல் சம்பந்தமாக நியாயப்படுத்தலொன்று நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

5. தேர்தல்களின் நோக்கத்திற்காக அரசியல் கட்சிகளை ஏற்றங்கீகரித்தல்

ஒரு நாட்டின் ஆட்சிக்கு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கும் அரசியல் சூழலுக்கு ஏற்றவாறு பழக்குவிப்பதற்கும் அரசியல் கட்சி முறை அளப்பரிய பங்காற்றுகின்றது. அதன் காரணமாக பிரதிநிதித்துவ சனநாயகத்தில் அரசியல் கட்சிகளின் வகிபாகம் மிக

முக்கியமானதாகும். ஓர் அரசியல் கட்சி எனும் போது யாதேனுமொரு கொள்கையின் அடிப்படையில் அரச அதிகாரத்தை அடைந்து கொள்வதற்கு முயற்சிக்கும் ஓர் அரசியல் ஒழுங்கமைப்பாகும். இந்த அரசியல் செயல்பாட்டு ஒழுங்கமைப்புகளை தேர்தல்களின் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாக தேர்தல் ஆணைக்குழுவில் பதிவுசெய்வதற்குரிய சட்ட ஏற்பாடுகள், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 7 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள.

அதன்படி யாதேனுமோர் அரசியல் செயல்பாட்டு ஒழுங்கமைப்பு தேர்தல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றாக கணிக்கப்படுவதற்கு எழுத்திலான கோரிக்கையொன்றை சமர்ப்பித்து ஆண்டுதோறும் சனவரி மாதம் 31 ஆம் தேதிக்கு முன்னர் பகிரங்க அறிவித்தலொன்று தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும். சம்பந்தப்பட்ட செயல்பாட்டு ஒழுங்கமைப்பு அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய காலப்பகுதியினுள் தமது கோரிக்கையை சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன் அக்காலப்பகுதியில் யாதேனுமோர் தேர்தலுக்கு நாள் குறிக்கப்பட்டிருப்பின் இச்செயன்முறை அத்தேர்தல் காலப்பகுதி முடிவடைந்து 30 நாட்கள் செல்லும் வரை இடைநிறுத்தப்படும். அதன்படி 2023.01.04 ஆம் திகதி உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2023 பிரகடனம் செய்யப்பட்டமையாலும் அது 2024.01.01 ஆம் திகதியாகும் போது குறித்த பெயர் குறித்த நியமனங்கள் செயல்வலுபெறுவதால் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலை நடத்தி முடித்து 30 நாட்கள் செல்லும் வரை அரசியல் கட்சிகளை ஏற்றங்கீகரிப்பதற்கான விண்ணப்பங்கோரல் இடம்பெறாது.

அரசியல் செயல்பாட்டு ஒழுங்கமைப்பொன்றை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக கணிக்கப்படுவதற்கெனில், தேர்தல் ஆணைக்குழுவிற்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன் அத்தகைய விண்ணப்பப்படிவத்துடன் தேர்தல் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட தேர்தல் சின்னங்களை தாம் தெரிவுசெய்த ஒரு சின்னம், கட்சி யாப்பு, கட்டாயமாகவே ஒரு பெண் பிரதிநிதித்துவம் அல்லது ஒரு பிரதான பதவிக்கு உள்ளடக்கப்பட்ட கட்சி உத்தியோகத்தர் பட்டியல், கட்சியின் கடந்த நான்கு ஆண்டு கால கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக் கூற்றுக்கள், கட்சியின் தற்கால கொள்கைப் பிரகடனம் ஆகிய தகவல்களுடன் இக்கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கும் திகதிக்கு குறைந்தபட்சம் நான்கு ஆண்டு காலத்திற்கு முன்பிருந்து செயலூக்கமுள்ள அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததாக அல்லது கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட இரண்டு வேட்பாளர்களில் குறைந்தபட்சம் ஒரு வேட்பாளர் அக்கோரிக்கைகளை சமர்ப்பித்த திகதிக்கு முன்னர் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றிருப்பதாக அல்லது பல 5 மாகாண சபைகளுக்கு கட்சியினால் பெயர் குறிப்பிடப்பட்ட குறைந்தபட்சம் 5 வேட்பாளர்களும் மூவர் இக்கோரிக்கைகளை சமர்ப்பிக்க திகதிக்கு முன்னர் நடைபெற்ற மாகாண சபைகள் தேர்தலிலும் வெற்றிப்பெற்றுள்ளார். என்ற தகவல்கள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதுடன் அது சம்பந்தமாக ஆணைக்குழு திருப்தியடைதல் வேண்டும்.

பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 7(4)(ஆ) ஆம் பிரிவிற்கமைய தேர்தலின் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் தேர்தல் அடங்கிய பட்டியலொன்றை அதிவிசேட வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்டுள்ளதுடன் 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் நோக்கத்திற்காக அதிவிசேட வர்த்தமானியின் மூலம் ‘‘அரசியல் கட்சிகளுக்கு ஒதுக்கிக்கொடுக்கப்பட்டுள்ள சின்னங்கள்’’, ‘‘அரசியல் கட்சிகளுக்கு ஒதுக்கிக்கொடுக்கப்பட்டில்லாத சின்னங்களும்’’ வெளியிடப்பட்டுள்ளன. அதற்கமைய 2024 சனாதிபதித் தேர்தலுக்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பெயர்களடங்கிய பட்டியலொன்று 2024.07.29 ஆம் திகதிய 2395/08 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்டுள்ளதுடன் 2024.07.29 ஆம் திகதிய 2395/07 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் சின்னங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதேபோல் 2024.11.14 ஆம் திகதி நடைபெற்ற சனாதிபதித் தேர்தலுக்கு 2024.10.04 ஆம் திகதிய 2404/64 ஆம் இலக்க வர்த்தமானிக்கமைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் சின்னங்களும்,

2024.10.04 ஆம் திகதிய 2404/63 ஆம் இலக்க வர்த்தமானியின்படி அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பெயர்களும் முன்வைக்கப்பட்டுள்ளன.

2024.12.31 ஆம் திகதியாகும் போது தேர்தல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பட்டியல் கீழ் காட்டப்பட்டுள்ளது:-

1. அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
2. அகில இலங்கை தமிழர் மகாசபை
3 எங்கள் மக்கள் சக்தி கட்சி
4 புதிய சுதந்திர முன்னணி
5 அருணலு மக்கள் முன்னணி
6 அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்
7 இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
8 ஈரோஸ் ஜனநாயக முன்னணி
9 ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி
10 ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
11 ஐக்கிய குடியரசு முன்னணி
12 ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி
13 ஐக்கிய தேசியக் கட்சி
14 ஐக்கிய தேசிய கூட்டமைப்பு
15 ஜனநாயக ஐக்கிய முன்னணி
16 ஐக்கிய ஜனநாயகக் குரல்
17 ஐக்கிய மக்கள் கட்சி
18 ஐக்கிய இடதுசாரி முன்னணி
19 ஐக்கிய சோசலிச கட்சி
20 ஐக்கிய சமாதான கூட்டமைப்பு
21 மலையக மக்கள் முன்னணி
22 தொழிலாளர் தேசிய முன்னணி
23 மக்கள் விடுதலை முன்னணி
24 மக்கள் போராட்ட முன்னணி
25 மக்கள் சேவகர் கட்சி
26 ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி
27 ஜனசெத பெரமுண
28 தேசிய காங்கிரஸ்
29 தேசிய மக்கள் சக்தி
30 தேசிய மக்கள் கட்சி
31 தேசிய சுதந்திர முன்னணி
32 தேசிய ஜனநாயக முன்னணி
33 ஜாதிக சங்வர்தன பெரமுன
34 தேசிய ஐக்கிய முன்னணி
35 தமிழ் மக்கள் கூட்டணி
36 தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்
37 தமிழ் முற்போக்கு கூட்டணி
38 தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி
39 இரண்டாவது தலைமுறை
40 நாட்டுப்பற்றாளர் மக்கள் சக்தி
41 தேசவிமுக்தி ஜனதா பக்ஷய
42 தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
43 தமிழர் விடுதலைக் கூட்டணி
44 புதிய ஜனநாயக முன்னணி
45 புதிய ஜனநாய கமாக்சிச லெனினிசக் கட்சி
46 நவ லங்கா நிதஹஸ் பக்ஷய
47 நவ சமசமாஜக் கட்சி
48 நவ சிஹல உறுமய
49 சுதந்திர மக்கள் முன்னணி
50 பிவித்துரு ஹெல உறுமய
51 முன்னிலை சோஷலிஸ கட்சி
52 பொது மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி
53 பொதுசன ஐக்கிய முன்னணி
54 ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி
55 ஜனநாயக மக்கள் முன்னணி
56 ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி
57 ஜனநாயக தேசிய கூட்டணி
58 ஜனநாயகக் கட்சி
59 ஜனநாயக இடதுசாரி முன்னணி
60 மஹஜன எக்சத் பெரமுன
61 நல்லாட்சிக்கான தேசிய முன்னணி
62 இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (அரசியற் பிரிவு)
63 இலங்கை மக்கள் கட்சி
64 லிபரல் ஜனநாயக கட்சி
65 ஸ்ரீ லங்கா தொழிலாளர் கட்சி
66 ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன
67 ஸ்ரீ லங்கா மக்கள் கட்சி
68 ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்
69 ஸ்ரீ லங்கா கொமியூனிஸ்ட் கட்சி
70 ஸ்ரீ லங்கா சமூக ஜனநாயகக் கட்சி
71 இலங்கை சோசலிசக் கட்சி
72 ஐக்கிய மக்கள் சக்தி
73 சமநிலம் கட்சி
74 சோசலிச சமத்துவக் கட்சி
75 சர்வஜன அதிகாரம்

செயலாளர் பதவி தொடர்பில் பிரச்சனைகள் நிலவும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள்

76 ஈழவர் ஜனநாயக முன்னணி
77 ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
78 எக்சத் லங்கா பொதுஜன பக்ஷய
79 எக்சத் லங்கா மகாசபா கட்சி
80 லங்கா சமசமாஜக் கட்சி
81 ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி
82 ஸ்ரீ லங்கா முற்போக்கு முன்னணி
83 சிங்களதீப ஜாதிக்க பெரமுன

6. தேருநர்களைப் பதிவு செய்தல்

தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அனைத்துப் பிரஜைகளுக்கும் இனம், மதம், மொழி, சாதி, குலம், கல்வி, சொத்துரிமை, பிறப்பு, பிறந்த இடம், சொத்து செல்வம்,

பாலினம் போன்ற எந்தவொரு விசேட சிறப்புக்களுமின்றி நாட்டின் ஆட்சி அதிகாரத்தில் பங்குகொள்ளும் உரிமை மற்றும் அதற்காக பிரதிநிதிகளைத் தெரிவு செய்துகொள்வதற்கான உரிமையை வாக்குரிமை ஊடாகவே பெற்றுக்கொள்ள முடியும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் மூன்றாவது உறுப்புரைப் பிரகாரம் சர்வஜன வாக்குரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ''இறைமை மக்களுக்குரியதாகவும், பராதீனப்படுத்த முடியாததாகவும், இறைமை என்பது ஆட்சித் தத்துவங்கள், அடிப்படை உரிமைகள், வாக்குரிமை ஆகியவற்றை உள்ளடக்கும்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய நாட்டின் பிரஜைகளுக்கு சனாதிபதித் தேர்தலின்போது, பாராளுமன்றத் தேர்தலின்போது, மக்கள் தீர்ப்பொன்றின்போது, மாகாண சபை தேர்தலின்போது மற்றும் உள்ளூர் அதிகார சபை தேர்தலின்போது தமது வாக்குரிமையைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். மேலே குறிப்பிடப்பட்ட தேர்தல்களின்போது வாக்களிப்பதற்காக பிரஜைகள் குறித்த தேர்தலின்போது செல்லுபடியாகும் தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்ளல் கட்டாயமாகும்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் மற்றும் 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களை பதிவு செய்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களை பதிவு செய்தல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமையவே இந்த அலுவல்கள் தேர்தல் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

6.1. தேருநர் ஒருவராக தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்குத் தேவைப்படும் அடிப்படைத் தகைமைகள்

- இலங்கைப் பிரஜையாக இருத்தல்.
- தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்ளும் திகதியான பெப்ருவரி 01 ஆம் திகதியன்று 18 வயதைப் பூர்த்தி செய்திருத்தல். (அதற்கமைய 2024 ஆண்டிற்கான பிரதான தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்கான தகைமையை 2006.01.31 அல்லது அந்தத் திகதிக்கு முன்னர் பிறந்தவர்கள் மாத்திரமே பெற்றக்கொள்கின்றனர்)
- தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்காக கோரும் முகவரியில் சாதாரணமாக வசித்தல்.

6.2. தேருநர் ஒருவராக தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்கான தகைமையீனங்கள்.

- செயல்வலுப்பெறும் சட்டமொன்றின் கீழ் சித்த சுவாதீனமற்றவரென நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டிருத்தல்.
- குற்றமொன்றுக்காக நீதிமன்றத்தினால் 02 வருட காலம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு 06 மாதங்கள் அல்லது அதனிலும் அதிக காலம் சிறைப்படுத்தப்பட்டு தண்டனை அனுபவித்துக்கொண்டிருப்பின் அல்லது கடந்த ஏழு (07) வருட காலத்தினுள் அந்தத் தண்டனையை பூரணமாக அனுபவித்தல் அல்லது மரண தண்டனை வழங்கப்பட்டவராக இருத்தல்.
- இலஞ்ச ஊழலொன்றுக்கு குற்றவாளியாக்கப்பட்டு 07 வருடங்கள் கழிந்திருக்காமை.
- தேர்தல் சட்டத்தை மீறியதன் காரணமாக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டிருத்தல்.
- பொது நிறுவனங்கள் (ஊழல் தடுப்பு) கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றவாளியாக்கப்பட்டிருத்தல்.

மேற்குறிப்பிடப்பட்ட தகைமையீனங்கள் உட்பட அரசியலமைப்பின் 89 ஆவது உறுப்புரையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வாக்குரிமையை இழப்பதற்கான தகைமையீனங்களுக்கு ஆளாகாத நபராக இருத்தல் வேண்டும்.

7. 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டம்

இந்த திருத்தச் சட்டத்தின் முக்கிய நோக்கம், 18 வயதை எய்தியவுடன் குறைநிரப்பு தேருநர் இடாப்பு ஊடாக வாக்குரிமையைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் வாக்காளர்களைக்

கணக்கெடுப்பதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்ளும் திகதியை திருத்தியமைப்பதாகும். 2022 ஆம் ஆண்டில் முதல் தடவையாக நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த திருத்தச் சட்டத்திற்கமைய 2024 ஆம் ஆண்டில் மூன்றாவது தடவையாகவும் தேருநர் இடாப்பு மீளாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

7.1. 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்திற்கு (முதன்மைச் சட்டம்) மேற்கொண்ட அடிப்படைத் திருத்தங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய விசேட விடயங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

- இந்த திருத்தச் சட்டம் 2021 ஒக்தோபர் மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.
- இந்த திருத்தச் சட்டம் 2022 பெப்ருவரி மாதம் 01 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட வேண்டுமென்ற விடயம்.
- வாக்காளர் ஒருவராக பதிவு செய்துகொள்வதற்கான அலுவலுக்குப் பொருந்தும் வகையில் எவரேனுமொரு நபரின் 18 வயது பூர்த்தியடைய வேண்டிய திகதி யூன் மாதம் 01 ஆம் திகதிக்குப் பதிலாக பெப்ருவரி மாதம் 01 ஆம் திகதி என திருத்தியமைக்கப்பட்டுள்ளது.
- ஏதேனுமொரு தேர்தல் மாவட்டத்திற்கான தேருநர் இடாப்பில் உட்சேர்த்தல் அல்லது வைத்திருப்பதற்கும், சாதாரணமாக வசிக்கும் தகைமை பெறுவதற்கான முகவரிக்கும், அவற்றுடன் தொடர்புடைய ஏனைய தீர்மானங்களுக்குமான திகதியாக இருந்த யூன் மாதம் 01 ஆம் திகதிக்குப் பதிலாக பெப்ருவரி மாதம் 01 ஆம் திகதி எனத் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு ஆண்டின் யூன் மாதம் முதலாம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மீளாய்வு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்குப் பதிலாக பெப்ருவரி மாதம் 01 ஆம் திகதிக்கு முன்னர் எனத் திருத்தியமைக்கப்பட்டது.
- 'அ' மற்றும் 'ஆ' பட்டியல்களை பூரணப்படுத்துவதனை அடுத்த ஆண்டின் ஜனவரி 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்த வேண்டும் என்பதற்குப் பதிலாக செப்தெம்பர் மாதம் 30 ஆம் திகதி எனத் திருத்தியமைக்கடல் வேண்டும்.

7.2. குறைநிரப்பு தேருநர் இடாப்புக்கள் சம்பந்தமாக

- ஆண்டொன்றின் பெப்ருவரி மாதம் 01 ஆம் திகதி முதல் அந்த ஆண்டின் மே மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் காலப்பகுதிக்குள்;
- ஆண்டொன்றின் யூன் மாதம் 01 ஆம் திகதி முதல் அந்த ஆண்டின் செப்தெம்பர் மாதம் 30 ஆம் திகதியுடன் முடிவடையும் காலப்பகுதிக்குள் ;
- ஆண்டொன்றின் ஒக்தோபர் மாதம் 01 ஆம் திகதி முதல் அடுத்த ஆண்டின் ஜனவரி மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் காலப்பகுதிக்குள் ;

  18 வயதைப் பூர்த்தி செய்யும் ஒருவர் வாக்காளர் ஒருவராக தேருநர் இடாப்பில் பெயரை உட்சேர்த்துக்கொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்வதுடன், அதற்காக பிறப்புச் சான்றிதழின் அல்லது தேசிய அடையாள அட்டையின் பிரதியுடன் பதிவு அலுவலரிடம் கோரிக்கையை முன்வைக்க முடியுமெனவும் திருத்தப்பட்ட சட்டத்தில் உட்சேர்க்கப்பட்டுள்ளது.

- அத்தோடு பதிவு அலுவலர் குறைநிரப்புப் பட்டியல்களைத் தயாரித்தல் வேண்டுமெனவும், அந்த குறைநிரப்பு பட்டியல்களை காட்சிப்படுத்த வேண்டுமெனவும், இது சம்பந்தமாக வர்த்தமானியில் மற்றும் மும்மொழிகளிலும் செய்திப் பத்திரிகைகளில் அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட வேண்டுமெனவும், அந்த அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட்ட திகதி முதல் 10 தினங்களுக்குள் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைக்க முடியுமெனவும், திருத்தப்பட்ட சட்டத்தில் உட்சேர்க்கப்பட்டுள்ளது. அத்தோடு, உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பான விசாரணைகளை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மற்றும் அந்த விசாரணைகளின் இறுதியில் குறைநிரப்பு தேருநர் இடாப்பை அத்தாட்சிப்படுத்தும் திகதி வரையான

அலுவல்களுடன் தொடர்பான ஏற்பாடுகள் உட்சேர்க்கப்பட்டுள்ளன.

- குறைநிரப்பு தேருநர் இடாப்பு செயல்வலுப்பெறல் மற்றும் நிராகரிக்கப்படல் சம்பந்தமாக திருத்தப்பட்ட சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

7.3. தேருநர்களைப் பதிவு செய்தல் தொடர்பாக ஏற்படும் சிக்கல்கள் மற்றும் ஏற்கனவே எதிர்பார்க்காத விடயங்கள் சம்பந்தமாக தீர்மானித்தல் அல்லது பொருத்தமான பிரகாரம் மாற்றியமைப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளை வெளியிடுவதற்கான அதிகாரங்கள் ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

8.தேருநர் இடாப்பு மீளாய்வு - 2024

2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கமைய 2024 பெப்ருவரி 01 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் 2024 ஆம் ஆண்டின் பிரதான இடாப்புக்காக தேருநர்களை கணக்கெடுக்கும் பணி ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்தது.

8.1. 2024 ஆம் ஆண்டின் தேருநர் (வாக்காளர்) இடாப்பு மீளாய்வு செயற்பாட்டிற்கமைய பிரதான இடாப்பைத் தயாரித்தல்

இந்த அலுவல்கள் தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கமைய மாவட்டத்தின் பதிவு அலுவலரின் மற்றும் மாவட்ட பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களின் வழிநடாத்தலின் கீழ் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களினால் மேற்கொள்ளப்படுவதுடன் வீடு வீடாகச் சென்று களத்தில் வாக்காளர்களை கணக்கெடுக்கும் பணியை கணக்கெடுப்பு அலுவலர்கள் என்ற வகையில் கிராம அலுவலர்கள் மற்றும் அவர்களுக்கு மேலதிகமாக கொழும்பு மாநகர சபை மற்றும் நீர்கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குட்பட்ட பகுதிகளில் விசேட கணக்கெடுப்ப அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்கள். மேற்கொள்வார்கள்.

8.2. கொவிட் 19 தொற்று நோய் நிலைமை காரணமாக 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் கணக்கெடுப்பு அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று தேருநர்களைக் கணக்கெடுக்கும் பணியை மேற்கொள்ளவில்லை. ஆனாலும் 2023 ஆம் ஆண்டைப் போன்றே 2024 ஆம் ஆண்டிலும் வீடு வீடாகச் சென்று தேருநர்களைக் கணக்கெடுக்கும் பணியை மேற்கொள்வதற்கு ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

8.3. சட்டத்தின் 12:1* ஆம் பிரிவுக்கமைய இடாப்பு மீளாய்வு ஆரம்பிக்கப்படுவதாக, தேருநர்களைக் கணக்கெடுக்கம் முறை பற்றிய அறிவித்தல் இலக்கம்: 2365/ 02 மற்றும் 2024.01.01 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. இது தவிர அது சம்பந்தமாக தினமின, தினகரன் மற்றும் டெய்லிநிவ்ஸ் பத்திரிகைகளிலும் மும்மொழிகளில் பிரசுரிக்கப்பட்டது.

8.4. தேருநர் இடாப்பு மிளாய்வுக்கான அறிவுறுத்தல்கள் சுற்றறிக்கை அனைத்து மாவட்டப் பதிவு அலுவலர்களான மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உதவிப் பதிவு அலுவலர்களுக்கு மற்றும் உதவிப் பதிவு அலுவலர்களான மாவட்ட பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையார்களுக்கு 2023.12.04 ஆம் திகதி வெளியிடப்பட்டது. வாக்காளர்களைக் கணக்கெடுப்பதற்கான சட்ட மற்றும் நடைமுறை விவகாரங்கள் குறித்து ஆலோசனை வழங்கப்பட்டதுடன், வாக்காளர் இடாப்பை அத்தாட்சிப்படுத்தல் வரை மேற்கொள்ளப்படும் எதிர்கால நடவடிக்கைகளுக்கான தேதிகள் பற்றிய திட்டமும் வழங்கப்பட்டது.

8.5. 2023(3) குறைநிரப்பு இடாப்பு 2024.02.01 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது. ஆனாலும் 2023(3) குறைநிரப்பு இடாப்பை தயாரிக்கும் பணிகளை 2023 திசெம்பர் மாதத்தில் நிறைவு செய்தமையினால், 2023 பிரதான இடாப்புக்கு அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2023(1), 2023(2) மற்றும் 2023(3) குறைநிரப்பு இடாப்புக்களுக்காக பரிந்துரைக்கப்பட்ட பெயர்களை ஒன்றிணைத்து வாக்காளர் கணக்கெடுப்புக்கான தரவுகள் அச்சிடப்பட்ட ஒன்றிணைந்த பட்டியல்களைத் தயாரித்தலும் அதன் பின்னர் 2024.01.01 ஆம் திகதி முதல் வீடு வீடாகச் சென்று வாக்காளர்களைக் கணக்கெடுப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

8.6. 2023 ஆம் ஆண்டின் ஒன்றிணைந்த பட்டியலை A3 அளவில் அச்சிட்டமையினால் பயன்பாட்டின்போது சிக்கல்கள் ஏற்பட்டதாக கணக்கெடுப்பு அலுவலர்கள் மற்றும் மாவட்ட பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையார்களால் அறிவிக்கப்பட்டமையினால் 2024 ஆம் ஆண்டின் ஒன்றிணைந்த பட்டியல் A4 அளவுக்கு சிறிதாக்கப்பட்டு புத்தகமொன்றாக தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டது.

8.7. வாக்காளர்களை கணக்கெடுப்பதற்கு பட்டியல் முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. அந்தப் பட்டியலில் 2024.02.01 ஆம் திகதியன்று செல்லுபடியாகும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்ட அனைத்து வாக்காளர்களின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், பிரதான குடியிருப்பாளர் அல்லது வீட்டின் வயது வந்த ஒருவர் பட்டியலை சரிபார்த்து கையொப்பமிட வேண்டும். "அ" மற்றும் "ஆ" என பட்டியலிடப்பட்ட பெயர்கள் தொடர்பான தகவல்களை சமர்ப்பிப்பதற்கு ER படிவம் (2024/ER) பயன்படுத்தப்பட்டது. ஒவ்வொரு வீட்டுக்கும் செல்லுபடியாகும் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களின் விவரங்கள் அடங்கிய சிறு பத்திரமொன்றை வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

8.8. களக் கணக்கெடுப்பு காலப்பகுதியினுள் கிராம அலுவலர்களின் இடமாற்றங்களை இடைநிறுத்துவதற்கும், அன்றைய காலகட்டத்தில் அலுவலக நாட்களை வரையறுப்பதற்கும் தேர்தல் ஆணைக்குழுவின் கோரிக்கையின் அடிப்படையில் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரால் அனைத்து மாவட்ட செயலாளர்கள் மற்றும் அனைத்து பிரதேச செயலாளர்களுக்கு 2023.12.29 தேதியிட்ட கடிதம் மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

8.9."அ" மற்றும் "ஆ" பட்டியல்கள் காட்சிப்படுத்தல் ; உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைத்தல்

2023 ஒன்றிணைக்கப்பட்ட தேருநர் இடாப்பில் பெயர்கள் உள்ளடங்கியுள்ளவர்களில் இறப்பெய்தியுள்ள அல்லது வதிவிடத்தை விட்டுச் சென்றுள்ள அல்லது வேறு காரணமொன்றின் அடிப்படையில் தகைமை பெறாத ஆட்களின் அதாவது 2024 ஆம் ஆண்டில் நீக்குவதற்குப் பரிந்துரைக்கப்படுகின்ற ஆட்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள "அ" பட்டியல் மற்றும் 2023 ஆம் ஆண்டின் ஒன்றிணைந்த தேருநர் இடாப்பில் பெயர்கள் உட்சேர்க்கப்படாத ஆனாலும் 18 வயதைப் பூர்த்தி செய்தல் அல்லது வதிவதற்கு வரல் அல்லது வேறு காரணத்தின் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்புக்கு புதிதாக பெயர்களை உட்சேர்ப்பதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்ளும் நபர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள "ஆ" பட்டியல்கள் காட்சிப்படுத்தல் 2024.04.09 ஆம் திகதி முதல் மேற்கொள்ளப்பட்டது. இது சம்பந்தமாக இலக்கம்: 2379/16 மற்றும் 2024.04.09 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானியில் மற்றும் செய்திப் பத்திரிகைகளில் மும்மொழிகளிலும் அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன

8.9.1. செல்லுபடியாகும் இடாப்பு (அல்லது ஒரு பகுதி) மற்றும் "அ" பட்டியல்கள் மற்றும் "ஆ" பட்டியல்கள் காட்சிப்படுத்தப்படும் இடங்கள்

- ஒவ்வொரு மாவட்டச் செயலகம் / மாவட்ட தேர்தல்கள் அலுவலகம்
- ஒவ்வொரு பிரதேச செயலகம்
- ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனம்
- ஒவ்வொரு கிராம அலுவலர் அலுவலகம்

8.9.2. ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்குமுரிய தேருநர் இடாப்பில் தனது பெயர் அல்லது பிறிதொரு நபரின் பெயரை உட்சேர்த்துக்கொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொண்டுள்ள ஆனாலும் தனது பெயர் தேருநர் இடாப்பிலிருந்து மற்றும் "ஆ" பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு அல்லது "அ" பட்டியலில் உட்சேர்க்கப்பட்டுள்ள அல்லது எவரேனுமொருவர் தனது பெயரை அல்லது பிறிதொருவரின் பெயரை இடாப்பில் உட்சேர்த்துக்கொள்வதற்காக சந்தர்ப்பத்திற்கேற்ப தான் அல்லது தான் சார்பாக வேறொருவர் உரிமைக் கோரிக்கையை முன்வைப்பாராயின் அவ்வாறு

உரிமைக் கோரிக்கையை முன்வைப்பவரால் அது பற்றி மேற்குறிப்பிடப்பட்ட தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் அட்டவணையில் விதித்துரைக்கப்பட்டுள்ள "அ" மற்றும் "ஆ" படிவத்திற்கமைவான அறிவித்தல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் 2024 ஏப்ரல் 09 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்டதுடன் அன்றைய திகதி முதல் 4 வாரங்களுக்குள் அதாவது 2024.05.06 ஆம் திகதிக்கு முன்னர் இதற்கான அனைத்து விண்ணப்பங்களும் ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களினதும் பதிவு அலுவலருக்கு கிடைத்தல் வேண்டுமென பிரசித்தப்படுத்தப்பட்டது.

8.9.3. தேர்தல் மாவட்டத்திற்குரிய தேருநர் இடாப்பில் அல்லது "ஆ" பட்டியலில் தனது பெயர் உட்சேர்க்கப்பட்டுள்ள ஒருவருக்கு தனது பெயர் அல்லது அந்த இடாப்பில் அல்லது "ஆ" பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பிறிதொருவரின் பெயர் அல்லது அந்த இடாப்பில் உட்சேர்க்கப்பட்டிருத்தல் சம்பந்தமாக அல்லது அந்த இடாப்பில் பெயரை உட்சேர்த்துக்கொள்வதற்காக அல்லது வைத்துக்கொள்வதற்காக ஆட்சேபனையைத் தெரிவிக்க முடியும். அவ்வாறு தெரிவிக்கும் ஆட்சேபனையை மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விதித்துரைக்கப்பட்டுள்ள பிரகாரம் "இ" படிவத்திற்கமைய இரண்டு பிரதிகளில் தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இடாப்பில் பெயரை உட்சேர்த்தல் பற்றி முன்வைக்கப்படும் அனைத்து ஆட்சேபனைகளையும் குறித்த அறிவித்தலானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து அதாவது 2024 ஏப்ரல் 09 ஆம் திகதி முதல் 4 வாரங்களுக்குள் அதாவது 2024.05.06 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டுமென பிரசித்தப்படுத்தப்பட்டது.

8.9.4. உரிமைக் கோரிக்கையை முன்வைக்கும் ஒருவரின் பெயரை தேருநர் இடாப்பில் உட்சேர்த்தல் சம்பந்தமாக தெரிவிக்கப்படும் அனைத்து ஆட்சேபனைகளும் உரிமைக் கோரிக்கையை முன்வைப்பவர்களின் பெயர்ப் பட்டியல் அடங்கிய அறிவித்தல் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் அட்டவணையில் விதித்துரைக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் "ஈ" படிவத்திற்கமைய இரண்டு பிரதிகளில் தயாரித்து தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இந்த அறிவித்தல் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் 2024 ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி மற்றும் 2024 மே மாதம் 09 ஆம் திகதி பிரசித்தப்படுத்தப்பட்டது.

8.9.5. உரிமைக் கோரிக்கைகளை முன்வைப்பதற்குத் தேவைப்படும் "அ" "ஆ" படிவங்கள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைப்பதற்குத் தேவையான "இ" "ஈ" படிவங்களை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் கிராம அலுவலர் அலுவலகங்களில் பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

8.10. உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பான விசாரணைகளை நடாத்துதல் மற்றும் தாமதக் கோரிக்கைகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளல்.

8.10.1. "அ" "ஆ" பட்டியல்படுத்தப்பட்டுள்ள எண்ணிக்கை மற்றும் உரிமைக் கோரிக்கைகளை பொறுப்பேற்பதற்கான காலப் பகுதியின் இறுதியில் கிடைக்கப்பெற்றுள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை சம்பந்தமாக கவனத்தை செலுத்திய தேர்தல் ஆணைக்குழு தேருநர்களைக் கணக்கெடுக்கும்போது ஏற்பட முடியுமான பிழைகளை சரி செய்வதற்காக ஏதேனுமொரு விதத்தில் விடுபட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள வாக்காளர்களை தாமதக் கோரிக்கைகளாகக் கருதி இடாப்பில் உட்சேர்ப்பதற்கான அறிவுறுத்தல்கள் மாவட்ட பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு வழங்கப்பட்டது. இலக்கம்: 2381/49 மற்றும் 2024.04.26 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானியில்

ஒவ்வொரு மாவட்டத்திற்கான உதவி பதிவு அலுவலர்கள் பற்றிய விபரங்கள் பிரசித்தப்படுத்தப்பட்டன.

8.10.2. பிரதான இடாப்பு மற்றும் குறைநிரப்பு இடாப்பு தயாரிப்பின்போது கண்டறியப்பட்ட பிந்திய பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் தொடர்பாக, வாக்காளர் பதிவுச் சட்டத்தின் 12(7) உப பிரிவிற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி, வாக்காளர்கள் பதிவு செய்ய விரும்பும் முகவரி முதலில் கேட்கப்பட்டது. கிடைத்த பதில்களின்படி, வாக்காளர்கள் ஒரு முகவரியில் இருந்து நீக்கப்பட்டு, அவர்களுக்கு விருப்பமான முகவரியில் பதிவு செய்யப்பட்டனர். தேர்தல் மாவட்டத்தில் பன்மைப் பதிவுகளுக்கு பதில் கிடைக்காத நிலையில், பதிவு அலுவலர்களின் விருப்பப்படி ஒரு முகவரியில் பதிவு செய்யப்பட்டது. இரண்டு தேர்தல் மாவட்டங்களில் பன்மைப் பதிவுகள் தொடர்பான தீர்மானம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டதன் பின்னர் வழங்கப்பட்டது. தேசிய அடையாள அட்டை இலக்கங்களுக்கமைய பன்மைப் பதிவு என வெளிப்படுத்தப்பட்டாலும் இரண்டு நபர்கள் என அவதானிக்கப்படும் சந்தர்ப்பத்தில் மற்றும் ஒரு நபரா? என சந்தேகிக்கும் சந்தர்ப்பங்களில் தொடர்ந்தும் இரண்டு முகவரிகளிலும் வைத்துக்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

8.11. சனாதிபதித் தேர்தலை உரிய திகதியில் நடாத்துவதற்கான தேவைப்பாடு மற்றும் அதற்கிணங்க பூர்வாங்க நடவடிக்கைகளை ஏற்பாடு செய்துகொள்வதற்கான தேவைப்பாட்டைக் கவனத்திற்கொண்டு 2024 பிரதான இடாப்பு மற்றும் 2024 (1) குறைநிரப்பு இடாப்பை அத்தாட்சிப்படுத்தும் திகதியை திருத்தியமைப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது. அதற்கிணங்க, 2024.07.15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்படவிருந்த பிரதான இடாப்பை 2024.07.01 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்துவதற்கும், 2024.07.15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்படவிருந்த 2024 (1) குறைநிரப்பு இடாப்பை 2024.07.08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

8.12. 2024 ஆம் ஆண்டிற்கான பிரதான வாக்காளர் இடாப்பை தயாரிக்கும் பணி மாவட்ட மட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆம் திகதி தீவின் அனைத்து தேர்தல் மாவட்டங்களினதும் உதவிப் பதிவு அலுவலர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டது.

அது சம்பந்தமாக 2024.07.01 ஆம் திகதிய 2391/03 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும், மும் மொழிகளில் செய்தித்தாள் அறிவித்தல்களை வெளியிடுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் காட்சிப்படுத்தப்பட்டதுடன், அத்தாட்சிப்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் மாவட்ட தேர்தல் அலுவலகங்களில் மற்றும் தீவில் உள்ள அனைத்து கிராம அலுவலர்களின் அலுவலகங்களும் காட்சிப்படுத்தப்பட்டன.

8.13. 2024 ஆம் ஆண்டின் பிரதான தேருநர் இடாப்பின் பதிவுச் செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை

மாவட்டம்	2024 பிரதான தேருநர் இடாப்பில் வாக்குகளின் எண்ணிக்கை	தெரிந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை
கொழும்பு	1,761,536	18
கம்பஹா	1,873,825	19
களுத்துறை	1,019,679	11
கண்டி	1,185,646	12
மாத்தளை	427,851	5
நுவரெலியா	602,887	8
காலி	898,653	9
மாத்தறை	682,587	7
அம்பாந்தோட்டை	518,154	7
யாழ்ப்பாணம்	590,022	6
வன்னி	304,971	6
மட்டக்களப்பு	446,953	5
திகாமடுல்ல	552,204	7
திருகோணமலை	314,135	4
குருநாகல்	1,410,925	15
புத்தளம்	661,257	8
அனுராதபுரம்	737,764	9
பொலன்னறுவை	349,801	5

மாவட்டம்	2024 பிரதான தேருநர் இடாப்பில் வாக்குகளின் எண்ணிக்கை	தெரிந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை
பதுளை	702,293	9
மொணராகலை	397,221	6
இரத்தினபுரி	919,207	11
கேகாலை	706,690	9
மொத்தம்	**17,064,261**	**196**

9. 2023 (3) குறைநிரப்பு தேருநர் இடாப்பை தயாரித்தல்

தேருநர்களைப் பதிவு செய்தல் திருத்தப்பட்ட சட்டத்திற்கமைய 2023 ஒக்தோபர் மாதம் 01 ஆம் திகதி முதல் 2024 ஜனவரி மாதம் 31 திகதி வரையான காலப்பகுதியினுள் 18 வயதை பூர்த்தி செய்யும் ஆட்களை உள்ளடக்கிய குறைநிரப்பு இடாப்பை தயாரித்தல் வேண்டும். இந்த குறைநிரப்பு தேருநர் இடாப்புடன் தொடர்புடைய கணக்கெடுப்பு அலுவல்கள் 2023.02.01 ஆம் திகதி பிரதான இடாப்பு கணக்கெடுப்புடன் இணையான வகையில் மேற்கொள்ளப்பட்டது.

9.1. குறைநிரப்பு இடாப்பை காட்சிப்படுத்தல், உரிமை கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைத்தல் சம்பந்தமாக இலக்கம் 2352/03 மற்றும் 2022.10.02 ஆம் திகதிய வர்த்தமானியில் மற்றும் செய்திப் பத்திரிகைகளில் மும்மொழிகளிலும் அறிவித்தல் வெளியிடப்பட்டது.

9.2. பல சந்தர்ப்பங்களில் ஆட்பதிவு திணைக்களத்தினூடாக இக்காலப்பகுதியினுள் 18 வயதை பூர்த்தி செய்துள்ள ஆட்கள் தொடர்பான விபரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதுன் அந்த விபரங்கள் மாவட்ட பிரதி / உதவி தேர்தல்கள் ஆணையாளர்களூடாக கிராம அலுவலர்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அது தவிர அந்த ஒவ்வொரு ஆட்களின் தனிப்பட்ட முகவரிக்கு பதிவு செய்துகொள்ளுமாறு கடிதங்கள் மூலமாகவும் அறிவிக்கப்பட்டது.

9.3. உரிமைக் கோரிக்கைகள் தொடர்பான விசாரணைகளின் பின்னர் குறைநிரப்பு இடாப்பை ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட பிரகாரம் 2024.02.01 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது. இது சம்பந்தமாக இலக்கம்: 2369/28 மற்றும் 2024.02.01 ஆம் திகதிய வர்த்தமானியில் மற்றும் செய்திப் பத்திரிகைகளில் மும்மொழிகளிலும் அறிவித்தல் வெளியிடப்பட்டது. இந்தக் குறைநிரப்பு இடாப்பில் பதிவு செய்துகொள்ளப்பட்ட மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 72,757 ஆகும்.

மாவட்டம்	2023(3) குறைநிரப்பு தேருநர் இடாப்பில் வாக்குகளின் எண்ணிக்கை	தெரிந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை
கொழும்பு	2,571	18
கம்பஹா	6,520	18
களுத்துறை	4,317	11
கண்டி	6,027	12
மாத்தளை	1,510	5
நுவரெலியா	2,107	8
காலி	4,300	9
மாத்தறை	3,439	7
அம்பாந்தோட்டை	2,768	7
யாழ்ப்பாணம்	3,442	7
வன்னி	1,387	6
மட்டக்களப்பு	3,026	5
திகாமடுல்ல	3,996	7
திருகோணமலை	1,765	4
குருநாகல்	5,537	15
புத்தளம்	2,336	8
அனுராதபுரம்	3,951	9
பொலன்னறுவை	1,483	5

மாவட்டம்	2023(3) குறைநிரப்பு தேருநர் இடாப்பில் வாக்குகளின் எண்ணிக்கை	தெரிந்தெடுக்கப் பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை
பதுளை	3,189	9
மொணராகலை	1,942	6
இரத்தினபுரி	4,169	11
கேகாலை	2,975	9
மொத்தம்	**72,757**	**196**

9.4. அனைத்து தேருநர் இடாப்பையும் அத்தாட்சிப்படுத்தியதன் பின்னர் தற்போது செல்லுபடியாகும் தேருநர் இடாப்பில் பதியப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அரசியலமைப்பின் 97 மற்றும் 98 ஆவது உறுப்புரைகளுக்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் தெரிவு செய்யப்பட முடியுமான பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல் வேண்டும். இது தொடர்பான அறிவித்தல் இலக்கம்: 2374/23 மற்றும் 2024.03.06 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

10.2024 குறைநிரப்பு தேருநர் இடாப்பை தயாரித்தல்.

10.1. தேருநர்களை பதிவு செய்தல் திருத்தப்பட்ட சட்டத்திற்கமைய 2024 பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதி முதல் 2024 மே மாதம் 31 திகதி வரையான காலப்பகுதியினுள், 2024.06.01 முதல் 2024.09.30 வரையான காலப்பகுதியினுள் மற்றும் 2024.10.01 முதல் 2025.01.31 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் ஏதேனுமொரு திகதியில் 18 வயதை பூர்த்தி செய்யும் ஆட்களை உள்ளடக்கிய குறைநிரப்பு இடாப்பை தயாரித்தல் வேண்டும்.

10.2. இந்த குறைநிரப்பு இடாப்புடன் தொடர்பான ஆரம்ப தகவல்களை பெற்றுக்கொள்ளல் 2023 ஆம் ஆண்டின் வாக்காளர் கணக்கெடுப்புடன் சமாந்தரமாக மேற்கொள்ளப்பட்டது. தகைமைகளைப் பெற்றுக்கொண்ட ஏனையோரைக் கணக்கெடுக்கும் பணிகள் 2024 ஆம் ஆண்டின் பிரதான இடாப்புக்கான கணக்கெடுப்புடன் இணையான வகையில் மேற்கொள்ளப்பட்டது.

10.3. பல சந்தர்ப்பங்களில் ஆட்பதிவு திணைக்களத்தினூடாக இக்காலப்பகுதியினுள் 18 வயதை பூர்த்தி செய்துள்ள ஆட்கள் தொடர்பான விபரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதுன் அந்த விபரங்கள் மாவட்ட பிரதி/ உதவி தேர்தல்கள் ஆணையாளர்களூடாக கிராம அலுவலர்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அது தவிர அந்த ஒவ்வொரு ஆட்களின் தனிப்பட்ட முகவரிக்கு பதிவு செய்துகொள்ளுமாறு கடிதங்கள் மூலமாகவும் அறிவிக்கப்பட்டது.

10.4. குறைநிரப்பு இடாப்பை காட்சிப்படுத்தல், உரிமை கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைத்தல் சம்பந்தமாக இலக்கம் 2381/41 மற்றும் 2024.04.26 ஆம் திகதிய வர்த்தமானியில் மற்றும் செய்திப் பத்திரிகைகளில் மும்மொழிகளிலும் அறிவித்தல் வெளியிடப்பட்டது.

10.5. அனைத்து தேருநர் இடாப்பையும் அத்தாட்சிப்படுத்தியதன் பின்னர் தற்போது செல்லுபடியாகும் தேருநர் இடாப்பில் பதியப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அரசியலமைப்பின் 97 மற்றும் 98 ஆவது உறுப்புரைகளுக்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் தெரிவு செய்யப்பட முடியுமான பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல் வேண்டும்.

10.6. 2024 (1) குறைநிரப்பு தேருநர் இடாப்பை தயாரித்தல்.

10.6.1. உரிமைக் கோரிக்கைகள் விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டு குறைநிரப்பு இடாப்பு 2024.07.08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.

10.6.2. இந்தக் குறைநிரப்பு இடாப்பில் பதிவு செய்துகொள்ளப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை

மாவட்டம்	2024 (1) குறைநிரப்பு இடாப்பில் வாக்குகளின் எண்ணிக்கை	தெரிந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை
கொழும்பு	3,815	18
கம்பஹா	7,304	19
களுத்துறை	4,565	11
கண்டி	5,753	12
மாத்தளை	2,140	5
நுவரெலியா	2,405	8
காலி	4,510	9
மாத்தறை	3,588	7
அம்பாந்தோட்டை	2,786	7
யாழ்ப்பாணம்	3,165	6
வன்னி	1,110	6
மட்டக்களப்பு	2,733	5
திகாமடுல்ல	3,228	7
திருகோணமலை	1,790	4
குருநாகல்	6,301	15
புத்தளம்	2,416	8
அநுராதபுரம்	4,098	9
பொலன்னறுவை	1,501	5
பதுளை	3,479	9
மொணராகலை	1,945	6
இரத்தினபுரி	4,529	11
கேகாலை	2,932	9
மொத்தம்	**76,093**	**196**

10.6.3 2024 முதலாவது குறைநிரப்பு தேருநர் இடாப்பின் செல்லுபடியாகும் வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அரசியலமைப்பின் 97 மற்றும் 98 ஆவது உறுப்புரைகளுக்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் தெரிவு செய்யப்பட முடியுமான பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல் தொடர்பான அறிவித்தல் இலக்கம்: 2393/26 மற்றும் 2024.07.17 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

10.7 2024 (2) குறைநிரப்பு தேருநர் இடாப்பை தயாரித்தல்.

10.7.1. உரிமைக் கோரிக்கைகள் தொடர்பான விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டு குறைநிரப்பு இடாப்பு 2023.10.01 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.

10.7.2. இந்தக் குறைநிரப்பு இடாப்பில் பதிவு செய்துகொள்ளப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 78,901 ஆகும்.

மாவட்டம்	2024(2) குறைநிரப்பு இடாப்பில் வாக்குகளின் எண்ணிக்கை	தெரிந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை
கொழும்பு	4,287	18
கம்பஹா	7,725	19
களுத்துறை	4,561	11
கண்டி	5,601	12
மாத்தளை	2,137	5
நுவரெலியா	2,414	8
காலி	4,689	9
மாத்தறை	3,737	7
அம்பாந்தோட்டை	2,808	7
யாழ்ப்பாணம்	3,732	6
வன்னி	1,291	6
மட்டக்களப்பு	3,172	5
திகாமடுல்ல	3,572	7
திருகோமலை	1,779	4
குருநாகல்	6,467	15
புத்தளம்	2,407	8
அனுராதபுரம்	4,193	9
பொலன்னறுவை	1,496	5
பதுளை	3,290	9
மொணராகலை	2,136	6
இரத்தினபுரி	4,517	11
கேகாலை	2,890	9
மொத்தம்	**78,901**	**196**

10.7.3 2024 இரண்டாவது குறைநிரப்பு தேருநர் இடாப்பில் பதியப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அரசியலமைப்பின் 97 மற்றும் 98 ஆவது உறுப்புரைகளுக்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் தெரிவு செய்யப்பட முடியுமான பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல் வேண்டும். இது தொடர்பான அறிவித்தல் இலக்கம்: 2415/60 மற்றும் 2024.12.20 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

10.8. 2023 (3) குறைநிரப்பு தேருநர் இடாப்பை தயாரித்தல்

2024.12.15 திகதியாகும்போது இந்த குறைநிரப்பு இடாப்பு தொடர்பான அநேகமான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டன. முன்னர் திட்டமிட்டபடி, 2025.02.01 திகதியன்று இந்தக் குறைநிரப்பு இடாப்பை அத்தாட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

11. 2025 (1), 2025 (2) மற்றும் 2025 (3) குறைநிரப்பு தேருநர் இடாப்புக்களைத் தயாரித்தல்.

2025.02.01 முதல் 2025.05.31 வரை தயாரிக்க வேண்டிய 2025 (1) குறைநிரப்பு தேருநர் இடாப்பு, 2025.06.01 முதல் 2025.09.30 வரை தயாரிக்க வேண்டிய 2025 (2) குறைநிரப்பு தேருநர் இடாப்பு, மற்றும் 2025.10.01 முதல் 2026.01.31 வரை தயாரிக்க வேண்டிய 2025 (3) குறைநிரப்பு தேருநர் இடாப்புக்களுக்கு தகைமை பெறும் ஆட்கள் பற்றிய விபரங்களை 2024 தேருநர் இடாப்பு மீளாய்வுடன் சமாந்தரமாக சேகரிப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

11.1. அதற்கமைய 2024.12.31 ஆம் திகதியன்று 2025 ஆம் ஆண்டிற்கான குறைநிரப்பு இடாப்புக்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட பெயர்களின் எண்ணிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

குறைநிரப்பு	பரிந்துரைக்கப்பட்ட பெயர்களின் எண்ணிக்கை
2025(1)	22,463
2025(2)	20,320
2025(3)	18,488

12. தேருநர் இடாப்பு தொடர்பான செயற்பாட்டிற்கு தகவல் தொழில்நுட்பத்தைப் அறிமுகஞ் செய்தல்

12.1 தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்காக கிராம அலுவலர் அலுவலகம், தேர்தல் அலுவலகங்களுக்கு செல்வதற்குப் பதிலாக இணையவழி (Online) இ - சேவை ஊடாக தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்கான கோரிக்கையை முன்வைப்பதற்கு பொது மக்களுக்கு வாய்ப்பளித்தல்.

12.2 அவ்வாறே 2021 ஆம் ஆண்டில் அறிமுகஞ் செய்யப்பட்ட அனைத்துப் பிரஜைகளுக்கும் தேருநர் இடாப்பு தகவல்களை உள்ளடக்கிய வெளிப்படுத்துகையை தமது அலைபேசி/ கணனி ஊடாக பெற்றுக்கொள்வதற்கான வசதியும் இந்த ஆண்டிலும் அவ்வாறே நடைமுறைப்படுத்தப்பட்டது.

12.3. தரம் 01 இற்கு மாணவர்களை அனுமதித்துக்கொள்ளும் செயற்பாட்டிற்கு வலய / கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு இலவசமாக மற்றும் விண்ணப்பிக்கும் பாடசாலைகளுக்கு உரிய கட்டணத்தை அறவிட்டு இ - சேவை ஊடாக வதிவிடம் பற்றிய விபரங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கான சேவை செயற்படுத்தப்பட்டது.

12.4. தேர்தல் ஆணைக்குழுவின் இ - சேவை முறைமையை மேம்படுத்துவதன் மூலம், பொதுமக்கள் உள்ளிட்ட தேர்தல் ஆணைக்குழுவின் தரப்புக்களுக்கு இலகுவாக தமது சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தல்.

12.5. கிராம அலுவலர்களின் தேர்தல் ஆணைக்குழுவுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் தேர்தல் இ - சேவை மூலம் பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை பெற்றுக்கொடுத்தல்.

12.6. வலிமையிழப்புக்குட்பட்ட பிரஜைகளுக்கு வசதிகளை வழங்குவதற்காக விசேட வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல். தேர்தல்கள் இ-சேவைகள் மூலம் நபர்களின் வலிமையிழப்பு (அங்கவீனம்) குறித்த தரவுகளை சேகரிக்கும் பணியை ஆரம்பிப்பித்தல். (இதனூடாக தேர்தலின்போது அவர்களுக்கு தேவையான விசேட வசதிகளை வழங்கப்படுவதற்கான வாய்ப்புக் கிடைகின்றது.)

12.7 தேருநர் இடாப்பு மீளாய்வு தொடர்பாக இடைக்கிடை குறுஞ் செய்தி (SMS) ஊடாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டல்

12.8 2024 தேருநர் இடாப்பு மீளாய்வு தொடர்பாக பொது மக்களுக்கு அறிவுறுத்துவதற்காக டயலொக், மொபிடெல், எயார்டெல் மற்றும் ஹட்சிசன் போன்ற அலைபேசி மற்றும் CDMA தொலைபேசி வாடிக்கையாளர்களுக்கு "Elections" எனும் தலைப்பில் கீழ் குறிப்பிடப்படும் குறுஞ் செய்தி பணம் அறவிடப்படாமல் 204.03.08 ஆம் திகதி அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

12.9 2024 தேருநர் இடாப்புக்காக பரிந்துரைக்கப்படாத அல்லது வதிவிட முகவரியை மாற்றியமைப்பதற்கு தேவையான இதுவரை பரிந்துரைக்கப்படாத பிரஜைகளை அறிவுறுத்துவதற்காக டயலொக், மொபிடெல், எயார்டெல் மற்றும் ஹட்சிசன் போன்ற அலைபேசி மற்றும் CDMA தொலைபேசி வாடிக்கையாளர்களுக்கு "Elections" எனும் தலைப்பில் கீழ் குறிப்பிடப்படும் குறுஞ் செய்தி பணம் அறவிடப்படாமல் 2024.04.29 ஆம் திகதி அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

12.10 இந்தக் குறுஞ்செய்தி ஊடாக பாரியளவில் பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டப்பட்டது. இது சம்பந்தமாக டயலொக், மொபிடெல் தனியார் நிறுவனம், பாரதீ எயார்டெல் மற்றும் ஹட்சிசன் போன்ற அலைபேசி நிறுவனங்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன், ஒருங்கிணைப்பு அலுவல்களை மேற்கொண்ட சனாதிபதியின் செயலாளர், பிரதம அமைச்சரின் செயலாளர் மற்றும் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

13. தேருநர் இடாப்பு மீளாய்வு - 2025

13.1. 2024.07.01 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2024 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு 2024.07.08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2024(1) குறைநிரப்பு தேருநர் இடாப்பு 2024.10.01 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2024(2) குறைநிரப்பு தேருநர் இடாப்புடன் 2024.02.01 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்படவிருக்கும் 2024(3) குறைநிரப்பு தேருநர் இடாப்புக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள பெயர்களை ஒன்றிணைத்து 2025 ஆம் ஆண்டிற்காக தேருநர்களை கணக்கெடுப்பதற்காக ஒன்றிணைந்த பட்டியல் தயாரிக்கப்பட்டது.

13.2 2025 ஆம் ஆண்டில் தேருநர்களைக் கணக்கெடுப்பதற்காக கணக்கெடுப்பு அலுவலர்கள் வீடு வீடாகச் செல்லாதிருப்பதற்கு 'அ' மற்றும் 'ஆ' பட்டியல்களை இற்றைப்படுத்துவதற்கு

தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வதனூடாக மீளாய்வுப் பணிகளை மேற்கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

13.3அதற்கமைய, வதிவிட மாற்றம், வயது பூர்த்தியாதல் அல்லது வேறு காரணங்களுக்காக இடாப்பில் சேர்க்கப்பட வேண்டிய பெயர்களைச் உட்சேர்ப்பதற்கும் இறப்பு, வதிவிடத்தை விட்டுச் செல்லல் அல்லது ஏதேனும் தகைமையீனத்திற்குட்படும் பெயர்களை நீக்கவும் கணக்கெடுப்பு அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் 2025/ER படிவம் குடும்பத் தலைவரால் பூர்த்தி செய்யப்பட்டு கணக்கெடுப்பு அலுவலரிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென்பதோடு, ஏனைய சந்தர்ப்பங்களில் அந்த ஒன்றிணைந்த பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள அதே முகவரியின் கீழ் 2025 இற்கு பதிவு செய்யப்படுவார்கள்.

13.4 2025 ஆம் ஆண்டுக்கான தேருநர் இடாப்பு முளாய்வுப் பணிகளை மேற்கொளள் வேண்டிய விதம் குறித்த அறிவுறுத்தல்கள் மற்றும் திருத்த கால அட்டவணை அடங்கிய சுற்றறிக்கை 2024.12.17 ஆம் திகதி அனைத்து மாவட்ட பதிவு அலுவலர்கள் மற்றும் உதவிப் பதிவு அலுவலர்களுக்கு வெளியிடப்பட்டது.

13.5 2025 ஆம் ஆண்டில் வாக்காளர்களைக் கணக்கெடுக்கும் முறை மற்றும் மீளாய்வுக்காக கட்சி முகவர்களை நியமித்தல் தொடர்பான அறிவுறுத்தல்கள் 2024.12.30 ஆம் திகதி அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி செயலாளர்களுக்கும் வழங்கப்பட்டன.

14. பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடங்களை நிரப்புதல்.

14.1. இலக்கம் 19 பதுளை தேர்தல் மாவட்டத்திற்கான பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட திரு. லொக்குகஸ்தொட்ட விதாரணகே சமிந்த விஜேசிரி அவர்கள் கேட்டு விலகியமை காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்திற்கு திரு. வாசலதிலக்க கெதர நயன பிரியங்கர வாசலதிலக்க அவர்கள் தெரிவுசெய்யப்பட்டதுடன் அது சம்பந்தமாக இலக்கம் 2366/26 மற்றும் 2024.01.11 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

14.2 இலக்கம் 16 புத்தளம் தேர்தல் மாவட்டத்திற்கான பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட திரு. சனத் நிசாந்த அவர்கள் இறப்பெய்தியமை காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்திற்கு திரு. எல்.கே. ஜகத் பிரியங்கர அவர்கள் தெரிவுசெய்யப்பட்டதுடன் அது சம்பந்தமாக இலக்கம் 2369/08 மற்றும் 2024.01.30 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

14.3 இலக்கம் 17 அனுராதபுரம் தேர்தல் மாவட்டத்திற்கான பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட திரு. எச். நந்தசேன அவர்கள் இறப்பெய்தியமை காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்திற்கு திரு. எம்.ஜீ. வீரசேன அவர்கள் தெரிவுசெய்யப்பட்டதுடன் அது சம்பந்தமாக இலக்கம் 2378/34 மற்றும் 2024.04.05 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

14.4 அரசியலமைப்பின் 99 அ உறுப்புரையின் கீழ் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட திருமதி டயனா கமகே அவர்களின் உறுப்பினர் பதவி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 66 (ஈ)உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 91 (1) (ஈ) (xiii) உறுப்புரைப் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினராகுவதற்கான தகைமையைக் கொண்டிராதவர் எனவும், அதற்கமைய பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிப்பதற்கான உரிமை இல்லையெனவும் S.C. Appeal No. 11/2024 ஆம் இலக்க விண்ணப்பம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டிருப்பதனால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு திரு. மொஹமட் முஜிபர் ரஹ்மான் அவர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன் அது தொடர்பாக இலக்கம்: 2383/32 மற்றும் 2024.05.09 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக பிரகடனப்படுத்தப்பட்டது.

14.5 இலக்கம் 14 திருகோணமலை தேர்தல் மாவட்டத்திற்கான பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட திரு. இராஜவரோதயம் சம்பந்தன் அவர்கள் இறப்பெய்தியமை காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்திற்கு திரு. கதிரவேலு சண்முகம் குகதாசன் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டதுடன் அது சம்பந்தமாக இலக்கம் 2391/14 மற்றும் 2024.07.02 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

14.6 இலக்கம் 07 காலி தேர்தல் மாவட்டத்திற்கான பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட திரு. மலிகஸ்பே கோரளகே நளின் மனுஷ நாணாயக்கார அவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டமைக்கு எதிராக அவரால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த SC/(EXPULSION) No. 02/2023 ஆம் இலக்க மனு உயர் நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டமையின் காரணமாகஏற்பட்ட வெற்றிடத்திற்கு திரு பந்துல லால் பண்டாரிகொட அவர்கள் தெரிவுசெய்யப்பட்டதுடன் அது சம்பந்தமாக இலக்கம் : 2397/34 மற்றும் 2024.08.14 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

14.7. இலக்கம் 21 இரத்தினபுரி தேர்தல் மாவட்டத்திற்கான பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட திருமதி. தலதா அத்துகோரள அவர்கள் கேட்டு விலகியமை காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்திற்கு திரு. கருணாரத்ன பரணவிதானகே அவர்கள் தெரிவுசெய்யப்பட்டதுடன் அது சம்பந்தமாக இலக்கம் 2399ஃ34 மற்றும் 2024.08.28 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

14.8. இலக்கம் 01 கொழும்பு தேர்தல் மாவட்டத்திற்கான பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட திரு. அனுர குமார திசாநாயக்க அவர்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி பதவியை 2024 செப்தெம்பர் 23 ஆம் திகதி பொறுப்பேற்றுக்கொண்டமையின் காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்திற்கு திரு. லக்ஷ்மன் நிபுண ஆரச்சி அவர்கள் தெரிவுசெய்யப்பட்டதுடன் அது சம்பந்தமாக இலக்கம் 2403/01 மற்றும் 2024.09.23 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

15. சனாதிபதித் தேர்தல் - 2024.09.21

15.1 2019 நவம்பர் 16 ஆம் திகதி நடைபெற்ற சனாதிபதித் தேர்தலின்போது, 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதி தேர்தல் சட்டத்தின் 56 (2) ஆவது பிரிவின் கீழ் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட திரு. கோத்தபாய ராஜபக்ஷவின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் 2022 ஜூலை 14 ஆம் திகதி பதவி விலகியமை காரணமாக இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 40 வது உறுப்புரைக்கமைய பாராளுமன்றத்தால் 2022 ஜூலை 22 ஆம் திகதி திரு. ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டு பதவியேற்றார். முன்னைய ஜனாதிபதியின் மீதமுள்ள பதவிக்காலம் 2024 நவம்பர் 17 ஆம் திகதி முடிவடைவதனாலும், ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்கெடுப்பு பதவியை வகிக்கும் ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைவதற்குள் ஒரு மாதத்திற்கு குறையாத மற்றும் இரண்டு மாதங்களுக்கு மேற்படாத காலப் பகுதியினுள் நடாத்தப்பட வேண்டுமென அரசியலமைப்பின் 31 (3) ஆவது உறுப்புரையில் விதித்துரைக்கப்பட்டுள்ளமையினால், தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடைத்துள்ள அதிகாரங்களின்படி ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தின் இரண்டாவது பிரிவின் கீழான அறிவித்தல் 2024.07.26 ஆம் திகதி 2394/51 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுடன், அந்த அறிவித்தல் ஊடாக பெயர் குறித்த நியமனங்களை 2024.08.15 ஆம் திகதி ஏற்றுக்கொள்ளல் மற்றும் 2024.09.21 ஆம் திகதி தேர்தலை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, 2024 செப்டெம்பர் 21 ஆம் திகதி நடாத்தப்படவிருந்த ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பூர்வாங்க ஏற்பாட்டு நடவடிக்கைகளை 2024 ஆம் ஆண்டு ஜூலை, ஆகஸ்ட் மற்றும் செப்தெம்பர் ஆகிய மாதங்களில் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

15.2 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதி தேர்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் கட்டளை வெளியிடப்பட்ட திகதியான 2024.07.26 திகதியும் பெயர் குறித்த நியமனத் திகதியான 2024.08.15 ஆம் திகதிக்கு முந்திய திகதியான 2024.08.14 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் அல்லது இடைப்பட்ட காலப் பகுதியினுள் அலுவலக நேரத்தில் (சனி மற்றும் ஞாயிறு தவிர்ந்த) மு.ப. 8.30 முதல் பி.ப. 4.15 வரையும் 2024.08.14 ஆம் திகதி மாத்திரம் மு.ப. 8.30 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளரோ அல்லது வேட்பாளரின் சார்பில் ஒருவரோ, தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்தில் கட்டுப் பணத்தை வைப்புச் செய்ய வேண்டும். இதன்படி, உரிய காலத்திற்குள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் இருபத்தி இரண்டு வேட்பாளர்களுக்கும், ஏனைய அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தி மற்றும் தேருநர் ஒருவரால் பெயர் குறிப்பிடப்பட்ட பதினெட்டு வேட்பாளர்களுக்கும் கட்டுப்பணம் வைப்புச் செய்யப்பட்டது.

15.3 2024.08.15 ஆம் திகதி இராஜகிரிய தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்தில் பெயர் குறித்த நியமனங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், குறித்த நேரத்திற்குள் கட்டுப் பணத்தை வைப்புச் செய்த நாற்பது வேட்பாளர்களில் முப்பத்தொன்பது வேட்பாளர்கள் தமது பெயர் குறித்த நியமனங்களை தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்தனர். பெயர் குறித்த நியமனங்களை கையேற்றதன் பின்னர் தேர்தல் ஆணைக்குழு பெயர் குறித்த நியமனங்களை பரிசீலனை செய்து அவை ஏற்கப்பட்டதா இல்லையா என்பதை அறிவித்தல் வேண்டும். இதன்படி, சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து வேட்பு மனுக்களும் 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதி தேர்தல்கள் சட்டத்தின் விதிகளின்படி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக தேர்தல் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டது. பெயர் குறித்த நியமனங்களை சமர்ப்பித்த வேட்பாளர்களின் பெயர்ப் பட்டியல்

15.4. இலங்கை வரலாற்றில் அதிகூடிய எண்ணிக்கை ஜனாதிபதி வேட்பாளர்களான முப்பத்தொன்பது வேட்பாளர்கள் போட்டியிட முன்வந்தமையினால் வாக்குச் சீட்டுகளின் நீளத்தை அதிகரிக்க வேண்டியிருந்தது. அதன்படி, வாக்குச் சீட்டு அடியிதழ் இல்லாமல் 27 அங்குல நீளத்தில் அச்சிடப்பட்டது. வாக்குச் சீட்டின் அளவைக் கருத்திற்கொண்டு இம்முறையும் வாக்குச் சாவடிகளுக்கு தடித்த அட்டையினாலான வாக்குப் பெட்டிகள் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

15.5 2024 வாக்காளர் இடாப்பு 2024 ஜூலை 01 ஆம் திகதி மற்றும் 2024 இன் முதலாவது குறைநிப்புப் பட்டியலை 2024 ஜூலை 08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதால், ஜனாதிபதித் தேர்தலுக்காக 2024 ஆம் ஆண்டின் பிரதான இடாப்புடன் 2024 இன் முதலாவது குறைநிப்புப் பட்டியலையும் பயன்படுத்திக்கொள்ள முடியுமாகியது. அதனால் 2024.02.01 முதல் 2024.05.31 வரையான காலப் பகுதியினுள் வயதை நிறைவு செய்த 76093 இளம் வாக்காளர்களுக்கு இத்தேர்தலில் வாக்களிப்பதற்கு வாய்ப்புக் கிடைத்தது. 2024 ஆம் ஆண்டின் ஒன்றிணைந்த வாக்காளர் இடாப்பிற்கமைய வாக்காளர்களின் எண்ணிக்கை 17,140,354 ஆகும். 13,314 வாக்கெடுப்பு மாவட்டங்கள் காணப்பட்டதுடன், பெண் வாக்காளர்களுக்காக ஒதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்களுடன் மொத்த வாக்கெடுப்பு நிலையங்களின் எண்ணிக்கை 13,421 ஆகும்.

15.6. சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வாக்கெடுப்புப் பற்றிய அறிவித்தலை 2024.07.26 வெளியிட்டமைக்கமைய குறித்த சட்டத்தின் 23 (2) இற்கமைய வாக்கெடுப்பு கடமைகளுடன் தொடர்புபடும் அரசாங்க உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட தகைமைகளைப் பெற்றுக்கொண்ட நபர்களுக்கு அஞ்சல் வாக்களிப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியேற்பட்டது. அதற்கிணங்க அஞ்சல் வாக்களிப்பு விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கு 2024.08.05 ஆம் திகதி வரை காலம் வழங்கப்பட்டாலும் தபாலில் ஏற்படக்கூடிய தாமதங்கள் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளை கவனத்திற் கொண்டு

2024.08.09 ஆம் திகதி வரை 04 தினங்களால் அந்த காலப்பகுதி நீடிக்கப்பட்டது. இந்த தேர்தலுக்காக 736,589 அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதுடன் அவற்றில் 712,319 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அஞ்சல் வாக்குச் சீட்டுக்களை விநியோகித்தல் மற்றும் அஞ்சல் திணைக்களத்திற்கு கையளிக்கும் பணி 2024.08.26 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது. அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களது அலுவலகங்களில் அஞ்சல்மூல வாக்களிப்பு 2024 செப்தெம்பர் 05 மற்றும் 06 ஆம் திகதிகள் ஒதுக்கப்பட்டதுடன் அந்த திகதிகளில் வாக்களிக்கப்படாத அஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் அடங்கிய பக்கெற்றுக்களைத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் பொறுப்பேற்று அவற்றிற்குரிய அலுவலர்களுக்கு வாக்களிப்பதற்காக மாவட்டச் செயலகங்களில் 2024 பெ்தெம்பர் மாதம் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் வாய்ப்பளிக்கப்பட்டது.

15.7. 1988 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 119 ஆ பிரிவின் கீழ் தனக்குரிய வாக்களிப்பு நிலையம் அமைந்துள்ள பிரதேசத்தில் நிலவும் நிலைமை காரணமாக அந்த வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கு முடியாதென நியாயமான அச்சத்தைக் கொண்டுள்ள வாக்காளர்களுக்கு பிரிதொரு வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு பெயர்குறித்த நியமன அறிவித்தல் திகதியிருந்து 07 நாட்களுக்குள் விண்ணப்பிக்க முடியும். அதற்கிணங்க 2024 ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்திற்கு 10 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் அவை அனைத்தும் சட்டத்திற்கிணங்க சமர்ப்பிக்கப்படாமையின் காரணத்தினால் அவற்றை நிராகரிப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

15.8. 2014 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கிணங்க வாக்கெடுப்பொன்றின்போது வாக்குச் சீட்டை குறித்த வாக்காளருக்கு வழங்குவதற்கு முன்னர் ஆளடையாள ஆவணமொன்றை அந்த வாக்காளர் சமர்ப்பித்தல் வேண்டும். வாக்காளரை தேசிய அடையாள அட்டைக்கமைய இனங்கண்டுக்கொள்ளல் வேண்டும். ஆனாலும் எவ்வித தடையுமின்றி தேசிய அடையாள அட்டையை பொதுமக்கள் பெற்றுக்கொள்வதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும்வரை மற்றும் அனைத்து வாக்காளர்களுக்குத் தேசிய அடைளா அட்டையை வழங்கும் வரை ஏனைய ஆளடையாள ஆவணங்களையும் வாக்களிப்பின் போது ஏற்றுக்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அது தவிர தேசிய அடையாள அட்டை அல்லது ஆளடையாள ஆவமொன்று இல்லாத வாக்காளர்களுக்குத் தேர்தல் ஆணைக்குழுவினால் தற்காலிக ஆளடையாள அட்டையை வழங்குவதற்கும் கடந்த தேர்தலுக்காக வழங்கப்பட்ட தற்காலிக ஆளடையாள அட்டையை மீண்டும் செல்லுபடியானதாக்கி வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

15.9. சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 24 ஆம் பிரிவிற்கமைய பதிவு செய்யப்பட்ட அனைத்து தேருநர்களுக்கும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையை அனுப்புதல் வேண்டும். அதற்கிணங்க தேருநர்களின் பதிவு விபரம் மற்றும் வாக்கெடுப்பு நிலையத்துடன் தொடர்புடைய விபரங்கள் குறிப்பிடப்பட்ட உத்தியோகபூர் வாக்காளர் அட்டைகளை தேருநர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக 2024 செப்தெம்பர் மாதம் 02 ஆம் திகதி அஞ்சல் திணைக்களத்திற்கு அவை கையளிக்கப்பட்டன. மேலும் வாக்களிப்பின்போது அஞ்சல் வாக்காளர்களின் பெயர்களுடன் தொடர்புடைய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளில் இலச்சினைப் பொறிக்கப்பட்டுக் கையளிக்கப்பட்டன. வாக்கெடுப்பு நிலையங்களுக்குரிய சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டிருந்த தேருநர் இடாப்புக்களிலும் அஞ்சல் வாக்காளர்களின் விபரங்கள் குறிப்பிடப்பட்டு அனுப்பப்பட்டதுடன் அதன் மூலம் ஆள் மாறாட்ட வாக்கெடுப்பை தடுப்பதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டது. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகயை விநியோகிக்கும் தினமாக 2024 செப்தெம்பர் மாதம் 08 ஆம் திகதி ஒதுக்கப்பட்டதுடன். 2024 செபம்தெம்பர் மாதம் 14 ஆம் திகதி இறுதி விநியோகம் மேற்கொள்ளப்பட்டது.

15.10. அரசியலமைப்புக்கான 17 ஆம் திருத்தத்திற்கிணங்க சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளாக,

- அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்களுக்கு ஊடக வழிகாட்டி நெறிகளை வழங்குதல்.
- அரச வளங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதை தடுப்பதற்காக அனைத்து அரச நிறுவனங்களுக்கும் எழுத்து மூலமான அறிவித்தல்களை வெளியிடல்.
- தேர்தல் ஆணைக்குழு அலுவலகம் மற்றும் அனைத்து மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களில் முறைப்பாட்டு நிலையங்களைத் திறந்து அவற்றுப் பொறுப்பான அலுவலர்களை நியமித்து முறைப்பாடுகளைக் கையேற்பதற்கும் அதற்கான துரித தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்குமான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்.
- நன்னெறி கோவையொன்றை அறிமுகஞ் செய்தல்.
- தேர்தல் கடமைகளுக்காக நியமிக்கப்படும் பொலிஸ் அலுவலர்களுக்கு வழிகாட்டுவதற்கான அறிவுறுத்தல்களை பொலிஸ் மா அதிபர் ஊடாக பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

15.11. அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களை அமைத்தல்.

2024 செப்தெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெற்ற சனாதிபதித் தேர்தலின் போது அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்கள் என்பதனை கவனத்திற் கொள்ளும்போது 'அறிவித்தல் கொடுக்கப்பட்ட' என்பதிலிருந்து கருதப்படுவது என்னவெனில், குறித்த மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அல்லது பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு மற்றும் அந்த அலுவலகம் அமைந்துள்ள பொலிஸ் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு அறிவித்தல் என்பதாகும். தேர்தல் அலுவலகங்களை அமைப்பதற்கு விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு இணங்க அமைக்கப்படும் அலுவலகங்கள் அனுமதிக்கப்பட்ட அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவலகங்கள் என அறிமுகப்படுத்தப்படுகின்றது. இங்கு பிரதானமாக அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களின் வகைகள், அந்தந்த அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களுடன் தொடர்புடைய சட்ட ரீதியான நிலைமையை தெளிவுப்படுத்தல், அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களை அமைத்தலுடன் தொடர்புடைய அறிவுறுத்தல்கள் மற்றும் விண்ணப்ப படிவம் அடங்கிண கடிதமொன்று தேர்தல் ஆணைக்குழுவினால் அனைத்து சனாதிபதி வேட்பாளர்கள் உள்ளிட்ட தேர்தல் முகவர்கள் மற்றும் அதிகாரம் பெற்ற முகவர்களுக்கு வெளியிடப்பட்டது. இந்த அறிவுறுத்தல் கடிதத்தின் ஊடாக அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களில் பிரச்சார பதாகைகள், கொடிகள், வேட்பாளரின் புகைப்படம் போன்றவற்றைக் காட்சிப்படுத்தும்போது பின்பற்றப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக அறிவிக்கப்பட்டதுடன், ஆட்சியிலிருக்கும் குழுக்களினால் அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிப்பகுதிகள், நிறுவனங்கள் போன்ற பொது இடங்களை தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு முறையற்ற விதத்தில் பயன்படுத்திக் கொள்வதனை தவிர்த்துக் கொள்வதற்காக அரசாங்க/ மாகாண சபை/ உள்ளூராட்சி நிறுவனங்கள்.'. அரச கூட்டுத்தாபனங்கள் அல்லது சபைகளுக்குச் சொந்தமான கட்டிமொன்றில், காணியொன்றில், உத்தியோகபூர்வ இல்லமொன்றில் பாதுகாக்கப்பட்ட பகுதியொன்றில் மேலே குறிப்பிடப்பட்ட எந்தவொரு அலுவலகத்தையும் அமைக்க முடியாதென அறிவிக்கப்பட்டது. ஏதேனுமொரு வேட்பாளரின் அலுவலகத்தில் பிரிதொரு வேட்பாளரை ஊக்குவிக்கும் வகையில் அல்லது பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பாகவும் நேரடியாக தேர்தலுடன் தொடர்புபடுகின்ற அரச நிறுவனமொன்றுக்கு அருகில் அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகமொன்றை அமைக்கும்போது பின்பற்றப்பட வேண்டிய தூரத்தின் அளவை குறிப்பிடுவதன் மூலம் ஒரு கட்சிக்கு அல்லது குழுவுக்கு நன்மை ஏற்படும் நிலைமையை முடிவுமானவரை குறைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் மற்றும் பணிப்புக்களை விதிப்பதற்கான காரணம் தேர்தல் காலப்பகுதியினுள் ஏற்படுகின்ற மோதல்கள், தாக்குதல்கள், காயப்படுத்தல்கள், மனித கொலைகள் மற்றும் அரசியல் பழிவாங்கல்கள் போன்ற ஏற்றுக்கொள்ள முடியாத செயற்பாடுகளை தடுத்தல் மற்றும் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய இடையூறுகளை தடுப்பதற்குப் போன்றே சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு தேவையான சூழ்நிலையை ஏற்படுத்துவதாகும்.

15.12. 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவீனத்தை ஒழுங்குப்படுத்துதல் சட்டம்

15.12.1. 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவீனத்தை ஒழுங்குப்படுத்துதல் சட்டத்தின் 03 ஆம் பிரிவிற்கிணங்க 2024 சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் மற்றும் அவர்களுடைய தேர்தல் முகவர்கள் அல்லது அவர்களால் பெயர் குறிப்பிடப்பட்ட நபர்களுடன் தேர்தல் ஆணைக்குழு கலந்துரையாடல்களை மேற்கொண்டதுடன் இவ்வாறு வேட்பாளர்கள் மற்றும் குறித்த நபர்களிடம் கருத்துக்களை வினவியதன் பின்னர் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்று, ஏனைய அரசியல் கட்சியொன்று அல்லது வேட்பாளரால் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் ஒருவருக்காக செலவிடப்பட வேண்டிய செலவு வரையறையை தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டு அது தொடர்பாக பெயர் குறிப்பிடப்பட்ட இலக்கம் 2397/66 மற்றும் 2024.08.16 ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

15.12.2. அதற்கிணங்க போட்டியிடுகின்ற ஒவ்வொரு வேட்பாளருக்காக செல்லுபடியாகும் தேருநர் இடாப்பில் பதிவுசெய்யப்பட்ட ஒரு வாக்காளருக்கு ரூபா. 109.00 இனை விஞ்சாத தொகையொன்றை செலவிட முடியும். அதற்கிணங்க செலவிடுவதற்கு முடியுமான அதிகபட்ச செலவு வரையறை ரூபா. 1,868,298,586.00 ஆகும். இங்கு போட்டியிடுகின்ற வேட்பாளர் ஒருவருக்கு அந்த தொகையில் 60% அதாவது ரூபா. 1,120,979,151.60 மற்றும் அரசியல் கட்சியொன்றுக்கு அல்லது பெயர் குறிப்பிடப்பட்ட வாக்காளர் ஒருவருக்கு அந்த தொகையின் 40% அதாவது ரூபா. 747,319,434.40 இனை பிரச்சார செலவாக செலவிட முடியுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

15.12.3. தேர்தல் பிரச்சார செலவுகள் உள்ளடங்கிய செலவு அறிக்கையை ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு 21 நாட்களுக்குள் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது வாக்காளர் மற்றும் வேட்பாளர் தனித்தனியாக தயாரித்து, தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்தல் வேண்டும். இந்த செலவு அறிக்கைகள் கிடைக்கப்பெற்ற 10 நாட்களுக்குள், அந்த அறிக்கைகள் கிடைத்துள்ளதாகவும், அவற்றை தேர்தல் ஆணைக்குழுவில் எவரேனும் ஒருவரால் பரிசீலிப்பதற்கு முடியுமெனவும், தேவைப்படுபவர்களுக்கு அந்த அறிக்கைகளின் பிரதிகளை எவ்வாறு பெறலாம் என்றும் செய்திப் பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டது.

15.12.4. அதன்படி, உரிய காலப் பகுதியினுள் 35 வேட்பாளர்களும், வேட்பாளர்களை பெயர் குறித்து நியமித்த அரசியல் கட்சிகள் அல்லது பெயர் குறித்த நியமனங்களை சமர்ப்பித்த 28 பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களும் தங்களது செலவு அறிக்கையை தேர்தல் ஆணைக்கழுவிடம் சமர்ப்பித்தனர். இந்த அறிக்கைகள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் அவை அனைத்தும் ஸ்கேன் செய்யப்பட்டு தேர்தல் ஆணைக்கழுவின் இணையத் தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதுடன், தேவையானோருக்கு அவற்றைப் பரிசீலிப்பதற்கு முடியும். தனது தேர்தல் செலவு அறிக்கையை உரிய பிரகாரம் சமர்ப்பிக்காத 03 வேட்பாளர்கள் மற்றும் வேட்பாளர்களை பெயர் குறித்து நியமித்த அரசியல் கட்சிகள் / 10 பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் தொடர்பாக இலங்கை பொலீஸுக்கு முறைப்பாடு செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

15.13. இலவச வானலைக் காலத்தை ஒதுக்குதல்

போட்டியிடும் வேட்பாளர்களுக்கு சனாதிபதி தேர்தல் சட்டத்தின் 117 (1) ஆம் பிரிவுக்கு

இணங்க இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஊடாக இலவச பிரச்சார வசதிகள் வழங்கப்பட்டது. அரசாங்க தகவல் திணைக்களமும் தமது கொள்கைகளை மக்களிடம் முன்வைப்பதற்காக போட்டியிடும் வேட்பாளருக்காக 1 மணித்தியால வானலைக் காலம் ஒதுக்கப்பட்டது.

15.14. மேலும், 2024 ஜனாதிபதி தேர்தலுடன் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய எதிர்கால பணிகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் / சுற்றறிக்கைகள் அனைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் பிரதி / உதவி தேர்தல்கள் ஆணையர்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், இந்த பூர்வாங்க நடவடிக்கைகளுக்கு துணை புரிவதற்காக தேர்தல் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகம் உட்பட அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்கும் தேவையானளவு ஓய்வு பெற்ற அதிகாரிகள் / அமையப் பணியாளர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டது. மேலும், தேர்தலை நடாத்துவதற்கு தேவையான அனைத்து ஆவணங்கள் / படிவங்களும் அச்சிடப்பட்டன. மேலும், வாக்கெடுப்பு, வாக்கெண்ணல் மற்றும் முடிவுகள் அறிவிப்பு தொடர்பான அனைத்து ஆவணங்கள் / வாக்குச் சீட்டுகள் / அட்டைப் பெட்டிகள் / வாக்குச் சிற்றறைகள் அந்தந்தப் பிரிவுகள் ஊடாக குறிப்பிட்ட தேதிக்குள் அனைத்து மாவட்ட அலுவலகங்களுக்கும் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

15.15. வாக்கெடுப்பு மற்றும் வாக்குகளை எண்ணுவதற்கு அரசாங்கத் திணைக்களங்கள் / நிறுவனங்களில் பணியாற்றுகின்ற முறையான தகுதிவாய்ந்த அரச அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். 49 வாக்குகள் எண்ணும் வளாகங்களில் உள்ள 1713 வாக்கு எண்ணும் மையங்களில் வாக்குகள் எண்ணப்பட்டன, அதில் 439 தபால் வாக்குகள் எண்ணும் மையங்களும் காணப்பட்டன.

15.16. வாக்கெடுப்பு மற்றும் வாக்கெண்ணல் பணிகளை கண்காணிப்பதற்காக உள்நாட்டு / வெளிநாட்டு கண்காணிப்பு நிறுவனங்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.

15.16.1. உள்நாட்டுக் கண்காணிப்பு அமைப்புகளிடையே சுதந்திரமான மற்றும் நீதியான தேர்தலுக்கான மக்கள் செயற்பாடு (PEFERAL) மற்றும் தேர்தல் வன்முறை கண்காணிப்பு நிலையம் (CMEV) ஆகியவை வாக்கெடுப்பு நிலையத்தைச் சுற்றியும், வாக்கெடுப்பு நிலையத்திற்குள்ளும் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்திக் கண்காணிக்க அனுமதிக்கப்பட்டதுடன், மேலும் 08 உள்நாட்டுக் கண்காணிப்பு அமைப்புக்களுக்கு வாக்கெடுப்பு நிலையங்களுக்கு வெளியிலிருந்து கண்காணிக்க ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டது ஜனாதிபதித் தேர்தலின்போது தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களில் வாக்கெண்ணல் மற்றும் முடிவுகள் அட்டவணைப்படுத்துதல் ஆகியவற்றை கண்காணிக்க கண்காணிப்பு அமைப்புகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அது மட்டுமின்றி, தேர்தல் ஆணைக்கழுவில் இறுதி முடிவுகளை தயாரிப்பதை கண்காணிக்க கண்காணிப்பு அமைப்புகளும் அனுமதிக்கப்பட்டன.

15.16.2. வெளிநாட்டு கண்காணிப்பு அமைப்புக்களாக இந்திய, ரஷ்யா, பிலிப்பைன், பூட்டான், மாலைத்தீவு, பங்களாதேஷ் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளிலிருந்து கண்காணிப்பாளர்கள் நேரடியாக தேர்தல் ஆணைக்குழுவின் ஒருங்கிணைப்பின் ஊடாக பங்கேற்றனர். ஐரோப்பியர் சங்கம் ஆசிய தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பு மற்றும் பொதுநலவாய அமைப்பின் கண்காணிப்பு குழுக்கள் வாக்கெடுப்புத் தினத்திற்கு முன்பிருந்தே தமது கண்காணிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்தன. சனாதிபதித் தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து அந்த அமைப்புக்களை பிரதிநிதித்துவப்படுத்தி கண்காணிப்பாளர்கள் இந்த நாட்டில் தங்கியிருந்ததுடன் வாக்கெடுப்பு தினம் அண்மிக்கும்போது அந்த கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது.

15.17. சனாதிபதி வேட்பாளர் ஒருவராகப் பெயர்குறித்த நியமனத்தைக் கையளித்த திரு. ஐதுரூஸ் மொஹமட் இல்லியாஸ் அவர்கள் 2024 ஆகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி இறப்பெய்தியதுடன் அந்த வேட்பாளரை பெயர்குறித்து நியமித்த நபரான திரு. கே. எம்.

என். சஞ்சய சம்பத் ரேமன் என்பவருக்கு பிரிதொரு வேட்பாளரை பெயர்குறித்து நியமிக்குமாறு 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 22(1) உப பிரிவிற்கிணங்க பணிப்பு விடுக்கப்பட்ட போதிலும் குறித்த நபர் பிரிதொரு வேட்பாளரைப் பெயர்குறித்து நியமிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளமையினால் சட்டத்தின் 22(1) (ஆ) உப பிரிவிற்கிணங்க வாக்குச் சீட்டு மற்றும் வாக்கெடுப்புடன் தொடர்புடைய ஏனைய அனைத்து ஆவணங்களிலிருந்து இறப்பெய்திய வேட்பாளரின் பெயரை நீக்கியதாகக் கருதப்பட்டதுடன், திரு. ஐதுரூஸ் மொஹமட் இல்லியாஸ் அவர்களுக்கு வாக்கினை அடையாளமிடப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்பட்ட வாக்கெண கருதி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து வாக்கெண்ணும் அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது.

15.18. வாக்கெடுப்புக்குத் தேவையான பொருட்கள் மற்றும் அலுவலர்களை வாக்கெடுப்பு நிலையங்களுக்கு அனுப்பும் பணி 2024 செப்தெம்பர் மாதம் 20 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்கு அடுத்த தினமான அதாவது 2024 செப்தெம்பர் 21 ஆம் திகதி வாக்கெடுப்பு பணிகள் நிறைவு செய்யப்பட்டு அனைத் வாக்குப் பெட்டிகளும் வாக்கெண்ணும் நிலையங்களுக்குக் கிடைக்கப்பெற்றதன் பின்னர் தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல் பிரகாரம் வாக்கெண்ணலுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்கொண்டு முடிவுகளை தேர்தல் ஆணைக்குழுக்கு அறிக்கைப்படுத்துதல் தெரிவத்தாட்சி அலுவலர்களின் கடமையாகும். மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களால் வாக்கெடுப்புப் பிரிவு மட்டத்தில் மற்றும் மாவட்ட மட்டத்தில் முடிவுகளை கையினால் தயாரித்து அவற்றை ஸ்கேன் செய்து பதிவேற்றல் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவின் கணினி வலையமைப்புக்கு தரவுகளை உட்சேர்த்தல் ஆகிய இரண்டு விதத்திலும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு முடிவுகள் அனுப்பப்பட்டன. அத்தோடு, தெரிவத்தாட்சி அலுவலர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற வாக்கெண்ணல் மண்டப மட்டத்திலான முடிவுகள் ஊடாக வாக்கெடுப்புப் பிரிவு மட்டத்தின் பெறுபேறு மற்றும் மாவட்ட பெறுபேறை தயாரிக்கும் பணி தேர்தல் ஆணைக்குழுவிலும் மேற்கொள்ளப்பட்டது.

இந்த சனாதிபதித் தேர்தலின் போது தேர்தல் ஆணைக்குழுவில் முடிவுகளை அட்டவணைப்படுத்தல், பதவிநிலை அலுவலர்களை கொண்ட குழுவொன்றினால் முடிவுகளைக் கையினால் தயாரித்தல், மாவட்டங்களிலிருந்து முடிவுகள் ஸகேன் செய்து பெற்றுக்கொள்ளப்பட்டு தேர்தல் ஆணைக்குழுவின் கணினி பிரிவினால் முடிவுகள் தயாரிக்கப்படல் மற்றும் MS-Excel ஊடாக முடிவுகளைத் தயாரித்தல் ஆகிய மூன்று விதங்களிலும் முடிவுகள் தயாரிக்கப்பட்டன. அதற்கிணங்க தேர்தல் ஆணைக்குழுவில் மூன்று பிரிவுகள் ஊடாக தயாரிக்கப்பட்ட முடிவுகள் தொடர்பான ஆவணங்கள் மற்றும் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களால் அனுப்பி வைக்கப்பட்ட இறுதி முடிவுகளை பரீட்சித்து இந்த நான்கு விதத்திலும் முடிவுகள் சமமானதாக இருப்பின் மாத்திரம் முடிவுகளை வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களால் மாவட்ட மட்டத்தில் வாக்கெடுப்புப் பிரிவுகள் மற்றும் மாவட்ட இறுதி முடிவுகள் தேர்தல் ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதன் பின்னர் பிரகடனப்படுத்தப்பட்டதுடன், முடிவுகள் சரியானவை என்பதனை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளரால் முடிவுகளை தொலைகாட்சி மற்றும் வானொலி ஆகிய ஊடகங்கள் ஊடாக வெளியிடுவதற்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

15.19. மேலே குறிப்பிடப்பட்ட பிரகாரம் 22 தேர்தல் மாவட்டங்களுடன் தொடர்புடைய முடிவுகள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் ஒவ்வொரு வேட்பாளருக்கும் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை தேர்தல் ஆணைக்குழுவினால் கணக்கிடப்பட்டு சனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படும் வேட்பாளர் யாரென்பதனை தேர்தல் ஆணைக்குழுவினால் பிரகடனப்படுத்தப்பட வேண்டியிருந்தது. இந்த தேர்தலின்போது அனைத்து தேர்தல் மாவட்டங்களிலிருந்தும் அளிக்கப்பட்ட செல்லுபடியாகும் வாக்குகளில் அரைவாசியிலும் அதிக எண்ணிக்கையான வாக்குகளை எந்தவொரு வேட்பாளரும் பெற்றுக்கொள்ளவில்லை என்ற விடயம் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் அச்சந்தர்ப்பத்தில் தேர்தல் ஆணைக்குழுவின் பிரதான அலுவலகத்தின் இறுதி முடிவுகளை

தயாரிக்கும் நிலையத்திலிருந்த வேட்பாளர்களின் முகவர்களுடன் தேர்தல் ஆணைக்குழு கலந்துரையாடலை மேற்கொண்டு அதிக வாக்குகளைப் பெற்றுக்கொண்ட திரு. அனுர குமார திசாநாயக்க மற்றும் அடுத்து அதிக வாக்குகளைப் பெற்றுக்கொண்ட திரு. சஜித் பிரேமதாச ஆகியோரை தவிர ஏனைய வேட்பாளர்களைப் போட்டியிலிருந்து நீக்கி அவ்வாறு போட்டியிலிருந்து நீக்கப்பட்ட வேட்பாளர்களின் இரண்டாவது மற்றும் மூன்றாவது விருப்புக்களில் போட்டியிலிருக்கும் இரண்டு வேட்பாளர்களின் சார்பாக வழங்கப்பட்டுள்ள எண்ணிக்கையை கணக்கிடுமாறு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு பணிப்பு விடுக்கப்பட்டது.

15.20. வரலாற்றில் முதல் தடவையாக 2024 சனாதிபதித் தேர்தலின்போது விருப்புக்கள் கணக்கிடப்பட்டன. அதற்கிணங்க முதலாம் சுற்றின் முடிவுகள் மற்றும் ஒவ்வொரு வாக்கெண்ணும் மண்டபங்களிலும் விருப்புக்களைக் கணக்கிட்டதன் பின்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட அந்த விருப்பு வாக்குகளின் எண்ணிக்கையை முதல் சுற்றில் பெற்றுக்கொண்ட வாக்குகளுடன் கூட்டி பெற்றுக்கொள்ளப்பட்ட இறுதி முடிவைக் கணக்கிட்டதன் பின்னர் 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 64(2) ஆம் பிரிவிற்கிணங்க 5,634,915 (42.31%) வாக்குகளைப் பெற்றுக்கொண்ட திரு. அனுர குமார திசாநாயக்க சனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டதான 2024 செம்தெம்பர் மாதம் 22 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளரால் தேர்தல் ஆணைக்குழுவில் பிரகடனப்படுத்தப்பட்டது. வேட்பாளரான திரு. அனுர குமார திசாநாயக்க அவர்கள் சனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டமை தொடர்பான அறிவித்தல் 2024.09.22 ஆம் திகதிய 2402/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் அன்றைய தினமே வெளியிடப்பட்டது.

16.பாராளுமன்றத் தேர்தல் - 2024.11.14

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 10 ஆவது பாராளுமன்றத் தேர்தல் வாக்கெடுப்பு 2024 நவம்பர் மாதம் 14 திகதி மு.ப. 7.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை 13,421 வாக்கெடுப்பு நிலையங்களில் நடாத்தப்பட்டது.

16.1. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் ஊடாக வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கிணங்க அதிமேதகு சனாதிபதி அவர்களால் 2024.09.24 ஆம் திகதிய 2403/13 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் ஊடாக பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. அதற்கிணங்க பாராளுமன்றத் தேர்தலை 2024.11.14 ஆம் திகதி நடாத்துவதற்கும் புதிய பாராளுமன்றத்தை 2024.11.21 ஆம் திகதி கூடுவதாகவும் பிரகடனப்படுத்தப்பட்டதுடன் பாராளுமன்றத் தேர்தலை நடாத்தலுடன் தொடர்டைய பூர்வாங்க பணிகளுக்குத் தேவையான அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

16.2. பாராளுமன்றத்தைக் கலைப்பதற்காக அறிவித்தல் வெளியிடப்பட்ட சந்தர்ப்பத்தின்போது செல்லபடியாகிய 2024 பிரதான இடாப்பு மற்றும் 2024 முதலாம் குறைநிரப்பு இடாப்புக்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் அரசியலமைப்பின் 98(8) உறுப்புரையின் கீழ் தெரிவிசெய்துக் கொள்ள வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கைப் பற்றிய கட்டளை தேர்தல் ஆணைக்குழுவினால் இலக்கம் 2393/26 மற்றும் 2024.07.17 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறித்த ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலிருந்தும் தெரிவுசெய்துகொள்ள வேண்டியிருந்தது.

16.3. பாராளுமன்றத் தேர்தலுடன் தொடர்புடைய பெயர்குறித்த நியமனங்கள் தொடர்பான செயற்பாடுகள் பற்றி இலக்கம் 2403/13 மற்றும் 2024.09.24 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் ஊடாக ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் பெயர்குறித்த நியமனப் பத்திரங்களில் உள்ளடக்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை மற்றும் சுயேச்சைக் குழுக்களினால் கட்டுப்பணம் செலுத்தப்பட வேண்டிய விதம் பற்றிய தகவல்களுடன் வெளியிடப்பட்டது. ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும்

ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் என்ற வகையில் பெயர்குறித்த நியமனங்களைப் கையேற்பதாகவும் இரண்டு நிருவாக மாவட்டங்களைக் கொண்ட யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்திற்காக (யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி) யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரும் மூன்று நிருவாக மாவட்டங்களை உள்ளடக்கிய (வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு) வன்னி தேர்தல் மாவட்டத்திற்காக வவுனியா மாவட்டச் செயலாளரும் பெயர்குறித்த நியமனங்களை கையேற்றல் தொடர்பான அறிவித்தல் இலக்கம் 2403/13 மற்றும் 2024.09.24 வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

16.4. நாடளாவிய ரீதியில் 22 தேர்தல் மாவட்டங்களினதும் தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகத்தில் 24.09.2024 முதல் 11.10.2024 நண்பகல் 12.00 மணி வரையிலும் கட்டுப் பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், பாராளுமன்றத் தேர்தலுக்கு 04.10.2024 முதல் 10.11.2024 நண்பகல் 12.00 மணி வரையிலும் கட்டுப்பணத்தைப் கையேற்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் தொடர்பான ஆட்சேபனை தெரிவிப்பதற்காக 11.10.2024 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி முதல் 1.30 மணி வரை அவகாசம் அளிக்கப்பட்டது.

16.5. 2024.10.11 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு பெயர் குறித்த நியமனங்களை ஏற்கும் செயல்முறை நிறைவடைந்ததுடன், 22 தேர்தல் மாவட்டங்களுக்காக 49 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளிடமிருந்து 443 பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 316 சுயேச்சைக் குழுக்களினால் 316 பெயர் குறித்த நியமனப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. அதன்படி, மொத்தம் 759 குறித்த நியமனப் பத்திரங்கள் சம்பந்தப்பட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு கிடைக்கப் பெற்றிருந்ததுடன், அதில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளால் சமர்ப்பிக்கப்பட்ட 36 பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி சமர்ப்பிக்கப்படாததால் நிராகரிக்கப்பட்டதுடன், அதன்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட எண்ணிக்கை 407 ஆக இருந்தது. சுயேச்சைக் குழுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட 34 பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி சமர்ப்பிக்கப்படாததால் நிராகரிக்கப்பட்டதுடன், அதன்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட எண்ணிக்கை 282 ஆகும். அதன்படி 689 பெயர் குறித்த நியமனப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், 70 குறித்த நியமனப் பத்திரங்கள் நிராகரிக்கப்பட்டன. 2024 பாராளுமன்ற தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தி 5006 வேட்பாளர்களும், சுயேச்சை குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்தி 3346 வேட்பாளர்களும் என மொத்தம் 8352 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். பாராளுமன்றத் தேர்தல் 14.11.2024 ஆம் திகதி நடாத்தப்படுமென 24.09.2024 தேதியிடப்பட்ட 2403/13 ஆம் இலக்க வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டது.

16.6. கொழும்பு, வன்னி மற்றும் கேகாலை ஆகிய தேர்தல் மாவட்டங்களில் பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் சட்ட நடவடிக்கை எடுத்திருந்ததுடன், அதில் வன்னி தேர்தல் மாவட்டம் தொடர்பாக ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு கட்சி சமர்ப்பித்த பெயர் குறித்த நியமனப் பத்திரத்தை ஏற்றுக்கொள்ளுமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டமையினால் அந்த மீண்டும் அதனை ஏற்க வேண்டியேற்பட்டது. ஆக மொத்தம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் 690 ஆகவும், போட்டியிடும் மொத்த வேட்பாளர்களின் எண்ணிக்கை 8361 ஆகவும் இருந்தது.

16.7. இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 99 அ உறுப்புரைக்கமைய தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளுக்கு 27 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளிலிருந்து 516 வேட்பாளர்கள் மற்றும் 2 சுயேச்சைக் குழுக்களிலிருந்து 11 வேட்பாளர்கள் என மொத்தம் 527 வேட்பாளர்களின் பெயர்ப் பட்டியல்கள் 2024.10.11 ஆம் திகதி 12.00 மணிக்குள் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன், அந்த தேசியப் பட்டியல் பெயர் குறித்த நியமனங்கள் பற்றிய தகவல்கள் இலக்கம்: 2405/51 மற்றும் 11.10.2024 தேதியிடப்பட்ட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

16.8. கடந்த பாராளுமன்றத் தேர்தலுடன் ஒப்பிடுகையில் இம்முறை அநேகமான தேர்தல் மாவட்டங்களுக்கு அதிக எண்ணிக்கையிலான பெயர் குறித்த நியமனப்பத்திரங்கள் கிடைக்கப்பெற்றிருந்ததுடன்,திகாமடுல்லை தேர்தல் மாவட்டத்திற்கு 63 பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் கிடைத்திருந்தன. அதன்படி, வாக்குச் சீட்டு அச்சிடும்போது அதன் நீளம் அதிகரிப்பதனால் ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்த்துக்கொள்வதற்காக வகையில் ஒரு தேர்தல் மாவட்டத்திற்காக 20 க்கும் மேற்பட்ட பெயர் குறித்த நியமனப்பத்திரங்கள் பெறப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் பெயர்களை இரண்டு வரிசைகளில் அச்சிடுவதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன், கடந்த 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போதான அனுபவத்தின் அடிப்படையில், பாராளுமன்றத் தேர்தலுக்கும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெயர் குறித்த நியமனப்பத்திரங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் வாக்குச் சீட்டின் அளவைக் கருத்தில் கொண்டு, இம்முறையும் தடித்த அட்டையினாலான வாக்குப் பெட்டிகளை வாக்கெடுப்பு நிலையங்களுக்கு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

16.9. 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 127 ஆம் பிரிவுக்கமைய, முந்தைய பாராளுமன்றத் தேர்தலின்போது அளிக்கப்பட்ட செல்லுபடியாகும் வாக்குகளில் ஒரு சதவீதத்திற்குக் குறையாத வாக்குகளைப் பெற்றுக்கொண்ட எந்தவொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியும் தொடர்புடைய தேர்தலின்போது அந்தத் தேர்தல் மாவட்டத்திற்காக பெயர் குறித்த நியமனப்பத்திரத்தை கையளித்திருப்பின் அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிக்கு அரசாங்க அளிப்பாக நிதி உதவியைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை உண்டு. அந்தத் தொகை, அந்தக் கட்சியினால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு வாக்குக்கு 50 சதம் வீதம் என கணக்கிடப்படுகிறது. அதன்படி, 2024 பாராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி அரசாங்க நிதி உதவிக்கு விண்ணப்பித்ததுடன், அந்தக் கட்சிக்காக செலுத்தப்பட்ட மொத்தத் தொகை 3,426,846.50 ரூபாவாகும். அந்த உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொண்ட ஏனைய அரசியல் கட்சிகள் விண்ணப்பிக்கவில்லை.

16.10. அஞ்சல் வாக்கு தொடர்பான நடவடிக்கைகள்

16.10.1. 1981 ஆம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் பிரிவு 26(1) இன் படி, அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் 2024.10.10 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டன. உரிய காப் பகுதியினுள் பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 759083 ஆகும். அதில் 737902 மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்பட்டன. அஞ்சல் வாக்குப் பட்டியல்களை அத்தாட்சிப்படுத்தும் பணிகள் 2024.10.16 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது.

16.10.2. ஏற்றுக்கொள்ளப்பட்ட அஞ்சல் வாக்காளர்களுக்கு வாக்குச் சீட்டுகள் அடங்கிய பாதுகாப்பு உறைகளை விநியோகித்தல் / அஞ்சலுக்கு கையளிக்கும் பணி வன்னி மற்றும் கொழும்பு தேர்தல் மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் 2024.10.23 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது. பெயர் குறித்த நியமனங்கள் நிராகரிப்பு தொடர்பான நீதிமன்ற வழக்குகள் விசாரிக்கப்படுவதனால் கொழும்பு மற்றும் வன்னி தேர்தல் மாவட்டங்களில் அஞ்சல் மூல வாக்குச் சீட்டுக்கள் 2024.10.25 விநியோகிக்கப்பட்டன.

16.10.3. அஞ்சல் வாக்குகளை அடையாளமிடல் 2024.10.30, 2024.11.01 மற்றும் 2024.11.04 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டதுடன், அடையாளமிடப்படாத அஞ்சல் வாக்குகள் 2024.11.07 மற்றும் 2024.11.08 ஆம் திகதிகளில் அடையாளமிடப்பட்டன.

16.11. 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவுக்கிணங்க பதிவு செய்யப்பட்ட அனைத்து வாக்காளர்களுக்கும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையொன்று அனுப்பப்படல் வேண்டும். அதன்படி, வாக்காளர்களின் பதிவு விவரங்கள் மற்றும் வாக்கெடுப்பு நிலையம் தொடர்பான விவரங்கள் அடங்கிய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் வாக்காளர்களுக்கு விநியோகிப்பதற்காக 2024.10.26 அஞ்சல் திணைக்களத்திடம்

ஒப்படைக்கப்பட்டது. மேலும், வாக்கெடுப்பின்போது அஞ்சல் வாக்காளர்களின் பெயர்கள் குறித்து உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையில் இலச்சினை பதியப்பட்டு வழங்கப்பட்டன. வாக்கெடுப்பு நிலையத்திற்குப் பொறுப்பான சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டிருந்த தேருநர் இடாப்புக்களிலும் அஞ்சல் வாக்காளர்கள் பற்றிய விபரங்கள் குறிப்பிடப்பட்டு அனுப்பப்பட்டதுடன், அதன் மூலம் ஆள் மாறாட்ட வாக்களிப்பை தடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையுடன் வேட்பாளர்களின் விருப்பு இலக்கங்கள் அடங்கிய ஆவணமும் விநியோகிக்கப்பட்டது. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதற்காக 2024.10.27 மற்றும் 2024.11.01 ஆகிய தினங்கள் ஒதுக்கப்பட்டதுடன், 2024.11.07 ஆம் திகதி இறுதி விநியோகம் மேற்கொள்ளப்பட்டது.

16.12. 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவீனத்தை ஒழுங்குப்படுத்துதல் சட்டம்

16.12.1. 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவீனத்தை ஒழுங்குப்படுத்துதல் சட்டம் தொடர்பாக 2024 பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளின் அதிகாரம் பெற்ற முகவர்கள் ஊடாக மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்கள் ஊடாக பெயர் குறித்த நியமனங்கள் தொடர்பான தீர்மானங்களை வெளியிடும் சந்தர்ப்பத்தில் அறிவுறுத்தப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடன் தேர்தல் ஆணைக்குழு கலந்துரையாடல்களை மேற்கொண்டு ஆகக் குறைந்த தொகையை வினவியதுடன், தொடர்புடைய தெரிவத்தாட்சி அலுவலர்கள் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களிடம் வினவி உரிய தகவல்களை தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பினர். அந்த விடயங்களைக் கவனத்திற்கொண்டு ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் ஒருவருக்காக ஒவ்வொரு வேட்பாளரும் செலவிட முடியுமான தொகை மற்றும் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் ஒருவருக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிக்கு / சுயேச்சைக் குழுவொன்றுக்கு செலவிட முடியுமான தொகையை தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டு குறித்த தொகைஇலக்கம் 2406/03 மற்றும் 2024.10.15 ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

16.12.2. பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு 21 நாட்களுக்குள், தேர்தல் செலவுகள் உள்ளடங்கிய செலவு அறிக்கையை, பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் அல்லது சுயேச்சைக் குழுவின் தலைவர் மற்றும் வேட்பாளர் தனித்தனியாக தயாரித்து உறுதிப்படுத்தி உரிய தெரிவத்தாட்சி அலுவலரிடம் கையளித்தல் வேண்டும். இந்த செலவு அறிக்கைகள் கிடைக்கப்பெற்ற 10 நாட்களுக்குள், அந்த அறிக்கைகள் கிடைத்துள்ளதாகவும், அவை குறித்த தெரிவத்தாட்சி அலுவலரின் அலுவலகத்தில் எவரேனும் ஒருவருக்கு பரிசீலிப்பதற்கு முடியுமெனவும், தேவைப்படுபவர்களுக்கு அந்த அறிக்கைகளின் பிரதிகளை எவ்வாறு பெறலாம் என்றும் அறிவித்தல் வெளியிடப்பட்டது.

16.12.3. அதன்படி, உரிய காலப் பகுதியினுள் 8361 வேட்பாளர்களில் 7505 வேட்பாளர்கள் மற்றும் பெயர் குறித்து நியமித்த 690 அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் / சுயேச்சைக்குழு தலைவர்களில் 556 அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் / சுயேச்சைக்குழு தலைவர்கள் மற்றும் 527 தேசியப் பட்டியல் வேட்பாளர்களில் 453 பேரும் தங்களது செலவு அறிக்கையை தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்தனர். இந்த அறிக்கைகள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் அவை அனைத்தும் ஸ்கேன் செய்யப்பட்டு தேர்தல் ஆணைக்குழுவின் இணையத் தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதுடன், தேவையானோருக்கு அவற்றைப் பரிசீலிப்பதற்கு முடியும்.

16.12.4. தனது தேர்தல் செலவு அறிக்கையை உரிய பிரகாரம் சமர்ப்பிக்காத 856 வேட்பாளர்கள் மற்றும் வேட்பாளர்களை பெயர் குறித்து நியமித்த 134 அரசியல் கட்சிகள் / சுயேச்சைக்குழுத் தலைவர்கள் மற்றும் 74 தேசியப்பட்டியல் வேட்பாளர்கள் தொடர்பாக இலங்கை பொலீஸுக்கு முறைப்பாடு செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

16.13. தேர்தல் கண்காணிப்புப் பணிகள்

16.13.1. உள்நாட்டுக் கண்காணிப்புக் குழுக்கள்

2024.11.14 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின்போது கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கும் சனாதிபதித் தேர்தலின்போது அனுமதி வழங்கப்பட்ட விதத்திலேயே கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தேர்தல் ஆணைக்குழுவினால் அனுமதி வழங்கப்பட்டது.

16.13.2. வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழுக்கள்

2024.11.14 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின்போது கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக தேர்தல் ஆணைக்குழுவின் அழைப்பின்பேரில் சில நாடுகளின் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்திக்கொள்ளப்பட்டனர். இது தவிர ஐரோப்பா சங்கம், பொது நலவாய அமைப்பின் கண்காணிப்புக் குழுக்கள் தமது கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டன.

16.14. 1988 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தப்பட்ட) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க பிறிதொரு வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான வசதிகளை வழங்கல்.

1988 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தப்பட்ட) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க பிறிதொரு வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான வசதிகளை வழங்கல்.

1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 127 ஆ (1) பிரிவின் கீழ் தனக்குரிய வாக்களிப்பு நிலையம் அமைந்துள்ள பிரதேசத்தில் நிலவும் நிலைமை காரணமாக அந்த வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கு முடியாதென நியாயமான அச்சத்தைக் கொண்டுள்ள பதிவு செய்யப்பட்ட வாக்காளர் ஒருவருக்கு தனது வாக்கை தேர்தல் ஆணைக்குழுவின் தற்துணிபின் பிரகாரம் தீர்மானிக்கப்படும் பிறிதொரு வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அனுமதி வழங்குமாறு கோரி, பெயர் குறித்த நியமன அறிவித்தல் திகதியிருந்து 07 நாட்களுக்குள் விண்ணப்பிக்க முடியுமென இலக்கம்: 2403/23 மற்றும் 2024.09.25 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக பிரசித்தப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க 2024 ஒக்தோபர் மாதம் 01 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்திற்கு 02 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் அவை அனைத்தும் சட்டத்திற்கிணங்க சமர்ப்பிக்கப்படாமையின் காரணத்தினால் அவற்றை நிராகரிப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

16.15. அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களை அமைத்தல்.

1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 73 ஆம் பிரிவின் கீழ், குறித்த மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அல்லது பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு மற்றும் அந்த அலுவலகம் அமைந்துள்ள பொலிஸ் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு அறிவித்து தேர்தல் அலுவலகங்களை அமைப்பதற்கு விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு இணங்க அமைக்கப்படும் அலுவலகங்கள் அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவலகங்கள் என அறிமுகப்படுத்தப்படுகின்றது. அதற்கமைய பேணி வருவதற்கு முடியுமான தேர்தல் அலுவலகங்கள் தொடர்பான ஏற்பாடுகளுக்கிணங்க 4 தேர்தல் பிரசார அலுவலகங்களை மாத்திரம் அமைத்து நடாத்த முடியுமென்பதோடு, அத்தகைய அலுவலகங்களை அமைப்பதற்கான அதிகாரம் உள்ளவர்கள், அலுவலகங்களை நடாத்த முடியுமான காலம், அலுவலகங்களை அமைக்க முடியுமான அதிகார எல்லை, அலுவலகங்களின் எண்ணிக்கை ஆகிய விடயங்கள் உள்ளடங்கிய ஆவணம் தயாரிக்கப்பட்டு போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களிடையே விநியோகிக்கப்பட்டது. மேலே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் மற்றும் பணிப்புக்களை

விதிப்பதற்கான காரணம் தேர்தல் காலப்பகுதியினுள் ஏற்படுகின்ற மோதல்கள், தாக்குதல்கள், காயப்படுத்தல்கள், மனித கொலைகள் மற்றும் அரசியல் பழிவாங்கல்கள் போன்ற ஏற்றுக்கொள்ள முடியாத செயற்பாடுகளை தடுத்தல் மற்றும் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய இடையூறுகளை தடுப்பதற்குப் போன்றே சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு தேவையான சூழ்நிலையை ஏற்படுத்துவதாகும்.

16.16. பாதுகாப்பு நடவடிக்கைகள்

தேர்தலொன்று பிரகடனப்படுத்தப்பட்டது முதல் வாக்கெடுப்பு நிறைவடைந்து முடிவுகள் அறிவிக்கப்பட்டு ஒரு வார காலத்திற்கு தேர்தல் சட்டங்களை செயல்வலுப்பெறச் செய்யும் பொறுப்பு தேர்தல் ஆணைக்கழுவின் ஆலோசனையின் அடிப்படையில் பொலீஸ் மா அதிபரிடம் ஒப்படைக்கப்படுகிறது. தேர்தல் சட்டங்களை செயல்வலுப்பெறச் செய்வதற்காக தேர்தல் பற்றிய அறிவிப்புடன் தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்தில் போன்றே மாவட்ட மட்டத்திலும் முறைப்பாடுகள் விசாரணை பிரிவுகள் அமைக்கப்பட்டன. இது தவிர, மாவட்டத்தின் பரப்பளவு மற்றும் விசேட பாதுகாப்பு வழங்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டுள்ள பிரதேசங்களை மையமாகக் கொண்டு தொடர்புடைய பிரதேச செயலகம் அல்லது ஏனைய அரச நிறுவனங்களில் விசேட ஒருங்கிணைப்பு பிரிவுகளை அமைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

16.17. 17 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கமைய சுதந்திரமான மற்றும் நீதியான தேர்தலை உறுதிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கையாக அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களுக்கும் ஊடக வழிகாட்டுநெறிகளை வழங்குதல், அரச வளங்களை தவறாக பயன்படுத்துவதை தடுப்பதற்காக அனைத்து அரச நிறுவனங்களுக்கும் எழுத்துப்பூர்வ அறிவிப்புகளை வழங்குதல், தேர்தல் ஆணைக்குழு அலுவலகம் மற்றும் அனைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களிலும் முறைப்பாடுகள் நிலையங்களை திறந்து பொறுப்பு வாய்ந்த அலுவலர்களை நியமித்து, முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் அதற்கான உடனடித் தீர்வுகளை வழங்குவதற்கான வேலை திட்டத்தை செயல்படுத்தல், வேட்பாளர்களுக்கான நன்நடத்தை விதிகளை அறிமுகப்படுத்துதல், தேர்தல் கடமைகளுக்காக நியமிக்கப்படுகின்ற பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான வழிகாட்டல்களை பொலிஸ் மா அதிபர் ஊடாக வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

16.18. மேலும், வாக்கெடுப்பு நிலையங்கள் மற்றும் வாக்கெண்ணும் நடவடிக்கைகளின் பாதுகாப்புக்காக பொலீஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்திக்கொள்ளப்பட்டதுடன், ஒப்பீட்டு ரீதியில் நோக்கும்போது தேர்தலுக்கு முந்தைய வன்முறைகள் குறைந்த தேர்தலாக 2024 பாராளுமன்றத் தேர்தலானது வரலாற்றில் இடம்பெறும். தேர்தல் தினம் வரை தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 1206 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 2616 முறைப்பாடுகளும் என மொத்தம் 3822 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

16.19 மேலும், 2024 பாராளுமன்றத் தேர்தல் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய அடுத்தகட்டப் பணிகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் / சுற்றறிக்கைகள் அனைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் பிரதி / உதவி தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், இந்த ஆரம்பகட்ட நடவடிக்கைகளுக்கு உதவி புரிவதற்காக ஓய்வு பெற்ற அலுவலர்கள் / அமைய ஊழியர்களை பணியமர்த்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மற்றும் தேர்தல் ஆணைக்குழு தலைமை அலுவலகம் உட்பட அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்கும் தேவையான அளவு மேலும், அத்துடன் தேர்தலை நடாத்துவதற்கு தேவையான அனைத்து ஆவணங்கள் / படிவங்களை அச்சிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும், வாக்கெடுப்பு, வாக்கெண்ணல் மற்றும் முடிவுகள் அறிவித்தலுடன் தொடர்பான அனைத்து ஆவணங்கள் / வாக்குச்சீட்டுகள் / தடித்த அட்டையினாலான வாக்கு பெட்டிகள் /

வாக்குச் சிற்றறைகள் அந்தந்த பிரிவுகள் ஊடாக குறிப்பிட்ட திகதிக்குள் அனைத்து மாவட்ட அலுவலகங்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், 2024 பாராளுமன்றத் தேர்தலுடன் தொடர்பாக 13421 வாக்கெடுப்பு நிலையங்களில் 2024.11.14 ஆம் திகதி வெற்றிகரமாக நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நாடளாவிய ரீதியில் 1582 வாக்கெண்ணல் மண்டபங்கள் மற்றும் 452 அஞ்சல் மூல வாக்கெண்ணல் மண்டபங்கள் என மொத்தம் 2034 மண்டபங்களில் வெற்றிகரமாக வாக்கெண்ணும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

16.20. 2024 பிரதான இடாப்பு மற்றும் 2024 (1) குறைநிரப்பு இடாப்புக்கமைய பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 17,140,354 ஆகுமென்பதோடு, அந்த இடாப்பின் அடிப்படையில் 2024.11.14 ஆம் திகதி நடாத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தலின்போது அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 11,815,246 (68.93%) ஆகும். அந்த அளிக்கப்பட்ட வாக்குகளில் 11,148,006 (94.65%) செல்லுபடியான வாக்குகள் என்பதோடு, 667,240 (5.65%) வாக்குகள் நிராகரிக்கப்பட்ட வாக்குகளாகும். போட்டியிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் / சுயேச்சைக் குழுக்களிடையே 6,863,186 (61.56%) வாக்குகளைப் பெற்றுக்கொண்ட தேசிய மக்கள் சக்தி 141 உறுப்பினர்கள் மற்றும் 18 தேசிய பட்டியல் உறுப்பினர்கள் என மொத்தம் 159 பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெற்று 10 ஆவது பாராளுமன்றத்தில் ஆட்சியை அமைத்துள்ளது.

கட்சிகள் பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை பற்றிய விபரம்

கட்சி	பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை	வாக்கு சதவீதம்	மாவட்ட மட்டத்தில் பெற்றுக்கொண்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை	தேசியப் பட்டியல் உறுப்பினர்களின் எண்ணிக்கை	பெற்றுக்கொண்ட மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை
தேசிய மக்கள் சக்தி	6,863,186	61.56%	141	18	159
ஐக்கிய மக்கள் சக்தி	1,968,716	17.66%	35	5	40
இலங்கை தமிழ் அரசுக் கட்சி	257,813	2.31%	7	1	8
புதிய ஜனநாயக முன்னணி	500,835	4.49%	3	2	5
ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன	350,429	3.14%	2	1	3
ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்	87,038	0.78%	2	1	3
சர்வஜன அதிகாரம்	178,006	1.60%	0	1	1
ஐக்கிய தேசியக் கட்சி	66,234	0.59%	1	0	1
ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி	65,382	0.59%	1	0	1
அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்	39,894	0.36%	1	0	1
அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்	33,911	0.36%	1	0	1
யாழ்ப்பாண மாவட்ட சுயேச்சைக் குழு 17	27,855	0.25%	1	0	1
ஸ்ரீ லங்கா தொழிலாளர் கட்சி	17,710	0.16%	1	0	1
மொத்தம்	**11,148,006**	**94.35%**	**196**	**29**	**225**

17. தேர்தல் பிணக்குத் தீர்வு

17.1 வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள்

2023 உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் சம்பந்தமாக –

- தேர்தல் காலப்பகுதியில் அரசுக்கு அல்லது அரச கூட்டுத்தாபனங்களுக்கு அல்லது நியதிச்சட்ட சபைகளுக்குச் சொந்தமான யாதேனும் அசையும் அல்லது அசையா ஆதனம் கட்சிகள், குழுக்கள் மற்றும் வேட்பாளர்களின் ஊக்குவிப்புக்கு அன்றேல் பாதிப்புக் காரணமாக அமையும் விதத்தில் அல்லது சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடத்தும் பணிக்கு இடையூறாக அமையும் விதத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபடுத்தப்படுவதைத் தடுப்பதற்கான பணிப்புகளின் வர்த்தமானி அறிவித்தல்கள்.
- 2024.01.08 ஆம் திகதிய, 2366/02 ஆம் இலக்க பணிப்புகள் அடங்கிய வர்த்தமானியின் மூலம் உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் 2023 க்குரிய வர்த்தமானி அறிவித்தலை எதிர்வரும் 03 மாதங்களுக்கு செல்லுபடியாகும் விதத்தில் நீடிக்கும் வர்த்தமானி அறிவித்தல்.
- 2024.04.09 ஆம் திகதிய 2379/15 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் 2023 க்குரிய பணிப்புகள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தலை எதிர்வரும் 03 மாதங்களுக்கு செல்லுபடியாகும் விதத்தில் நீடிக்கும் வர்த்தமானி அறிவித்தல்.
- 2024.07.10 ஆம் திகதிய 2392/28 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் 2023 க்குரிய பணிப்புகள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தலை எதிர்வரும் 03 மாதங்களுக்கு செல்லுபடியாகும் விதத்தில் நீடிக்கும் வர்த்தமானி அறிவித்தல்.
- 2024.10.11 ஆம் திகதிய 2405/44 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் 2023 க்குரிய பணிப்புகள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தலை எதிர்வரும் 03 மாதங்களுக்கு செல்லுபடியாகும் விதத்தில் நீடிக்கும் வர்த்தமானி அறிவித்தல்.

- 2024.01.08 ஆம் திகதிய 2366/03 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் 2023 க்குரிய ஊடக வழிகாட்டிநெறிகள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தலை எதிர்வரும் 03 மாதங்களுக்கு செல்லுபடியாகும் விதத்தில் நீடிக்கும் வர்த்தமானி அறிவித்தல்.
- 2024.04.09 ஆம் திகதிய 2379/14 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் 2023 க்குரிய ஊடக வழிகாட்டிநெறிகள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தலை எதிர்வரும் 03 மாதங்களுக்கு செல்லுபடியாகும் விதத்தில் நீடிக்கும் வர்த்தமானி அறிவித்தல்.
- 2024.07.10 ஆம் திகதிய 2392/27 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் 2023 க்குரிய ஊடக வழிகாட்டிநெறிகள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தலை எதிர்வரும் 03 மாதங்களுக்கு செல்லுபடியாகும் விதத்தில் நீடிக்கும் வர்த்தமானி அறிவித்தல்.
- 2024.10.11 ஆம் திகதிய 2405/45 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் 2023 க்குரிய ஊடக வழிகாட்டிநெறிகள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தலை எதிர்வரும் 03 மாதங்களுக்கு செல்லுபடியாகும் விதத்தில் நீடிக்கும் வர்த்தமானி அறிவித்தல்.

2024 சனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக –

- தேர்தல் காலப்பகுதியில் அரசுக்கு அல்லது அரச கூட்டுத்தாபனங்களுக்கு அல்லது நியதிச்சட்ட சபைகளுக்குச் சொந்தமான யாதேனும் அசையும் அல்லது அசையாத ஆதனம் கட்சிகள், குழுக்கள் மற்றும் வேட்பாளர்களின் ஊக்குவிப்புக்கு அல்லது பாதிப்புக்கு காரணமாக அமையும் விதத்தில் அல்லது சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடத்தும் நோக்கத்திற்கு தடையாக அமையும் விதத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கான பணிப்புகள் அடங்கிய 2024.07.26 ஆம் திகதிய, 2394/56 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.
- 2024.07.26 ஆம் திகதிய, 2394/57 ஆம் இலக்க ஊடக வழிகாட்டிநெறிகள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல்.
- தேர்தல்களில் போட்டியிடும் அரசியல் கட்சிகள்/சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்களினால் பின்பற்றப்பட வேண்டிய ஒழுக்கநெறிக் கோவை அடங்கிய 2024.07.26 ஆம் திகதிய, 2394/58 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுதல்.

2024 பாராளுமன்றத் தேர்தல் சம்பந்தமாக –

- தேர்தல் காலப்பகுதியில் அரசுக்கு அல்லது அரச கூட்டுத்தாபனங்களுக்கு அல்லது நியதிச்சட்ட சபைகளுக்குச் சொந்தமான

யாதேனும் அசையா அல்லது அசையும் ஆதனம் கட்சிகள், குழுக்கள் மற்றும் வேட்பாளர்களின் ஊக்குவிப்புக்கு அன்றேல் பாதிப்புக்குக் காரணமாக அமையும் விதத்தில் அல்லது சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடத்தும் நோக்கத்திற்கு தடையாக அமையும் விதத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கான பணிப்புகள் அடங்கிய 2024.09.25 ஆம் திகதி 2403/19 ஆம் இலக்க, 2025.09.25 ஆம் திகதிய 2403/21 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்கள்.

- 2024.09.25 ஆம் திகதிய 2403/20 ஆம் இலக்க ஊடக வழிகாட்டிநெறிகள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுதல்.

17.2 2024 சனாதிபதித் தேர்தலுக்கும் 2024 பாராளுமன்றத் தேர்தலுக்கும் உரிய பணிகளை மேற்கொள்ளல்

தேர்தல் சட்டங்களை செயல்வலுப்படுத்துவதற்கும் தேர்தல் சட்ட மீறல்கள், தவறுகள், சட்டவிரோத, ஊழல் நடத்தைகள் சம்பந்தமாக கிடைக்கும் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளலும் அது சம்பந்தமாக செயலாற்றுவதற்கு பெயர் நியமனத்தைக் கோரும் அறிவித்தலை வெளியிட்ட திகதியிலிருந்து தேர்தல் முடிவடைந்து முடிவுகள் வெளியிடப்பட்ட திகதி வரை தேர்தல்கள் செயலகத்திலும் அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களிலும் தேர்தல் பிணக்குத் தீர்வு அலகுகள் நிறுவப்பட்டிருந்தன. இந்த அலகுகளின் கடமை அலுவல்களுக்கு உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களின் தலைமையிலான சிவில் அலுவலர்களும் பொலிஸ் பரிசோதகர் ஒருவரின் தலைமையில் பொலிஸ் அலுவலர் குழுவொன்றும் இணைக்கப்பட்டிருந்தது.

தேர்தல் தவறுகள், மோசடிகள், சட்டவிரோத நடத்தைகள் மற்றும் ஊடகங்களும் சமூக ஊடகங்களும் வாயிலாக ஏற்படக்கூடிய சட்ட மீறல்கள ் குறித்து கிடைக்கும் முறைப்பாடுகளை தாமதமின்றி விசாரித்து துரிதமாக செயற்படுதல், சந்தர்ப்பத்திற்கேற்றவாறு உரிய தரப்பகளை ஆணைக்குழுவுக்கு அழைத்து அறிவுறுத்தல்களை வழங்கி அவ்வாறான நடவடிக்கைகளை இடைநிறுத்துவதற்கும் செயலாற்றப்பட்டிருந்தது. சமூக ஊடகங்களின் ஊடாக இடம்பெறும் சட்டவிரோத பிரச்சார நடவடிக்கைள் சம்பந்தமாக ஆராய்ந்து முறைப்பாடுகள் தொடர்பில் செயற்படுவதற்கு தேர்தல் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தில் விசேட அலகொன்று நிறுவப்பட்டிருந்தது. இவ்வனைத்து தேர்தல் முறைப்பாடுகளும் விசாரணை அலகுகளுக்கு தொலைபேசி, பெக்ஸ், மின்னஞ்சல், வாட்ஸ்எப் ஆகியவற்றின் ஊடாக தேர்தல் முறைப்பாடுகளை முன்வைக்கக்கூடியவாறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அது குறித்து பொதுமக்களை அறிவுறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இத்தேர்தலின் போது தேர்தல் ஆணைக்குழுவும் இலங்கை பொலிஸாரும் இணைந்து தேர்தல் சட்டங்களை வலுப்படுத்துவதற்கு உரிய தரப்புகளை அறிவுறுத்துல், ஆலோசனைகளை வழங்குதல் முதலிய நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதன் பயனாக தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளும் சட்டரீதியாக இடம்பெற்றன. அதன் காரணமாக தேர்தலை போட்டியிடும் அனைத்து தரப்புகளுக்குமட் இடையில் பிணக்குகள் ஏற்படுவது குறைவடைந்தது. நியதிச்சட்ட பணிகளும் சிறப்பாக ஒழுங்கமைத்து அமுல்படுத்த மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள், பிரதி/உதவி தேர்தல்கள் ஆணையாளர்கள் செயலாற்றியதன் காரணமாக தேர்தல் சுதந்திரமாகவும் நீதியாகவும் இடம்பெற்றதாக அனைத்துத் தரப்புகளும் ஏற்றுக்கொண்டன.

18. மாகாண சபைத் தேர்தல்

1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தைத் திருத்துதல் மற்றும் 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க திருத்தச் சட்டம் ஆகியன நிறைவேற்றப்பட்ட போதும், மாகாண சபைத் தேர்தலை தொகுதிவாரி முறையின் கீழ் நடத்துவதற்கு மாகாண சபைகளின் எல்லைகளை நிர்ணயம்செய்து தயாரிக்கப்பட்ட எல்லை நிர்ணய அறிக்கை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படாமை ஆகிய விடயங்கள் காரணமாக அனைத்து மாகாண சபைகளின் பதவிக் காலம் முடிவடைந்திருந்த போதும் இவ்வாண்டிலும் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் சாத்தியம் இல்லாததுடன் பதவிக் காலம் முடிவடைந்துள்ள எல்லா மாகாண சபைகளும் தொடர்ந்தும் மாகாண ஆளுநர்களின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன.

19. உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்

2023 ஆம் ஆண்டில் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மனுக்கள் சம்பந்தமாக 2024.08.22 ஆம் திகதி உயர் நீதிமன்றத்தினால் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலை இயன்றளவு விரைவாக நடத்துமாறு அறிவித்து அளிக்கப்பட்ட தீர்ப்பின் படி உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலை இயன்றளவு விரைவாக நடத்த நடவடிக்கை

எடுக்கப்பட வேண்டியிருந்த போதும், அந்த வழக்குத் தீர்ப்பளிக்கப்பட முன்னர் 2024 சனாதிபதித் தேர்தலின் வாக்கெடுப்பு நடவடிக்கைகள் ஆரம்பமாகியிருந்தமையினால் சொல்லப்பட்ட நடவடிக்கைகள் முடிவடைந்தவுடன் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலை நடத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை ஆணைக்குழு மேற்கொண்டதாக 2024.08.28 ஆம் திகதிய LAE/2023/57 ஆம் இலக்க ஊடக அறிவித்தலின் மூலம் பிரகடனம் செய்யப்பட்டிருந்தது. இருப்பினும் 2024.09.21 ஆம் திகதி நடைபெற்ற சனாதிபதித் தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட சனாதிபதியினால் 2024.09.24 ஆம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பாராளுமன்றத் தேர்தலுக்கு நாள் குறித்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதுடன் பாராளுமன்றத் தேர்தலுக்கு இடையில் எல்பிட்டிய பிரதேச சபையின் பதவிக் காலம் முடிவடைந்திருந்ததன் காரணமாக உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 25 ஆம் பிரிவின் படி தேர்தல் ஆணைக்குழுவிற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் வண்ணம் அத்தேர்தலையும் நடத்த நேரிட்டமையினால் பாராளுமன்றத் தேர்தல் நடவடிக்கைகள் முடிவடைந்தவுடன் இயன்றளவு விரைவாக உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலை நடத்துவதற்கு நாள் குறிக்க நடவடிக்கையெடுக்கப்படுமென LAE/2023/58 ஆம் இலக்க ஊடக அறிவித்தல் மூலம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலுக்காக 2022 ஆம் ஆண்டின் அத்தாட்சிப்படுத்திய தேருநர் இடாப்பு செயல்வலுப் பெற்றது. அந்த இடாப்பில் இருக்கின்ற வாக்காளர்களுக்கு மேலதிகமாக தற்போது பெரும் எண்ணிக்கையான பெயர்கள் தேருநர் இடாப்பில் உட்சேர்க்கப்பட்டிருப்பதனால் அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமையும் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலுக்குப் போட்டியிடும் உரிமையும் இழக்கப்படுவதனாலும் தேர்தலுக்காக நியமனப் பத்திரங்களை வழங்கியுள்ள வேட்பாளர்களில் அநேகமானவர்கள் தற்போது வெளிநாடு செல்லல், மரணமடைதல் போன்ற காரணங்களின் பேரில் நியமனப்பத்திரங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை குறைவடைதலும் 2023 ஆம் ஆண்டில் காணப்பட்ட கணிசமான அரசியல் கட்சிகள் தற்போது மாற்றமடைந்திருப்பதும் அரசியல் கட்சிகளிலிருந்து போட்டியிட முன்வந்த வேட்பாளர்கள் தற்போது வேறு அரசியல் கட்சிகளுடன் இணைந்து இயங்குதல் போன்ற பல்வேறு பிரச்சினைகள் காரணமாக 2023 ஆம் ஆண்டில் கோரப்பட்டுள்ள பெயர் குறித்த நியமனங்களை இரத்துச் செய்து புதிதாக நியமனப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு பல்வேறு தரப்புக்களிலிருந்தும் அரசியல் கட்சிகளிடமிருந்தும் தேர்தல் ஆணைக்குழுவிற்கும் அமைச்சரவைக்கும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

2023 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட இளைஞர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட 25% கோட்டாவை இழந்ததும் இங்கு குறிப்பாக கவனத்தில் எடுக்கப்பட்டது.

அதன்படி 24/2093/816/004 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரம் "2023 ஆம் ஆண்டில் நடைபெறவிருந்த உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலுக்காக கோரப்பட்ட பெயர் குறித்த நியமனங்களை மீள அழைப்பதற்கும் புதிய பெயர் குறித்த நியமனங்களைக் கோருவதற்குமான ஏற்பாடுகளைச் செய்தல்" என்ற தலைப்பிட்ட அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட 2024.12.01 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனம் அமைச்சரவைக் கூட்டத்தின் போது சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து அது குறித்து பரிசீலிக்க அமைச்சரவை பின்வரும் முடிவுக்கு வந்தது.

- 2023 உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலுக்காக அழைக்கப்பட்டுள்ள பெயர் குறித்த நியமனப் பத்திரங்களை மீள அழைப்பதற்கும்,
- குறித்த பெயர் குறித்த நியமனப் பத்திரங்களை சமர்ப்பித்த வேட்பாளர்களினால் வைப்பில் இடப்பட்டுள்ள வைப்புத் தொகையை மீண்டும் வழங்குவதற்கு தற்போது செயல்வலுப் பெறும் வட்டி வீதத்தை ஏற்புடையதாக்கிக் கொண்டு குறித்த வட்டியுடன் திருப்பிச் செலுத்துவதற்கும்

- அதனையடுத்து, 2024 தேருநர் இடாப்பினை அடிப்படையாகக் கொண்டு உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலை நடாத்துவதற்கு மீண்டும் பெயர் குறித்த நியமனங்களைக் கோருவதற்கும்

தேர்தல் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் கிடைக்கின்றவாறு உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்ட மூலமொன்றை தயாரிப்பதற்காக சட்ட வரையுநருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் முன்மொழியப்பட்டிருந்தது.

அதன்படி, தற்போது அந்த விசேட ஏற்பாடுகள் சட்டமூலத்தை தயாரித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க சட்ட வரையுநரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

19.1 எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல் அலுவல்கள்

2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற எல்பிட்டிய பிரதேச சபையின் பதவிக் காலம் 2023 நவம்பர் மாதம் 04 ஆம் திகதியுடன் முடிவடைந்தது. அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரினால் 2341/29 ஆம் இலக்க 2023.07.19 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் எல்பிட்டிய பிரதேச சபை உறுப்பினர்களின் பதவிக் காலம் நீடிக்கப்பட்டதன் காரணமாக அப் பதவிக் காலங்கள் 2024 நவம்பர் மாதம் 04 ஆம் திகதியுடன் முடிவுறுத்தப்பட வேண்டியிருந்தமையினால் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 25 ஆம் பிரிவினால் தேர்தல் ஆணைக்குழுவிற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் வண்ணம் செயலாற்றி எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலை நடத்த தேர்தல் ஆணைக்குழு உரிய நடவடிக்கை எடுத்தது.

அதன்படி உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 12 ஆ பிரிவின்படி அத்தாட்சிப்படுத்திய தேர்தல் இடாப்பு காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவித்து 2398/32 ஆம் இலக்க 2024.08.22 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதை அடுத்து பெயர் குறித்த நியமனங்களைக் கோரும் அறிவித்தல் எல்பிட்டிய பிரதேச சபை தெரிவத்தாட்சி அலுவலரினால் 2024.08.26 ஆம் திகதி அறிவித்தல் பலகைகளில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. பெயர் குறித்த நியமன காலப்பகுதி 2024 செப்டம்டபர் மாதம் 09 ஆம் திகதியிலிருந்து 2024 செப்டம்பர் மாதம் 12 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரையாகும்.

அதன்படி 09 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினாலும் 02 சுயேச்சைக் குழுக்களினாலும் 11 பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் கையளிக்கப்பட்டன. அவற்றில் 01 அரசியல் கட்சியினதும் 01 சுயேச்சைக் குழுவினதும் நியமனப் பத்திரங்கள் நிராகரிக்கப்பட்டன.

2024.10.26 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலுக்கு பதிவுசெய்யப்பட்ட 55,643 வாக்காளர்கள் வாக்களிக்க உரிமை பெற்றிருந்தனர். அவர்களில் 36,825 பேர் வாக்களித்திருந்தனர். அளிக்கப்பட்ட வாக்குகள் எண்ணிக்கையில் 520 நிராகரிக்கப்பட்ட வாக்குகளாக காணப்பட்டன. செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கை 36,305 ஆகும்.

எல்பிட்டிய பிரதேச சபைக்கு எல்பிட்டிய பிரதேச சபையின் 17 வட்டாரங்களில் 15 வட்டாரங்கள் வெற்றிகொள்ளப்பட்டன. 02 வட்டாரங்களில் ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி பெற்றது.

அதன்படி பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைப்படி எல்பிட்டிய பிரதேச சபைக்கு பின்வருமாறு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தேசிய மக்கள் சக்தி	15
ஐக்கிய மக்கள் சக்தி	06
ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன	03
பொதுசன ஐக்கிய முன்னணி	02
சுயேச்சைக் குழு	02
பொதுசன ஐக்கிய சுதந்திர முன்னணி	01
தேசிய மக்கள் கட்சி	01
மொத்தம்	**30**

எல்பிட்டிய பிரதேச சபைக்கான உறுப்பினர்களின் எண்ணிக்கை 28 ஆகக் காணப்பட்ட போதிலும் தேசிய மக்கள் சக்தி 15 வட்டாரங்களில் வெற்றி பெற்றதன் காரணமாக அச்சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 30 ஆனது. தொங்கவிடப்பட்ட ஆசனங்கள் (over hang) 02 ஆகும்.

20. உள்ளூர் அதிகார சபை உறுப்பினர் பதவி வெற்றிடங்களை நிரப்புதல்

உள்ளூர் அதிகார சபை உறுப்பினர்கள் இறப்பெய்துதல், கேட்டு விலகுதல், கட்சி அங்கத்துவம் வறிதாதல், அனுமதி பெறப்படாமல் சபை அமர்வுகளில் பங்குபற்றாதிருத்தல், தவிசாளராக நியமிக்கப்படுதல், வரவு செலவுத்திட்டம் தோல்வியடைதல், ஆளுநரினால் நீக்கப்படுதல் ஆகிய விடயங்கள் காரணமாக உறுப்பினர் பதவி வெற்றிடங்கள் ஏற்படுவதோடு, அத்தகைய உறுப்பினர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான சட்ட செயன்முறை உள்ளூராட்சிப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது.

அதன் அடிப்படையில் 2024 அக்டோபர் 26 திகதியிலிருந்து திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்பட்டதன் காரணமாக அதன் தவிசாளர் கேட்டு விலகியமையினால் எல்பிட்டிய பிரதேச சபை தவிசாரளர் பதவியும் ஓர் உறுப்பினர் பதவியும் வரிதானது. அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான சட்டமுறை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன

21. விசேட கருத்திட்டங்கள்

2022-2025 வரையான நான்காண்டு கால மூலோபாயத் திட்டத்திற்கமைய உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் பிரிவுக்கு பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்த நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் பின்வருமாறு:-

21.1. தோட்டத்துறையிலும் விளிம்புநிலை இனக் குழுமங்களுக்கு சிறப்பாயமைந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல்

இதன் கீழ் மாவட்ட அலுவலகங்களினால் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:-

மாவட்டம்	நிகழ்ச்சித்திட்டம்/ கருத்திட்டம்	நடைபெற்ற இடம்	திகதி
கொழும்பு	தோட்டப்புற மக்கள் மத்தியில் விழிப்பூட்டல்	கிரிவந்தல வடக்கு, பென்ரிச் தோட்டம், சனசமூக மண்டபம்	2024 .03.02
களுத்துறை	தோட்டத்துறையும் விளிம்புநிலை இனக் குழுமங்கள் தோட்டத்துறையும் விளிம்புநிலை இனக் குழுமங்களும்	நிவ் செமில் தோட்டம், மில்லனிய கீகியன கந்தவத்த தமிழ் வித்தியாலயம்	2024 .02.20 2024 .03.04
நுவரெலியா	தோட்டத்துறையும் விளிம்புநிலை இனக் குழுமங்கள்	கே.டீ.எஸ். மண்டபம் - உடபுஸ்ஸல்லாவை	2024 .03.13
முல்லைத்தீவு	மீனவ சமுகத்தில் விழிப்பூட்டல்	துணுக்காய் கிராமம்	2024 .04.17
மட்டக்களப்பு	குறவர் கோத்திர சமூகத்தை விழிப்பூட்டல்	வாகரை பிரதேச செயலகம்	2024 .05.28
குருணாகல்	தோட்டப்புற விளிம்புநிலை இனக் குழுமங்களை விழிப்பூட்டல்	பிரதேச சபைக் கட்டிடம் - ரிதீகம	2024 .06.08
அநுராதபுரம்	விளிம்புநிலை இனக் குழுமங்கள் (குறவர்)	மிஹிந்தலை பொத்தான பிரிவு	2024. 04.01
பதுளை	தோட்டத்துறை மற்றும் விளிம்புநிலை இனக் குழுமங்களை விழிப்பூட்டல்	கந்தெகெதர கலாசார நிலையம்	2024. 05.09
	தோட்டத்துறை மற்றும் விளிம்புநிலை இனக் குழுமங்களை விழிப்பூட்டல்	திக்வெல்லவத்த பகுதி - ஹாலிஎல	2024 .05.11
	தோட்டத்துறை மற்றும் விளிம்புநிலை இனக் குழுமங்களை விழிப்பூட்டல்	எட்டம்பிட்டிய - ஹாலிஎல	2024 .05.11
	தோட்டத்துறை மற்றும் விளிம்புநிலை இனக் குழுமங்களை விழிப்பூட்டல்	டெமேரியா தோட்டம் - பசறை	2024 .06.20
மொணராகலை	விளிம்புநிலை இனக் குழுமங்களை விழிப்பூட்டல்	முப்பனே வெளிவத்த – மொணராகலை	2024 .05.13



21.2 மாணவர் பாராளுமன்ற நிகழ்ச்சித்திட்டத்திற்கு உரிய செயற்பாடுகள்

இதன் கீழ் மாவட்ட அலுவலகங்கள் நடத்தியுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு:-

மாவட்டம்	திகதி	நிகழ்ச்சித்திட்டம் நடைபெற்ற இடம்
கொழும்பு	2024.07.17	கொழும்பு – 10 ஆனந்த வித்தியாலயம் - மாணவர்கள்
கம்பஹா	2024.04.09	வெயாங்கொட பண்டாரநாயக்க வித்தியாலயம் - மாணவர்கள்
	2024.06.19	நிட்டம்புவ சங்கபோதி மத்திய மகா வித்தியாலயம் - மாணவர்கள்
கண்டி	2024.03.28	கம்பளை விக்ரமபாகு தேசிய பாடசாலை – ஆசிரியர்களும் வலயக் கல்வி அலுவலர்களும்
	2024.04.01	தெனுவர வலயக் கல்வி அலுவலகம் - ஆசிரியர்களும் வலயக் கல்வி அலுவலக அலுவலர்களும்
மாத்தளை	2024.03.22	கந்தெநுவர தமிழ் மகா வித்தியாலயம் - மாணவர்கள்
நுவரெலியா	2024.03.18	பதியபலெல்ல மகா வித்தியாலயம் - மாணவர்கள்
காலி	2024.03.27	காலி, அம்பலாங்கொடை வலயத்தின் தெரிவு செய்யப்பட்ட 04 பாடசாலைகளில் தரம் 10 இற்கு மேற்பட்ட கல்வி கற்கும் 800 மாணவர்கள்
	2024.03.28	காலி, அம்பலாங்கொடை வலயத்தின் தெரிவு செய்யப்பட்ட 03 பாடசாலைகளில் தரம் 10 இற்கு மேற்பட்ட கல்வி கற்கும் 1000 மாணவர்கள்
மன்னார்	2024.03.23	வலயக் கல்வி அலுவலகம் - குடியுரிமைக் கல்வி ஆசிரியர் பயிற்சிச் செயலமர்வு
மட்டக்களப்பு	2024.06.04	தாலங்குடா உயர் தொழில்நுட்பக் கல்லூரி – மாணவர்கள்
அம்பாறை	2024.03.12	அம்பாறை வலயக் கல்வி அலுவலகம் - குடியுரிமை கல்வி பாடப் பொறுப்பாசிரியர்கள்
	2024.03.13	மஹஓயா வலயக் கல்வி அலுவலகம் குடியுரிமைக் கல்வி பாடப் பொறுப்பாசிரியர்கள்
	2024.03.14	தெஹியத்தகண்டிய வலயக் கல்வி அலுவலகம் - குடியுரிமைக் கல்வி பாடப் பொறுப்பாசிரியர்கள்
பொலன்னறுவை	2024.06.05	மெதிரிகிரிய – தேசிய பாடசாலை - மாணவர்கள்
பதுளை	2024.03.07	மடுல்சீம, படவத்த, தமிழ் வித்தியாலயம் - மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள்
மொணராகலை	2024.04.02	பிபில மொ/ யசோதரா மகளிர் வித்தியாலயம் - மாணவர்கள்
	2024.07.24	மொ/ பகிணிகஹவெல முஸ்லிம் வித்தியாலயம் - மாணவர்கள்



இது தவிர தேசிய மாணவர் பாராளுமன்றத் தேர்வு – 2023 கல்வி அமைச்சின் அதிகாரிகளின் அழைப்பின் பேரில் தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் தேசிய மாணவர் பாராளுமன்றத் தேர்வு 2024.03.25 ஆம் திகதி மஹரகம தேசியக் கல்வி நிறுவகத்தில் நடைபெற்றது. இதில் சபாநாயகர், பிரதம அமைச்சர், சபை

முதல்வர், பிரதி சபாநாயகர், பிரதி குழுக்களின் தலைவர் ஆகிய பதவிகளுக்கும் 10 அமைச்சுக்களுக்கும் உரிய அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் பதவிகளுக்கான தேர்தல் நடைபெற்றது. நாட்டின் கல்வி வலயங்களை உள்ளடக்குகின்றவாறு கல்வி அமைச்சினால் தெரிவுசெய்யப்பட்ட 137 வேட்பாளர்கள் மேற்படி பதவிகளுக்கு பெயர் குறித்த நியமனங்களை கையளித்ததோடு, தேசிய தேர்தலொன்று, வாக்கெடுப்பொன்று இடம்பெறும் வேளையில் மேற்கொள்ளப்படும் செயல்முறை பற்றி மாணவர்களுக்கு பிரயோக ரீதியான அனுபவமொன்றை வழங்கி அதற்கு ஏற்ற விதத்தில் இங்கு தேர்தலை நடத்தி முடிவுகளை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டது. இது முதல் தடவையாக நடைபெற்ற தேசிய மாணவர் பாராளுமன்றத் தேர்தல் என்பது சிறப்பம்சமாகும்.

21.3. இடைப்பால் குழுக்களுடன் அவர்கள் சம்பந்தமாக தேர்தல் செயன்முறை தொடர்பில் நிலவும் பிரச்சினைகள் குறித்து தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரிகளுடன் 2024.03.15, 2024.08.02 ஆகிய திகதிகளில் கலந்தாலோசித்தல்.

21.4. 2025 ஆம் ஆண்டில் சமுதாயத்தில் சனநாயகத்தை ஊக்குவிப்பதற்கான தேசிய அளவிலான ஆராய்ச்சிக் கருத்தரங்கு

02 ஆவது தடவையாகவும் தேர்தல் ஆணைக்குழுவினால் ஒழுங்கு செய்யப்படும் வருடாந்த ஆராய்ச்சி அமர்வு தொடர்பில் வாக்குரிமையைப் பாதுகாத்தலும் சனநாயத்தை ஊக்குவித்தலும், அது சார்ந்த தொனிப்பெருள்களின் கீழ் ஆராய்ச்சித்தாள்களைச் சமர்ப்பிப்பதற்காக 2024 ஏப்ரல் மாதம் தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பகிரங்க அழைப்பு விடுக்கப்பட்டது. மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்கள் மூலமும் நாடுபூராகவும் அமைந்துள்ள பல்கலைக்கழக முறைமையை உள்ளடக்கியதாகவும் இதற்கான விழிப்பூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டன. அக்காலப்பகுதியினுள் பல்கலைக்கழக முறைமையினுள் நிலவிய நிலைவரம் காரணமாக தொடர்ந்தும் இது சம்பந்தமாக கரிசனை காட்டும் அனைத்துப் பிரிவினருக்கும் வசதியானதாக அமையும் விதத்திலும் மீண்டும் 2024 யூன் மாதம் பத்திரிகை விளம்பரம் ஒன்றின் மூலம் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.

மின்னஞ்ல் ஊடாக ஆராய்ச்சித்தாள்களைச் சமர்ப்பிப்பதற்கு வாய்ப்பேற்படுத்திக் கொடுக்கப்பட்டது. அதற்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் 34 ஆராய்ச்சித் தாள்கள் கிடைக்கப் பெற்றன.

2024 சனாதிபதித் தேர்தலையும் பாராளுமன்றத் தேர்தலையும் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் காரணமாக இது தொடர்பில் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதனை தற்காலிகமாக இடைநிறுத்த நேரிட்டபோதும் மீண்டும் அதனை ஆரம்பித்து கல்விமான்கள் குழுவொன்றின் முன்னிலையில் ஆராய்ச்சித்தாள்களை மதிப்பீடு செய்ய நடவடிக்கையெடுத்து கருத்தரங்கை நடத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

22. வலிமையிழந்த ஆட்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்தும் பொறுப்பு

தேர்தல் ஆணைக்குழுவின் பங்கேற்பு மூலோபாயத் திட்டத்தின் 2022–2025 படி குறிக்கோள்கள், நோக்கங்கள் மற்றும் இலக்குகளில் 1 ஆவது கவன ஈர்ப்புப் பகுதி – விழிப்பூட்டல்களும் செயலூட்டமும் என்பதன் கீழ் பிரசைகள் மற்றும் வாக்காளர்கள் என்ற இரு சாராரும் வாக்குரிமையும் சனநாயக உரிமையும் பற்றி போதுமானளவில் விழிப்பூட்டப்பட்டுள்ளனர் என்ற குறிக்கோளை அடைந்துகொள்வதற்காக பிரதிநிதித்துவ சனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக மகளிரையும் இளைஞர்களையும் அணிதிரட்டும் இலக்கின் கீழ் வழிமையிழந்த வாக்காளர்கள் மத்தியில் விழிப்பூட்டலை ஏற்படுத்துவதற்கான 85 நிகழ்ச்சித்திட்டங்கள் நடைபெற்றன. அந்த நிகழ்ச்சித்திட்டங்களை நிகழ்நிலை ஊடாக, இலத்திரனியல் ஊடகங்கள்/ அச்சு ஊடகங்கள் ஊடாக, பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் வெளிக்கள ஆய்வுகளும் ஊடாக மேற்கொள்ளப்பட்டன.



2025 ஆம் ஆண்டில் வலிமையிழந்த மற்றும் விளிம்புநிலை இனக் குழுமங்கள் தேர்தல் செயன்முறையில் செயலூக்கமுடன் பங்கேற்பதனை தடுக்கக்கூடிய அனைத்து முக்கிய தடைகளையும் அகற்றுவதன் கீழ் -

- தேர்தல் தொடர்பான பதங்களை உள்ளடக்கி சைகைமொழி சொற்கோவையொன்றை உருவாக்குதல்.
- பூரண வலிமையிழந்த ஆட்களுக்கு தற்காலிக அடையாள அட்டை ஒன்றை விநியோகித்தலும் (4358) வாக்கெடுப்பு நிலையத்தில் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துகின்ற சான்றிதழ் ஒன்றாக அதனை ஏற்றுக்கொள்ளலும்.
- சனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலின் போது 441 வாக்கெடுப்பு நிலையங்களின் நுழைவு வசதிகளை ஏற்படுத்தல்.
- செவிப்புலனற்ற வாக்காளர்களுக்கு வாக்கெடுப்பு நிலையத்தில் ஏற்படக்கூடிய தொடர்பாடல் சங்கடங்களைக் குறைப்பதற்காக தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு சைகை மொழி பற்றிய அடிப்படைப் பயிற்சி ஒன்றை வழங்குதல்.
- வாக்கெடுப்பு நிலைய அறிவித்தல்களை சைகைமொழியில் காட்சிப்படுத்தல்.
- சனாதிபதித் தேர்தலின் போதும் பாராளுமன்றத் தேர்தலின் போதும் வாக்குச் சீட்டுக்கு வழிகாட்டும் தொடுகைச் சட்டகத்தை உபயோகிக்கும் வாய்ப்பினை ஏற்படுத்துதல்.
- உதவியாள் ஒருவரை உடன் அழைத்துச் செல்ல சந்தர்ப்பமளித்தல்.
- பிரத்தியேக போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு சந்தர்ப்பமளித்தல்.
- வாக்கெடுப்பு நிலையத்தில் சக்கர நாற்காலி மூலம் இலவச போக்குவரத்து வசதியளித்தல்.
- சைகைமொழி மொழிபெயர்ப்புடன் கூடிய தேர்தல் முடிவுகளைப் பரப்பீடுசெய்தல்.
- தேர்தல் தொடர்பான சட்டங்களை ஒலிப்பதிவு நாடா வடிவில் தயாரித்தல்.

முதலியன மேற்கொள்ளப்பட்டன.

23. தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தையும் தேர்தல் சட்டங்களையும் அமுல்படுத்துதல் தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்

23.1. அரசியல் கட்சிகள்/ வேட்பாளர்களின் தேர்தல் பிரச்சார செலவினத்தை ஒழுங்குபடுத்தும் பொருட்டு நிறைவேற்றப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க தேர்தல்

செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டம் சனாதிபதித் தேர்தலின் போது முழுதளவில் அமுலுக்கு வந்தது.

தேர்தல் நிதியளிப்பின் வெளிப்படைத்தன்மையையும் நேர்மைத்தன்மையையும் உறுதிப்படுத்துவதற்கான ஒரு சிறப்பான நடவடிக்கையாக, சனாதிபதித் தேர்தலுக்கும் பாராளுமன்றத் தேர்தலுக்கும் உரிய பிரச்சார செலவின எல்லையை நிர்ணயிப்பதற்காக தேர்தல் ஆணைக்குழு புதிய இரு முறைமைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. நடைமுறைச் சாத்தியமுள்ள சான்றுகளினதும் தேர்தல் இயக்கவியல்களினதும் அடிப்படையிலான பிரச்சாரச் செலவின எல்லைகளை நிர்ணயிப்பதற்கு தரவுகளின் அடிப்படையிலானதும் விஞ்ஞான ரீதியில் பலமானதுமான ஓர் அணுகுமுறையைப் பயன்படுத்தி தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்க அவர்கள் இம்முறைமையைத் தயாரித்துள்ளார்.

தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்துதல, பிரச்சார நடவடிக்கைகளுக்கு அதிக செலவுகளை மேற்கொள்வதைத் தடுத்தல் என்பவற்றோடு வேட்பாளர்களுக்கு ஒத்த போட்டிக் களமொன்றை அமைத்துக்கொடுப்பதற்கான முன்னோக்கிய குறிப்பிடத்தக்க ஒரு நடவடிக்கை இம்முறைமையை அமுலுக்கிடுவதனூடாக அடைந்துகொள்ளப்பட்டது. தேர்தல் செயன்முறைகளின் கட்டமைப்புசார்ந்த, நியாயமான நிதிச் சட்டமொன்றின் தேவை குறித்த பரந்ததோர் உடன்பாட்டைப் பிரதிபலித்து, தேர்தல்களில் போட்டியிடும் அரசியல் கட்சிகளிலிருந்து உத்தேச முறைமைக்கு பரந்ததொரு ஒத்துழைப்பு கிடைத்தது. இச்செயல்முனைப்பு, இலங்கையின் சனநாயக முறையில் வகைகூறலையும் தொடர்நிலையையும் உறுதிப்படுத்துவதற்கான ஆணைக்குழுவின் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தும்.

23.2. 2023 ஆம் ஆண்டு 3 இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின பிரகாரம் தேர்தல் பிரச்சார செலவினங்கள் அடங்கிய செலவின விபரத்திரட்டு தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டு 21 நாட்களுக்குள் கட்சிச் செயலாளரின், சுயேச்சைக் குழுத் தலைவரின், வேட்பாளரின் கையொப்பம், சத்தியப் பிரமாண ஆணையாளர் சமாதான நீதவானினால் அத்தாட்சிப்படுத்தி தேர்தல் ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட வேண்டும். மேலும் வேட்பாளர் சார்பாக வழங்கப்பட்ட அல்லது பெற்றுக்கொண்ட அன்பளிப்புகள் அல்லது உதவுதொகைகள் இருப்பின் அத்துடன் அத்தகைய அன்பளிப்புகள் அல்லது உதவுதொகைகள் பொருள் ரீதியாக கிடைத்திருப்பின் அவற்றின் மதிப்பீட்டுப் பெறுமதி, அத்தகைய உதவுதொகைகள் கொடை, கடன், முற்பணம் அல்லது வைப்புக்களாக அன்பளிப்பு செய்யப்பட்டதா என்ற விபரம் தேர்தல் செலவின விபரத்திரட்டில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும் என்பதும் இங்கு வலியுறுத்தப்பட்டிருந்தது.

23.3. தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரிகள், அரச அலுவலர்கள், கண்காணிப்பு அமைப்புக்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், முகவர்கள் மற்றும் இலத்திரனியல், அச்சு ஊடக நிறுவனங்களின் தலைவர்களுடன் கலந்தாலோசித்து அதற்குரிய நடவடிக்கை செயலொழுங்கு தயாரிக்கப்பட்டது.

23.4. 2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் ஏற்பாடுகளும் மேற்படி செயலொழுங்குகளும் பற்றி மாவட்ட மட்டத்தில் மாவட்ட செயலாளர்கள், அரச அதிகாரிகள், கண்காணிப்பு அமைப்புக்கள் மற்றும் சிவில் அமைப்புக்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் Westminster Foundation for Democracy நிறுவனத்தினதும் பங்களிப்புடன் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்குகின்றவாறு நடத்தப்பட்டது.

23.5. தேர்தல் இறுதியில் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு 03 வேட்பாளர்கள் தவிர 35 பேர் தமது வருமான செலவின விபரத்திரட்டுக்களை தேர்தல் ஆணைக்குழுவிற்கு ஒப்படைத்திருந்தனர். வருமான விபரத்திரட்டுக்களை ஒப்படைக்காத வேட்பாளர்கள்/ கட்சிகள் சம்பந்தமாக சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு சட்ட

நடவடிக்கை எடுப்பதற்கு இலங்கை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

24. தகவல் தொழில்நுட்ப பாவனை

24.1. தகவல் தொழில்நுட்ப தேவைப்பாட்டு ஆய்வு, மென்பொருள்கள் உருவாக்கம், அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு

2024 செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெற்ற சனாதிபதித் தேர்தலின் போது முடிவுகளை அட்டவணைப்படுத்துவதற்கும் ஊடகங்களுக்கு வெளியிடுவதற்குமான புதிய இ-முடிவுகளைத் தயாரிக்கும் முறைமையொன்று தயாரிக்கப்பட்டது. அதன்படி தேர்தல் ஆணைக்குழுவினால் விருத்தி செய்யப்பட்ட முடிவுகளை அறிவிக்கும் முறைமை ஊடாக முடிவுகளை வெளியிடுவதற்கு வாய்ப்பு கிடைத்தது. இந்த இ-முடிவுகளை அறிவிக்கும் முறைமை மாவட்ட வாரியாக அமுல்படுத்தப்படும் முடிவுகளை அட்டவணைப்படுத்தும் முறைமை, முடிவுகளை உடனுக்குடன் ஊடகங்களுக்கு வழங்கும் முறைமை, காப்புப்பிரதி (backup) முடிவுகளின் முறைமையொன்றைக் கொண்டதாக இருந்தது. வெளியிடப்படும் முடிவுகளை பொது மக்களுக்கு இலகுவாக பெற்றுக் கொள்ளக்கூடிய, தொடர்ந்தும் முன்னெடுத்துச்செல்லக்கூடிய விதத்தில் முடிவுகள் இணையத்தளமொன்றையும் கொண்டிருந்தது.

இந்த முடிவுகளின் முறைமையை உள்ளூர் அதிகார சபைத் தேர்தலுக்குப் பயன்படுத்தக்கூடியவாறு முன்னேற்றி 2024 அக்டோபர் மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல் முடிவுகள் இதன் மூலம் வெளியிடப்பட்டன.

தேர்தல் ஆணைக்குழுவினால் விருத்தி செய்யப்பட்ட இப்புதிய முடிவுகளை அறிவிக்கும் முறைமையை மேலும் முன்னேற்றி 2024 நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலின் போது முடிவுகளை வெளியிடுவதற்காக பயன்படுத்தப்பட்டது. அதன் மூலம் மிகக் குறைந்த ஒரு காலப்பகுதியில் முடிவுகளை வெளியிடக்கூடியதாக இருந்தது. விருப்புக்களின் முடிவுகளை வெளியிடக்கூடியவாறு இந்த முடிவுகளை வெளியிடும் முறைமையை முன்னேற்றுவதன் மூலம் டிஜிட்டல் வழியில் விருப்புக்களின் முடிவுகளைத் தயாரித்து ஊடகங்களுக்கு வழங்கப்பட்டது.

சனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களின் பெயர் குறித்த நியமனங்களை முகாமை செய்வதற்கு பெயர் குறித்த நியமன முகாமைத்துவ முறைமை முன்னேற்றப்பட்டதுடன் சனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களின் தகவல்கள் இ-சேவை ஊடாக பரிசீலிக்கக்கக்கூடிய வகையில் வழங்கப்பட்டது.

பெயர் குறித்த நியமன முகாமைத்துவ முறைமையை மேம்படுத்தி பாராளுமன்றத் தேர்தலில் பெயர் குறித்த நியமன முகாமைத்துவத்திற்கு பயன்படுத்திக்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத் தேர்தலில் தோற்றிய வேட்பாளர்களின் தகவல்களை இ-சேவை ஊடாக பரீசிலிக்கக்கூடிய விதத்தில் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது. தேர்தலின் முன்னோக்கிய நடவடிக்கைகளுக்காக அச்சீட்டு அலுவல்கள், அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளல், புள்ளிவிவரங்களைப் பெற்றுக்கொள்ளல், பெயர் குறித்த நியமனங்களைப் பரிசோதித்தல் உள்ளிட்ட பெயர் குறித்த நியமனங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடியவாறு முன்னேற்றி உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

மைய வாக்கெடுப்பு நிலையங்கள் முறைமையில் கொள்திறன் பரிசோதனையொன்றை மேற்கொண்டு அதனை இற்றைப்படுத்தி 2024 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தல்களுக்காக பயன்படுத்தப்பட்டது.

அலுவலர் கணக்கெடுப்புக்காக அச்சிட்ட தரவுப்பத்திரங்களுக்குப் பதிலாக முழுமையாக இ-சேவையைப் பயன்படுத்தக்கூடியவாறு நிகழ்நிலை அலுவலர் கணக்கெடுப்புக்கான இ-சேவை மேம்படுத்தப்பட்டது. அதன்படி அதன் முன்னோடிக் கருத்திட்டமொன்றாக 2024 சனாதிபதித் தேர்தலையும், பாராளுமன்றத் தேர்தலையும் கண்டி, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் காகித பாவனையின்றி இ-சேவை ஊடாக முழுமையான அலுவலர் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.

இ-சேவையை பயன்படுத்தி பெற்றுக் கொண்ட தரவுகள் மூலம் அலுவலர் கணக்கெடுப்புக்கு உரிய எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் அலுவலர் கணக்கெடுப்பு உள்ளக தகவல் முறைமை மேம்படுத்தப்பட்டது.

நிகழ்நிலை முறையில் அஞ்சல் வாக்கு விண்ணப்பிக்கும் செய்நிரல் மேம்படுத்தப்பட்டதுடன் சுய நிகழ்நிலை விண்ணப்பித்தல் (Self- online Applying), தாபன நிகழ்நிலை விண்ணப்பித்தல் (Certifying Officer Online Applying), தரவு அச்சிடல் முறை (பகுதியளவு நிகழ்நிலை முறை) (Semi Online Data Printing Applying) ஆகிய மூன்று முறைகளின் மூலம் நிகழ்நிலை அஞ்சல் வாக்கு விண்ணப்பித்தல் வசதிகள் வழங்கப்பட்டது. அஞ்சல் வாக்கெடுப்பு முகாமைத்துவ முறைமையை மேம்படுத்துவதன் மூலம் அஞ்சல் வாக்கெடுப்புச் செயன்முறை மேலும் எளிதுபடுத்தப்பட்டது.

தேர்தல் பிணக்குத் தீர்வு முகாமைத்துவ முறைமையை (Electoral Dispute Resolution Management System) மேம்படுத்தி பயன்படுத்தல், அதன் பாவணை பற்றி அனைத்து தொழில்நுட்ப அறிவுறுத்தல்களும் சம்பந்தப்பட்ட திறத்தவர்களுக்கு வழங்குதல்.

கடந்த ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டவாறே 2024 ஆம் ஆண்டின் பொதுவான தேருநர் இடாப்பு மீளாய்வுக்கும் குறைநிரப்பு இடாப்புகளுக்கும் உரிய செய்நிரல்களை அறிமுகப்படுத்துவதுடன் இற்றைப்படுத்தப்பட்டது. மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் வாக்கெடுப்புப் பிரிவுகளுக்குப் பொறுப்பான அலுவலர்களின் அலுவல்களை வசதிப்படுத்துவதற்காக கணினிச் செய்நிரல்களை தயாரித்து மேம்படுத்தப்பட்டது.

பிரதான தேருநர் இடாப்பையும் அத்தாட்சிப்படுத்திய குறைநிரப்பு தேருநர் இடாப்புகளையும் பயன்படுத்தி இனிவரும் மீளாய்வு அலுவல்களையும் தேர்தல்களின் போது ஒருங்கிணைந்த தேருநர் இடாப்புக்களை தயாரித்துக்கொள்வதற்காக தயாரிக்கப்பட்ட கணினிச் செய்நிரல்கள் இற்றைப்படுத்தி பராமரிக்கப்பட்டது.

மீளாய்வு அலுவல்களுக்கு ஒருங்கிணைந்த இடாப்புக்களைப் பயன்படுத்தி புதிய தரவு அச்சிட்ட கணக்கெடுப்பு மாதிரிப் படிவங்கள், பன்மைப் பதிவுப் பட்டியல்கள் முதலியவற்றை அச்சிடுவதற்கு தயாரிக்கப்பட்ட கணினிச் செய்நிரல் இற்றைப்படுத்தி பராமரிக்கப்பட்டது.

மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களின் அலுவலர்களுக்கு கணனிச் செய்நிரல் மூலம் தேருநர் இடாப்பு மீளாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அவசியமான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களும்ம் வழிகாட்டல்களும் வழங்கப்பட்டதோடு, தேருநர் இடாப்பு பிரித்தெடுப்புகளை பெற்றுக் கொள்ளும் போது தேவைப்படும் தொழில்நுட்ப உதவி ஆண்டு முழுதும் உரிய காலங்களில் தொடர்ச்சியாக வழங்கப்பட்டது.

இது தவிர தேர்தல் ஆணைக்குழுவின் உள்ளக நிர்வாக அலுவல்களை எளிதுபடுத்துவதற்கு கணினிச் செய்நிரல்கள் உருவாக்கப்பட்டதோடு அவை 2024 ஆம் ஆண்டில் மேம்படுத்தி பராமரிக்கப்பட்டன.

1. தலைமை அலுவலகத்தின் அனைத்து அலுவலர்களுக்கும் நிகழ்நிலை லீவு விண்ணப்பித்தலுக்கான லீவு முகாமைத்துவ முறைமையொன்றை (Leave Management System) பராமரித்தல்.
2. தேர்தல் ஆணைக்குழுவின் வாகன முகாமைத்துவ முறைமையை (Vehicle Management System) விருத்தி செய்து பராமரித்தல்.
3. கணக்கீட்டு அலுவல்களை மேற்கொள்வதற்காக செலவின முகாமைத்துவ முறைமையை (Expenditure Management System) விருத்தி செய்து பராமரித்தல்.
4. மூலோபாய கண்காணிப்பு முறைமையை (Strategic Plan Monitoring System) விருத்தி செய்து பராமரித்தல்.
5. பெறுகைத் திட்ட கண்காணிப்பு முறைமையை (Procurement Plan Monitoring System) விருத்தி செய்தல்.
6. தனிப்பட்ட தரவு சேமிப்புச் செய்நிரல் (HRIM)

அரசியல் கட்சிகளின் தகவல்களை முகாமை செய்வதற்கான புதிய கணினிச்

செய்நிரலொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் கட்சிகளின் தகவல்களை கணினிச் செய்நிரலொன்றின் ஊடாக முகாமைச் செய்யும் வசதி வழங்கப்பட்டது.

24.2 தேர்தல் செயன்முறைக்கு உரிய பங்கீடுபாட்டாளர்களுக்கு இ-சேவையை வழங்குதல்

- இந்நாட்டின் முன்னணி தகவல் தொழில்நுட்ப விருது விழாவான பிரித்தானிய கணினிச் சங்கத்தின் (BCS) இலங்கைப் பிரிவினால் 26 ஆவது தடவையாகவும் ஒழுங்கு செய்யப்பட்ட தகவல் தொழில்நுட்ப விருதுகள் - 2024 (National ICT Awards – NBQSA - 2024) விருது விழாவின் அரசதுறை அமைப்பொன்றுக்கு அந்த அரச நிறுவனத்தின் மூலம் அதன் தகவல்களையும் தொடர்பாடல் தொழில்நுட்ப சூழலை தயார்செய்தல், போசித்தல் மற்றும் அபிவிருத்திசெய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒப்பற்ற சேவைகளுக்காக வழங்கப்படும் Public Sector Most Outstanding ICT Achievement Award இன் கீழான உயரிய விருதும், பொதுமக்களுக்காக முன்னேறிய அரச சேவைகளை வழங்குதல் அல்லது பொதுச் சேவைகளை முன்னேற்றுவதற்கான டிஜிட்டல் செயல்முனைப்புகளுக்கு அர்ப்பணித்த ஒப்பற்ற தகவல் தொழில்நுட்பப் புதுத்தாக்கங்களுக்கான (Digital Government in Public Sector and Government) பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உயரிய விருதாக வெள்ளி விருதும் தேர்தல் ஆணைக்குழுவினால் அறிமுகம்செய்யப்பட்ட தேர்தல் இ-சேவைக்கு வழங்கப்பட்டது.
- புரூணையில் நடைபெற்ற Asia Pacific ICT Alliance Award (APICTA) சர்வதேச விருது விழாவை பிரதிநிதித்துவப்படுத்தும் சந்தர்ப்பம் தேர்தல் இ-சேவைக்கு கிடைத்தது.
- மேலும் எதிர்காலத்தில் நடைபெறவுள்ள World Summit Award 2024 போட்டிக்காக தேர்தல் இ-சேவை தற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

அரசியல் கட்சி வேட்பாளர்கள், அரச நிறுவனங்கள், அரச அலுவலர்கள், வாக்காளர்கள் உள்ளிட்ட அனைத்து பங்கீடுபாட்டாளர்களுக்கும் ஆண்டுபூராகவும் தொடர்ச்சியாக இ-சேவைகள் வழங்கப்பட்டன. இங்கு, பிரதான 05 பிரிவுகளின் கீழ் சேவைகள் வழங்கப்பட்டன. இது தொடர்பாக பொதுமக்களை அறிவுறுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

1. இளம் பிரசைகளைப் பதிவுசெய்தல் (18 வயதை எய்தியவுடன் அல்லது 18 வயதை எய்துவதற்கு நெருங்கியுள்ளவர்கள்)
2. முதல் தடவையாக பதிவுசெய்தல்.
3. வசிப்பிடத்தை மாற்றுவதற்கு விண்ணப்பித்தல்.
4. தரவுகளிலுள்ள வழுக்களை சரிசெய்வதற்கு விண்ணப்பித்தல்.
5. உரிமைக்கோரிக்கை விண்ணப்பித்தல்.
6. வதிவிடத் தகவல்களில் வித்தியாசம் ஏதும் இல்லாதிருப்பின், அதனை உறுதிப்படுத்துவற்கான சேவை.

வெளிநாட்டுப் பிரசைகளுக்கான நிகழ்நிலை தேருநர் இடாப்பில் பதிவுசெய்து கொள்வதற்கு அவசியமான வசதிகளை வழங்குவதற்கான புதிய இ-சேவையொன்று பரீட்சார்த்தமாக அறிமுகப்படுத்தப்பட்டது.

தேருநர் இடாப்பில் பதிவுசெய்யப்பட்ட பிரசைகளுக்கு தமது வசிப்பிடத்தை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிப்பதற்கு 2015 ஆம் ஆண்டு முதல் இன்று வரை அத்தாட்சிப்படுத்திய தேருநர் இடாப்பின் பதிவுத் தகவல்கள் அடங்கிய தேருநர் பதிவுக் கூற்றை நாளின் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இணைய வசதிகளுடன் கூடிய சூட்டிகையான கையடக்கத் தொலைபேசியொன்று, கணினியொன்று அல்லது வேறு அவ்வாறான சாதனங்களினூடாக இச்சேவையை கட்டணமின்றி பெற்றுக்கொள்ளக்கூடிய சேவைகளை வழங்குதல்.

கிராம அலுவலர் இ-சேவையை முன்னேற்றுவதன் மூலம் தேருநர் இடாப்பு மீளாய்வுக்கு உரிய கிராம அலுவலர்களின் அலுவல்களை தேர்தல் இ-சேவை ஊடாக மிகவும் வசதியாக மேற்கொள்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது.

தேர்தலொன்றின் போது வலிமையிழந்த ஆட்களுக்கு அவசியமான வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிப்பதற்கு தயாரிக்கப்பட்ட "வலிமையிழந்த ஆட்களின் நுழைவாயில்" என்ற சேவையை வெற்றிகரமாக நடாத்திச் செல்லல்.

தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை மும்மொழிகளிலும் இற்றைப்படுத்தி தொடர்ச்சியாக பராமரித்தலும் குறிப்பாக அரசியற் கட்சிகளின் பதிவு சம்பந்தமான தகவல்கள், அரசியற் கட்சிகளின் பட்டியல், ஊடக அறிவித்தல்கள், ஊடக வழிகாட்டிநெறிகள், வர்த்தமானிகள், சுற்றறிக்கைகள் முதலான தகவல்களை ஆண்டுமுழுதும் மும்மொழிகளிலும் தேர்தல் உத்தியோகபூர்வ இணையதளத்தில் இற்றைப்படுத்துதல்.

அதேபோல் பரந்தளவில் சமூகத்தினுள் வியாபித்துள்ள சமூக ஊடக வலைத்தளங்களை உபயோகித்து பொதுமக்களுக்கு இற்றைப்படுத்திய தகவல்களை துரிதமாக வழங்குவதன் மூலம் தேர்தல் செயன்முறையை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு தகவல் தொழில்நுட்பப் பாவனையை உறுதுணையாக்கொள்ளல்.

தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தையும் உத்தியோகபூர்வ சமூக ஊடக வலைத்தளங்களையும் வலிமையிழந்த ஆட்களுக்கு நட்புறவான முறையில் பராமரித்துச் செல்வதற்குத் தேவையான அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆவணம் செய்தல்.

அரச பாடசாலைகளுக்கு முதலாம் ஆண்டில் சிறுவர்களைச் சேர்க்கும் போது தேவைப்படுகின்ற தேருநர் இடாப்பு விபரங்கள் தேர்தல் ஆணைக்குழு அனுமதித்த விலைகளின் கீழ் நிகழ்நிலை ஊடாக பாதுகாப்பான முறையில் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டது. அதேபோல் வட்டாரக் கல்வி அலுவலகங்களுக்கும் வலயக் கல்வி அலுவலகங்களுக்கும் இலவசமாக இவ்வசதி வழங்கப்பட்டது.

இது தவிர ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம், குடிசன மதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம், பதிவாளர் நாயகம் திணைக்களம், இலங்கை பொலிஸ் திணைக்களம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், கம்பனிப் பதிவாளர் திணைக்களம். தேசிய கல்வியியற் கல்லூரிகள், பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு என்பவற்றுக்கும் நலன்புரி நன்மைகள் சபையின் அஸ்வெசும நிகழ்ச்சித்திட்டத்திற்கும் தேருநர் இடாப்பு பதிவுத் தகவல்களை நிகழ்நிலை முறை ஊடாக வழங்குவதற்கு உரிய தொழில்நுட்ப உதவி வழங்கப்பட்டது.

தேர்தல் ஆணைக்குழுவின் அனைத்து பங்கீடுபாட்டாளர்களுக்கும் தேர்தல் செயன்முறையோடு சம்பந்தப்பட்ட விடயங்கள் குறித்த அறிவையும் கல்வியையும் வழங்குதல், கல்வி மற்றும் தேர்தல் பங்களிப்புக்கான முறைமை (VEEE) பராமரித்து விருத்தி செய்யப்பட்டது.

நிகழ்நிலைப் பதிவு உள்ளிட்ட தேர்தல் இ-சேவைகளைப் பயன்படுத்தும் போது பொது மக்களுக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளை நிவர்த்தி செய்துகொள்வதற்கு சம்பந்தப்பட்ட அலுவலர்களை தொடர்புபடுத்திக்கொள்வதற்காக வாட்ஸ்-எப், மின்னஞ்சல் கணக்கொன்றை ஆரம்பித்து 2024 ஆம் ஆண்டிலும் பராமரிக்கப்பட்டது.

இணையத்தளம் மற்றும் சமூக ஊடக வலைத்தளங்களினூடாக கிடைக்கும் பொதுமக்களின் முறைப்பாடுகளை உரிய தரப்புகளுக்கு அனுப்பி, அதற்கான பதில்களைப் பெற்றுக்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளும் ஆண்டுபூராகவும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன.

இ-சேவைகளைப் பயன்படுத்துவோருக்கு அவசியமான தொழில்நுட்ப உதவியை வழங்குவது தொடர்பாடல் மென்பொருள்களைப் பயன்படுத்தி மிகவும் வினைத்திறனான முறையில் மேற்கொள்ளப்பட்டது.

இது தவிர தலைமை அலுவலகத்தினதும் அனைத்து மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களினதும், அலுவலக மின்னஞ்சல் சேவை பாதுகாப்பு முறைகளை அனுசரித்து பராமரித்துச் செல்லப்பட்டது.

24.3. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்திற்கு உரிய உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுதலும் பராமரிப்பு நடவடிக்கைகளும்

தலைமை அலுவலகத்திலும் மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களிலும் நிலவும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகள் ஆண்டு பூராவும் தொடர்ச்சியாக மேம்படுத்தி பராமரிக்கப்பட்டது. இதில் தலைமை அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ள தரவு நிலையத்தின் சேவைகளைப் பராமரித்தல், காப்புகளை (backups) பெற்றுக்கொள்ளல் முதலான நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு உரிய நிறுவனங்கள் மூலம் நிறைவேற்றிக்கொள்ளப்பட்டது.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தின் பிரிவுகள் உள்ளிட்ட மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களின் கணினி, கணினி துணையுறுப்புகள், கணினி வலையமைப்புகள், BPN வலையமைப்பு, ∴பயர்வோல், ADSL இணைய முறைமைகளை பாதுகாப்பான முறையில் பராமரித்தல், உரிய முறையில் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதையும் ஆண்டு பூராகவும் தொடர்ச்சியாக நிறைவேற்றல்.

தேர்தல் ஆணைக்குழுவிற்கு தகவல் தொழில்நுட்ப கொள்கைத் தொடர் வியாபாரத் திட்டம், அர்த்த முகாமைத்துவத் திட்டம் ஆகியவற்றை தயாரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நிகழ்நிலை முறைமைகளைப் பயன்படுத்தி தலைமை அலுவலகம், அனைத்து மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்கள் மற்றும் வெளித் தரப்புகளுக்கு கூட்டங்களை நடத்துவதற்கான Video Conferencing தொழில்நுட்ப உதவி வழங்கப்பட்டது.

தலைமை அலுவலகத்தின் பாதுகாப்பு கமரா தொகுதியை (CCTV) விஸ்தரித்தலும் அதனோடு சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளும் ஆண்டு முழுவதும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன.

25. சட்ட அலுவல்கள்

2024 ஆம் ஆண்டில் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளரையும் அதன் உறுப்பினர்களையும் தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரிகளையும் எதிராளிகளாகக் குறிப்பிட்டு புதிதாக தாக்கல் செய்யப்பட்ட 27 வழக்குகள் பற்றி தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிக்கையிடப்பட்டுள்ளன.

25.1. உயர்நீதிமன்றம்

தேர்தல் ஆணைக்குழுவிற்கு எதிரான அடிப்படை உரிமை மீறல் சம்பந்தமான 13 மனுக்களும், 10 ரிட் மனுக்களும் என்ற வகையில் உயர்நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட 23 வழக்குகள் உள்ளன.

உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை 2024 சனாதிபதித் தேர்தலை நடாத்துவதன் ஊடாக தனது அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாக குறிப்பிட்டு SC/FRA/177/2024, SC/FRA/191/2024 ஆம் இலக்க வழக்குகளும், 2024 பாராளுமன்றத் தேர்தலுக்காக 2024.11.14 ஆம் திகதி பெயர் குறிப்பீடு செய்வதற்கு எதிரான SC/FRA/292/2024, SC/FRA/295/2024 ஆகிய இலக்க வழக்குகளும், 2024 பாராளுமன்றத் தேர்தலின் பெயர் குறித்த நியமனங்களை நிராகரித்தல் சம்பந்தமான SC/Writ/11/2024, SC/Writ/12/2024, SC/Writ/13/2024, SC/Writ/14/2024, SC/Writ/15/2024 ஆகிய வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அதேபோல் பாராளுமன்றத் தேர்தலில் ரஞ்சன் ராமநாயக்க அவர்களின் நியமனப்பத்திரத்தை ஏற்றுக்கொள்வதற்கும் தேர்தலில் தோற்றுவதற்கும் வாய்ப்பளித்தல் சம்பந்தமான 01 வழக்கும் (வழக்கு இலக்கம் - SC/Fra/296/2024) முஜிபுர் ரஹ்மான் அவர்களை தேசியப் பட்டியல் வேட்பாளர் ஒருவராக நியமித்தமை சம்பந்தமான 01 வழக்கும் (வழக்கு இலக்கம் - SC/Fra/160/2024), 2023 உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் நியமனப்பத்திரங்களை இரத்துச் செய்யாதநிலையில் வாக்கெடுப்பை நடாத்துதல் சம்பந்தமான 03 வழக்குகளும் (வழக்கு இலக்கங்கள் - SC/Fra/309/2024, SC/Fra/328/2024, SC/FRA/335/2024) தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மேலும், தேருநர் இடாப்பிலிருந்து பெயர் நீக்கப்பட்டமை சம்பந்தமான SC/Writ/02/2024, SC/Writ/03/2024 இலக்க வழக்குகளும், லிபரல் ஜனநாயக கட்சியின் வருடாந்த சம்மேளன அறிக்கையை ஏற்றங்கீகரித்தல் சம்பந்தமான SC/Writ/04/2024 இலக்க வழக்கும், சிறைத்தண்டனை அனுபவிக்கும் ஆட்களுக்கு வாக்குரிமையை வழங்குதல் சம்பந்தமான SC/Writ/08/2024 இலக்க வழக்கும், இலங்கை மக்கள் கட்சியை செயலிழக்கச் செய்தமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட SC/Writ/09/2024 இலக்க வழக்கும், 2023 உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் கால பகுதியினுள் சமுதாய மதியுரைக் குழுக்களை நிறுவுதல் சம்பந்தமான SC/FRA/139/2024) இலக்க வழக்கும் SC/FRA/143/2024) இலக்க வழக்கும், துறைமுக அதிகார சபையின் முகாமைத்துவ பணிப்பாளர் சேவையிலிருந்து நீக்கப்பட்டமை சம்பந்தமான SC/FRA/299/2024) இலக்க வழக்கும், 2024 சனாதிபதித் தேர்தல் காலப்பகுதியினுள் சட்டவிரோதமான முறையில், வெளிப்படைத் தன்மையின்றி புதிதாக மதுபான அனுமதிப் பத்திரங்களை வழங்குவதனூடாக தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்ட SC/FRA/318/2024) இலக்க வழக்கும் என்றவாறு 2024 ஆம் ஆண்டில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

25.2. மேன்முறையீட்டு நீதிமன்றம்

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 3 வழக்குகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவ்வழக்குகளில் 2024 பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் பெயர் குறித்த நியமனங்கள் நிராகரிக்கப்பட்டமை சம்பந்தமான 02 வழக்குகளும் (வழக்கு இலக்கம் - CA/Writ/664/2024, CA/Writ/666/2024) துறைமுக அதிகார சபையின் முகாமைத்துவப் பணிப்பாளர் சேவையிலிருந்து நீக்கப்பட்டமை சம்பந்தமான 1 வழக்கும் (வழக்கு இலக்கம் - CA/Writ/637/2024) என்றவாறு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

25.3. மேல் நீதிமன்றம்

2024 ஆம் ஆண்டில் தேர்தல் ஆணைக்குழுவை ஒரு தரப்பாகக் குறிப்பிட்டு மேல் நீதிமன்றத்தில் எந்தவொரு வழக்கும் தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.

25.4. மாவட்ட நீதிமன்றம்

மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 1 வழக்கு காணப்படுவதுடன் அந்த வழக்கு 2024 தேருநர் இடாப்பில் பெயர் உட்சேர்க்கப்படாமை சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது (வலஸ்முல்ல மாவட்ட நீதிமன்ற வழக்கு இலக்கம் - SPL-01)

25.5. நீதவான் நீதிமன்றம்

2024 ஆம் ஆண்டில் தேர்தல் ஆணைக்குழுவை ஒரு தரப்பாகக் குறிப்பிட்டு நீதவான் நீதிமன்றத்தில் எந்தவொரு வழக்கும் தாக்கல் செய்யப்படவில்லை.

உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேற்குறிப்பிட்ட வழக்குகளில் 14 வழக்குகள் கௌரவ நீதிமன்றத்தினால் இறுதித் தீர்ப்பளிப்பட்டதன் மூலமும் மனுதாரர்களினால் வாபஸ் பெறப்பட்டதன் காரணமாகவும் முற்றுப்பெற்றுள்ளன. 09 வழக்குகள் கௌரவ நீதிமன்றத்தில் தற்போது விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 03 வழக்குகளில் 02 வழக்குகள் தற்போது முற்றுப்பெற்றுள்ளன. 01 வழக்கு மாத்திரம் விசாணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு மாவட்ட நீதிமன்றத்தில் இன்னும் விசாரிக்கப்பட்டு வருகிறது.

சட்ட அந்தஸ்து பற்றி சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரல்கள் (06) அனுப்பி வைக்கப்பட்டுள்ளதோடு, கௌரவ சட்டமா அதிபர் வழங்கிய ஆலோசனைகள் குறித்து சம்பந்தப்பட்ட தரப்புகள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமிருந்து கிடைக்கப்பெற்ற 05 முறைப்பாடுகளுக்கு உரிய தரப்புகளிடமிருந்து தகவல் கோரி அவசிய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேபோல் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழுவிற்கு உரிய 04 விசாரணைகளுக்கு அவசியமான தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன.

தேருநர் இடாப்பு மீளாய்வுக்கு (2024) இற்கு உரிய சிறைத்தண்டனை அனுபவிக்கும் 92 பேரை கறைநிரலில் சேர்ப்பதற்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. தேருநர் இடாப்பு மீளாய்வு (2024) இற்குரிய சமர்ப்பிக்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளுக்கும் ஆட்சேபனைகளுக்கும் உரிய 30 அறிவுறுத்தல் வழங்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

26. கட்டுமாணங்களும் புதுப்பித்தல்களும் (செலவு விடயம் 2001)

தேர்தல்கள் செயலகத்தின் தேசிய தேர்தல்கள் கிளையின் சுவர் அலுமாரிக்கான கதவுகளைத் தயாரித்து பொருத்தியிணைத்தல், வடக்குமுனைக் கட்டிடத்தின் கீழ்த்தளத்தின் புதுப்பித்தல், தரவு நிலையத்தின் புதிய மின்னிணைப்புகள், பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்) உத்தியோகபூர்வ அறையை மீள்நிறுவுதல், தேர்தல்கள் செயலகத்தின் தொலைபேசி வடங்களை முறையாக மீள்நிறுவுவதற்கு உரிய அவசர புதுப்பித்தல் வேலைகள், வடக்குமுனைக் கட்டிடத்தின் பாதுகாப்பு அறையின் இரும்பு இறாக்கைகளைப் பொருத்துதல் உள்ளிட்ட புதுப்பித்தல் வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேபோல் கம்பஹா, களுத்துறை, கண்டி, நுவரெலியா, காலி, வவுனியா, மன்னார், திருகோணமலை, குருணாகல், பொலன்னறுவை, பதுளை, கேகாலை ஆகிய மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களின் புதுப்பித்தல் வேலைகளும் கம்பஹா மற்றும் கண்டி மாவட்ட பிரதி தேர்தல்கள் ஆணையாளர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களையும் நுவரெலியா, அம்பாந்தோட்டை, அம்பாறை, கேகாலை ஆகிய மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களின் புதுப்பித்தல் வேலைகளும் திருகோணமலை சுற்றுலா பங்களாவின் அவசர புதுப்பித்தல் வேலைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

27. நிதிக் கட்டுப்பாடு

2024 ஆம் ஆண்டுக்கான செலவினங்களை மேற்கொள்வதற்கு ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் 16.254 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீண்டெழும் செலவினங்களை மேற்கொள்வதற்கான 1111.02 மில்லியன் ரூபாவும், மூலதனச் செலவினங்களை மேற்கொள்வதற்கான 143 மில்லியன் ரூபாவும், தேர்தல் செலவினங்களுக்கான 15 பில்லியன் ரூபாவும் இந்நிதிஒதுக்கீட்டில் அடங்கும்.

மீண்டெழும் செலவினங்களை மேற்கொள்வதற்கு ஒதுக்கீடுசெய்யப்பட்ட நிதி ஒதுக்கீடுகளில் இருந்து 2024.12.31 ஆம் திகதி வரை 1094 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. மூலதனச் செலவினங்களை மேற்கொள்வதற்கு ஒதுக்கீடுசெய்யப்பட்ட நிதி ஒதுக்கீடுகளிலிருந்து 2024.12.31 ஆம் திகதி வரை 89 மில்லியன் ரூபாவும், தேர்தல்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடுகளிலிருந்து 13.245 பில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் பணியாட்குழுவினருக்கு கடன் வசதியளிப்பதற்காக அரசாங்க அலுவலர்களின் முற்பண "B" கணக்கின் கீழ் 18 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் 17 மில்லியன் ரூபா கடன் முற்பணங்கள் 2024.11.30 ஆம் திகதியாகும்போது பணியாட்குழுவினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

28. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

தேர்தல் ஆணைக்குழு சம்பந்தமான 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடர்ப் பதிவேடு உள்ளக கணக்காய்வு பிரிவினால் தயாரிக்கப்பட்டது. அதன் துணையுடன் இடர்களை அடிப்படையாகக் கொண்ட வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் வெளியிடப்பட்டது. ஆண்டின் ஆரம்பத்தில் குறித்த திட்டத்தை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு சமர்ப்பித்து அனுமதி பெறப்பட்டது.

அந்த வருடாந்த கணக்காய்வுத் திட்டத்திற்கு இசைவானதாக 2024 ஆம் ஆண்டின் பின்வருமாறு கணக்காய்வுப் பரிசோதனைகளையும் விசாரணைகளையும் மேற்கொண்டு அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. வெளியிடப்பட்ட அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் சம்பந்தமாக தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4)(3) உப பிரிவின் படி செயலாற்றப்பட்டுள்ளது.

தேர்தல் செயலகத்தின் ஒவ்வொரு பிரிவு சம்பந்தமாகவும் 3 கணக்காய்வு பரிசோதனைகளையும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள் சம்பந்தமாக 11 கணக்காய்வு பரிசோதனைகளையும் மேற்கொண்டு 14 அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளதுடன் வருடாந்த தேருநர் இடாப்பிற்கு உரிய 2 விசாரணை அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. இது தவிர 2024 ஆம் ஆண்டின் நடைபெற்ற 2 தேசிய அளவிலான தேர்தல்கள் சம்பந்தமான நிலைய பரிசோதனைகள் உள்ளிட்ட 08 விசாரணைகளை மேற்கொண்டு ஆண்டு இறுதியளவில் 06 அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2024 ஆம் ஆண்டில் நடைபெற்ற 02 தேசிய தேர்தல்கள் சம்பந்தமாக நியதிச்சட்ட அடிப்படை ஏற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட நேரிட்டமையால், வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தை அவ்வாறே அமுல்படுத்துவதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. அதன்படி, வருடாந்த கணக்காய்வுத் திட்டம் திருத்தப்பட்டது. குறித்த திருத்தங்கள், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டது. அதன்படி, 2024 ஆம் ஆண்டில் கணக்காய்வுக்கு உட்படுத்த வாய்ப்பு கிடைக்காத மாவட்டங்களுடன் சேர்த்து நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்குகின்றவாறு குறித்த 02 தேசிய தேர்தல்களின் நிதிக் கட்டுப்பாடும் தேர்தல் செயற்பாட்டின் செயலாற்றுகையும் குறித்த இடைக்கால கணக்காய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதன்படி, ஆண்டு இறுதியளவில் 06 மாவட்டங்கள் தொடர்பில் இடைக்கால கணக்காய்வுப் பரிசோதனைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

மேற்படி கணக்காய்வு அவதானிப்புகளின் துணையுடன் எதிர்வரும் தேர்தல்களும் வாக்கெடுப்புக்களும் தொடர்பில் எழுகின்ற கணக்காய்வு ஐயவினாக்களைக் குறைத்துக் கொள்வதை நோக்காகக்கொண்டு புதிய உள்ளக கட்டுப்பாட்டு நுட்பமுறைகளும் தேர்தல் செயற்பாட்டின் நேர்ப்படியான நிலையை உறுதிப்படுத்துகின்ற முன்னைய நுட்பங்களும் முன்மொழியப்படுகின்றன.

அதேபோல், தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 41(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படி 2024 ஆம் ஆண்டில் 04 முகாமைத்துவ கணக்காய்வுக் குழுக்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன் 04 குழு அறிக்கைகள் வெளியிடப்பட்டன.

29. வெளிநாட்டுப் பயிற்சிகளும் புலமைப் பரிசில்களும்

புத்தளம் மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. எஸ்.எல்.ஆர்.கஜநாயக்க 2024.01.07 ஆம் திகதியிலிருந்து 2024.01.14 ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெற்ற தேர்தல் திட்டமிடல் பற்றிய பயிற்சிச் செயலமர்வில் கலந்து கொண்டார்.

தேர்தல்கள் செயலகத்தின் கணக்காளர் (கொடுப்பனவு) திருமதி. வை.டி.கமகே 2024.05.12 ஆம் திகதியிலிருந்து 2024.05.25 ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெற்ற நாடுதழுவிய சேவையில் அலுவலர்களுக்கான திறன் அபிவிருத்தி பயிற்சிச் செயலமர்வில் கலந்துகொண்டதுடன் அது மிகவும் பயன்கூர் பயிற்சியொன்றாக அமைந்ததாக அந்த அலுவலர் அறிவித்துள்ளார்.

தேர்தல்கள் செயலகத்தின் தகவல் தொழில்நுட்ப அலுவலர் திருமதி பீ.டி.டி.விக்கிரமசிங்க 2024.06.22 ஆம் திகதியிலிருந்து 2024.07.07 ஆம் திகதி வரை அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற Australia Awards Regional Short Course - Governing in the Digital Age பயிற்சிப் பாடநெறியில் கலந்து கொண்டார்.

30. வெளிநாட்டு கருத்தரங்குகளும் உத்தியோகபூர்வ விஜயங்களும்

தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளரான ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க, மேலதிக தேர்தல்கள் ஆணையாளரான (நிர்வாகம்) பி.எம்.பீ.ஜீ.பீ.வீ. பண்டார ஆகியோர் 2024.01.23 ஆம் திகதியிலிருந்து 2024.01.27 ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெற்ற ஆசிய தேர்தல் அதிகாரிகள் சங்கத்தின் நிறைவேற்று சபைக் கூட்டத்திலும், 14 ஆவது தேசிய வாக்காளர் தினக் கொண்டாட்டத்திலும், 2024.01.26 ஆம் திகதி நடைபெற்ற குடியரசு தின நினைவு வைபவத்திலும் கலந்து கொள்வதற்காக வெளிநாடு சென்றனர். வெளிநாடுகளின் தேர்தல் முகாமைத்துவம் பற்றிய அனுபவங்களை பரிமாரிக்கொள்வதற்கு அந்த அமர்வுகள் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தன.

தேர்தல் ஆணைக்குழுவின் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (சட்டம் விசாரணை மற்றும் திட்டமிடல்) பி.பீ.சீ.குலரத்ன, பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் (கொழும்பு நகர) எம்.எம்.எஸ்.கே. பண்டார மாப்பா ஆகியோர் 2024.02.11 ஆம் திகதியிலிருந்து 2024.02.16 ஆம் திகதி வரை இந்தோனேசியாவில் நடைபெற்ற தேர்தல் கண்காணிப்பு நிகழ்வின் கலந்துகொள்வதற்கு வெளிநாடு சென்றனர்.

தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் திரு. ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க 2024.03.13 ஆம் திகதியிலிருந்து 2024.03.20 ஆம் திகதி வரை ரஷ்யாவில் நடைபெற்ற சனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு நிகழ்வில் கலந்துகொள்ள வெளிநாடு சென்றார்.

தேர்தல் ஆணைக்குழுவின் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (உள்ளூராட்சி) திரு. எஸ். அச்சுதன், அம்பாறை மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளர் திரு. ஏ.எம்.கே.எஸ். அத்தநாயக்க 2024.05.04 ஆம் திகதியிலிருந்து 2024.05.09 ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெற்ற இந்திய தேர்தல் கண்காணிப்பு நிகழ்வில் கலந்துகொள்ள வெளிநாடு சென்றனர்.

31. 2024 ஆம் ஆண்டில் உள்நாட்டு பயிற்சிகள்

2024 யூலை மாதம் 3, 4 ஆகிய இரு தினங்களிலும் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகத்தில் தேர்தல் முறைமைகள் பற்றிய பயிற்சி செயலமர்வுக்கு மாவட்ட பிரதி அல்லது உதவித் தேர்தல்கள் ஆணையாளர் உள்ளிட்ட 30 அதிகாரிகளை கலந்து கொள்ள செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இரண்டாம் மொழி தமிழ் 200 மணித்தியால பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் தேர்தல் ஆணைக்குழுவில் நடைபெற்றது. அதில் தேர்தல் ஆணைக்குழுவின் 4 அலுவலர்களை கலந்துகொள்ளச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இரண்டாம் மொழி தமிழ் 100 மணித்தியால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் தேர்தல் ஆணைக்குழுவில் நடைபெற்றது. அதில் தேர்தல் ஆணைக்குழுவின் 4 அலுவலர்களை கலந்துகொள்ளச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இரண்டாம் மொழி சிங்களம் 100 மணித்தியால பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக தேர்தல் ஆணைக்குழுவின் 3 அலுவலர்களை கலந்துகொள்ளச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2024 சனவரி மாதம் 30, 31 ஆகிய தினங்களில் திறன் அபிவிருத்தி நிதிய நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட நிதிப்பிரமாணங்கள் 104 நட்டங்களை அறிக்கையிடுதல், இழப்பீடும், கணக்கு பதிதலும் பற்றிய பயிற்சிப் பாடநெறிக்கு தேர்தல் ஆணைக்குழுவின் முகாமைத்துவ சேவை அலுவலர் கே.ஆர். ஞானேந்திரம் அவர்களை கலந்துகொள்ளச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2024 பெப்ரவரி மாதம் 20, 21 ஆகிய இரு தினங்களில் தேசிய உழைப்பாளர் கல்வி நிறுவகத்தில் அலுவலக ஊழியர் சேவையின் அலுவலர்களுக்காக நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்கு தேர்தல்

ஆணைக்குழுவில் பணி புரியும் 09 அலுவலக பணியாளர் சேவையைச் சேர்ந்தவர்களை கலந்துகொள்ளச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது

கொழும்புப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட Master of Cyber Security Degree பாடநெறிக்கு கேகாலை மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளர் கே.எச்.எம்.பீ.கஸ்தூரிசிங்க அவர்களை கலந்துகொள்ளச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சம்பள மாற்றீடு செய்தல் பற்றிய ஒரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை 2024 மார்ச் 15 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவில் 17 அலுவலர்களின் பங்கேற்புடன் இராஜகிரிய தேர்தல்கள் செயலகத்தின் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2024 மே மாதம் 30, 31 ஆகிய இரு தினங்களிலும் திறன் அபிவிருத்தி நிதியத்தினால் (SDFL) நடாத்தப்பட்ட களஞ்சிய முகாமையும் கொள்வனவுகளும் பற்றிய பயிற்சி பாடநெறியில் தேர்தல் ஆணைக்குழுவின் ஆர்.கே.எஸ் வீரசிங்க அவர்களை கலந்துகொள்ளச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மொறட்டுவ பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட CISCO Certified Network Associate (CCNA) பாடநெறியில் தகவல் தொழில்நுட்ப அலுவலர் திருமதி ஜீ.டி.டி.எம். விக்ரமசிங்க அவர்களை கலந்துகொள்ளச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2024 யூன் 14 ஆம் திகதி திறன் அபிவிருத்தி நிதியத்தினால் நடாத்தப்பட்ட பெறுகைச் செயன்முறை பற்றிய சான்றிதழ் பாடநெறியில் தேர்தல் ஆணைக்குழுவின் முகாமைத்துவ சேவை அலுவலர் சந்திம ஜாகொட ஆரச்சி அவர்களை கலந்துகொள்ளச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

திறன் அபிவிருத்தி நிதியத்தினால் நடாத்தப்பட்ட அரச பெறுகை செயன்முறை பற்றிய இரு வார கால பயிற்சிப் பாடநெறியில் தேர்தல் ஆணைக்குழுவின் முகாமைத்துவ சேவை அலுவலர் திரு. கே.டப்ளியூ.பீ. மதுரங்க கலந்து கொண்டார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் Master of Admin and Management பாடநெறியில் மட்டக்களப்பு மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளர் எம்.பி.எம். சுபியான் அவர்களை கலந்துகொள்ளச் செய்யப்பட்டது.

32. தேர்தல் முறைமைகளுக்கான சர்வதேச ஒழுங்கமைப்பினால் (IFES) நடத்தப்பட்ட பயிற்சிகள்

2024 சனவரி மாதம் 09 ஆம் திகதி முதல் 2024 சனவரி மாதம் 12 ஆம் திகதி வரையும், 2024 சனவரி மாதம் 16 ஆம் திகதி முதல் 2024 சனவரி மாதம் 19 ஆம் திகதி வரையும் BRIDGE பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் செயலமர்வு தேர்தல் ஆணைக்குழுவின் 09 அலுவலர்களும் வெளிநாட்டு தேர்தல் முகாமைத்துவ நிறுவனங்களின் பிரதிநிதிகளும் உள்ளிட்ட 15 பேரின் பங்கேற்புடன் வத்தளையில் நடைபெற்றது.

தேர்தல்களுக்குரிய செயற்பாட்டுத் திட்டமும் தேர்தல் செலவின எல்லைகள் பற்றிய பயிற்சி செயலமர்வொன்றும் 63 அலுவலர்களையும் பங்கேற்புடன் 2024 ஏப்ரல் மாதம் 3 - 5 ஆம் திகதி வரை கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடைபெற்றது.

மகளிர் அபிவிருத்தி அலுவலர்களின் பயிற்சி குழாமொன்றை நிறுவுவதற்கான ஒரு பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் 30 மகளிர் அபவிருத்தி அலுவலர்களின் (பெண்) பங்கேற்புடன் 2024.05.09 – 10 ஆகிய இரு தினங்களிலும் கொழும்பில் நடைபெற்றது.

தேர்தல் நடவடிக்கைத் திட்டம் பற்றி மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள்/ அரசாங்க அலுவலர்கள்/ மாவட்ட செயலாளர்கள் மற்றும் தேர்தல்களில் ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பதவிநிலை அலுவலர்கள்/ குழுத் தலைவர்கள் உள்ளிட்ட

அலுவலர்களுக்கான பயிற்சி கம்பஹா, குருநாகல், மாத்தளை, யாழ்ப்பாணம், பதுளை, அம்பாறை, பொலன்னறுவை, கேகாலை ஆகிய 08 மாவட்டங்களில் வழங்கப்பட்டது.

33. அரசியல் ரீதியாக பெண்களை வலுவூட்டல்

"சனநாயக உரிமைகளைக் காப்பதில் பெண்களின் செயற்பணி" என்ற தலைப்பில் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்குகின்றவாறு அரச சேவையிலுள்ள பெண் அலுவலர்கள், அரசியலில் ஈடுபட்டுள்ள அரசியல் முன்னணி செயற்பாட்டாளர்கள் 2,562 பேரை பங்கேற்புடன் 29 பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்த நடவடிக்கையெடுக்கப்பட்டது.

34. பயிற்றுவிப்பாளர் குழாமொன்றை நிறுவுதலும் அவர்களை அறிவூட்டுதலும்

சிவில் அமைப்புகளுக்கும் கிராமிய சமூக அமைப்புகளுக்கும் "வாக்குரிமை பராதீனப்படுத்த முடியாத ஓர் உரிமை" என்ற தலைப்பின் கீழ் பயிற்றுவிப்பாளர் குழாமொன்றை நிறுவுவதற்கும் அக்குழுவிற்கு சமூகத் தலைவர்கள்/ பெருந்தோட்டப் பகுதிகளின் முக்கிய செயற்பாட்டாளர்கள் ஆகியோர் உள்ளடங்குவதுடன் 1,210 பயிற்றுவிப்பாளர்கள் 2024 ஆம் ஆண்டில் பயிற்றுவிக்க நடவடிக்கையெடுக்கப்பட்டது. தேர்தல் செயன்முறைப் பற்றி பொதுமக்களை அறிவுறுத்துவதற்காக வசதியளிப்பாளர்களாக அவர்களை ஈடுபடுத்த நடவடிக்கையெடுக்கப்பட்டது.

35. இடமாற்றல்களும் இணைத்தல்களும்

தேர்தல் ஆணைக்குழுவின் பதவிநிலை அல்லாத பின்வரும் பதவிகளிலிருந்த வெற்றிடங்களுக்கு இடமாற்றலாகி வர விரும்பிய வேறு அரச திணைக்களங்களின் பணி புரியும் அலுவலர்களை தேர்தல் ஆணைக்குழுவிற்கு உகந்ததாக இருந்தமையால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்து இவ்வாணைக்குழுவிற்கு இடமாற்றம் செய்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் தேர்தல் ஆணைக்குழுவிற்கு வெளியே இடமாற்றல்களை கோரிய அலுவலர்களை விடுவிப்பதற்கும் நடவடிக்கையெடுக்கப்பட்டது.

பதவி	இடமாற்றம் பெற்று வந்த அலுவலர்களின் எண்ணிக்கை	வெளியே இடமாற்றல்கள் பெற்றுச் சென்ற அலுவலர்களின் எண்ணிக்கை
முகாமைத்துவ சேவை அலுவலர்	19	09
அபிவிருத்தி அலுவலர்	17	-
தகவல் தொழில்நுட்ப மற்றும் தொடர்பாடல் உதவியாளர்	01	-
அலுவலகப் பணியாளர்	04	06

இந்த ஆணைக்குழுவில் நடைபெற்ற தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் வெற்றிடமொன்றுக்கு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைக்கு புதிதாக நியமனம் பெற்ற அலுவலர் ஒருவரை வழங்க இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் நடவடிக்கை எடுத்தார்.

தேர்தல் ஆணைக்குழு நிறுவப்பட்ட பின் தயாரிக்கப்பட்ட நான்காண்டு மூலோபாயத் திட்டத்தின்படி அமுலிலுள்ள கருத்திட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும் காரணமாக முன்னரை விட (தேர்தல்கள் திணைக்களம் காணப்பட்ட காலப்பகுதியில் (தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பணி விரிவடைந்துள்ளது. இந்த கடமைப்பளுவைக் கருத்திற்கொண்டு 25 அபிவிருத்தி அலுவலர் பதவிகளை புதிதாக ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

36.வாகன பாவனையும் பராமரிப்பும்

தேர்தல் ஆணைக்குழு வசம் 61 வாகனங்களின் குழாமொன்று காணப்படுவதோடு அவற்றில் தலைமை அலுவலகத்தின் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு 33 வாகனங்களும் 28 வானகங்கள் மாவட்ட அலுவலகங்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் ஈடுபடுத்தப்படுகின்றன. 2024 ஆம் ஆண்டில்

தலைமை அலுவலகம் வசமுள்ள வாகனங்களின் சேவைகள் மற்றும் புதுப்பித்தல் நடவடிக்கைகளுக்கான செலவு 35,925,334.62 ரூபாவாகும். இவ்வாண்டில் தலைமை அலுவலகத்தின் வாகனங்களுக்கு எரிபொருள் செலவு 26,927,699.85 ரூபாவாகும். சனாதிபதித் தேர்தலும் பாராளுமன்றத் தேர்தலும் இவ்வாண்டில் நடைபெற்றமையால் அவற்றுக்கான செலவுகளையும் உள்ளடக்கி இக்கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

37. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்திற்குரிய நடவடிக்கைகள்

2024.01.01 ஆம் திகதியிலிருந்து 2024.12.31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதினுள் தகவலுக்கான உரிமைச் சட்டம் தொடர்பில் கோரப்பட்ட 194 தகவல்களில் 190 தகவல்களுக்கு உரிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. வேறு பிரிவுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட தகவல் கோரல்களின் எண்ணிக்கை 04 ஆகும்.

38. ஊடக ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்

தேர்தல் ஆணைக்குழுவினால் உரிய காலப்பகுதியினுள் எடுக்கப்பட்ட ஆணைக்குழு முடிவுகள், கருமங்கள், நடத்தப்படவிருந்த 2023 உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலுக்குரிய, 2024 ஆம் ஆண்டில் நடைபெற்ற சனாதிபதித் தேர்தல், 2024 பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் அரச அலுவலர்கள், அரச நிறுவனங்கள், அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் தோற்றச் செய்த வேட்பாளர்களையும், பொது மக்களையும் அறிவுறுத்துவதற்காக 211 ஊடக அறிவித்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த ஊடக அறிவித்தல்கள் மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டன. அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களுக்கும் அவை அனுப்பிவைக்கப்பட்டன.
அந்நிறுவனங்களுக்குரிய ஊடகங்கள் மூலம் அறிவித்தல் குறிப்பிடப்படுள்ள விடயங்கள் குறித்து பொதுமக்களை அறிவுறுத்த நடவடிக்கையெடுக்கப்பட்டது. அதேபோல் ஊடக அறிவித்தல்கள் தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் வெளியிடப்பட்டன.

அதேபோல் வாக்கெடுப்புக்கள் மற்றும் தேர்தல் நடவடிக்கைகள் குறித்து அனைத்து ஊடக தலைவர்கள், ஊடகவியலார்களுடன் பல கலந்துரையாடல்கள் நடைபெற்றன. அக்கலந்துரையாடல்கள் தேர்தல் ஆணைக்குழுவிலும் அரசாங்க தகவல் திணைக்களத்திலும் நடைபெற்றன.
அனைத்து ஊடக நிறுவனங்களின் தலைவர்கள், ஆசிரியர்கள், செய்தி ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோரை உள்ளடக்கிய WhatsApp குழுமம் ஒன்றின் ஊடாக சம்பந்தப்பட்ட அனைத்து தகவல்களையும் வழங்கும் முறைமையொன்றும் நிறுவப்பட்டு அமுல் படுத்தப்பட்டது.

சனாதிபதித் தேர்தலுக்கும், பாராளுமன்றத் தேர்தலுக்குமுரிய நியதிச் சட்ட மற்றும் அத்தியவசியமாக அறிவுறுத்தப்பட வேண்டிய விடயங்கள் குறித்து பொதுமக்களை அறிவுறுத்துவதற்காக மும்மொழிகளிலும் 08 அறிவித்தல்கள் செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்பட்டன.

தேர்தல் ஆணைக்குழுவினால் IFES நிறுவனத்தினதும் நிதி அனுசரணையுடன் "சிரவாஞ்ஜன" என்ற பெயரில் புதிய ஊடக அலகொன்று நிறுவப்பட்டது. இந்த அலகினால் தேர்தல் ஆணைக்குழு மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் நியதிச்சட்ட அறிவித்தல்களை இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களுக்கு வழங்கப்பட்டன. அதேபோல் கடந்த 2024 சனாதிபதித் தேர்தலின் போதும் 2024 பாராளுமன்றத் தேர்தலின் போதும் தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ சமூக ஊடகங்களுக்கு தேர்தலின் ஆரம்பம் முதல் முடிவுகளை வெளியிட்டு முடியும் வரை நேரலை ஒளிபரப்புகள் ஊடாக பொதுவான அறிவித்தல்களும் விழிப்புட்டல்களும் தேர்தல் முடிவுகளும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

39. சுவடிக்கூடம்

தேர்தல் ஆணைக்குழுவில் சுவடிக்கூடத்தின் பணிகளை மிகவும் ஒழுங்கமைந்த விதத்தில் முன்னெடுத்துச் செல்ல நடவடிக்கையெடுக்கப்பட்டது. அதிலுள்ள

ஆவணங்களை பெரிதும் பாதுகாத்து அவற்றை தேவையானவாறு எந்தவொரு தரப்பினரும் வசதியாக பார்வையிடக்கூடியவாறு உரிய முறையில் களஞ்சியத்திட்டு வைக்கும் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது.

40. அறிவு முகாமைத்துவ அலகும் அரும்பொருட் காட்சிச்சாலையும்

தேர்தல் ஆணைக்குழுவின் பணிகளும் கடமைகளும் குறித்த தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும் அதற்குக் கிடைக்கும் கோரிக்கைகளின் எண்ணிக்கையும் நாளாந்தம் அதிகரித்த வண்ணமுள்ளது. இவ்விடயம் பற்றி ஆய்வுகளில் ஈடுபடும் கல்விமான்கள், ஆராய்ச்சியாளர்கள், அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகள், தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் அவற்றிடையே முக்கியமானவையாகும். ஆகையால் இத்தகவல் தேடுவோரின் பணிகளை மிகவும் வினைத்திறனாகவும் பயன்கூர் விதத்திலும் நிறைவேற்றுவதற்கு தேர்தல் ஆணைக்குழுவில் அறிவு முகாமைத்துவ அலகொன்று நிறுவப்பட்டது. அதற்காக தற்போதுள்ள தேர்தல் சட்டத்திட்டங்கள், ஒழுங்குவிதிகள், அறிக்கைகள் மற்றும் ஆவணங்களை களஞ்சியத்திடுவதற்கும், பயன்படுத்துவதற்கும் வசதியானதாக அமையும் பொருட்டு முறையான ஒரு பொறிமுறை நிறுவப்பட்டுள்ளது. இது தவிர தேர்தல் செயன்முறையோடு சம்பந்தப்பட்ட அனைத்துத் தகவல்களையும் வழங்குவதற்கும் நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.
எதிர்காலத்தில் இப்பணிகளை மிக எளிதுபடுத்துவதற்காக வருகை தரும் பயனர்களுக்கு தங்கியிருக்கக்கூடிய இடங்கள், கணினிகள், பல் ஊடக வசதிகள் மற்றும் இ-தகவல்களைப் பெற்றுக்கொள்வது வரையான வசதிகளை வழங்குவதற்கு ஆணைக்குழு நடவடிக்கையெடுத்துள்ளது.

41. தேர்தல் ஆணைக்குழுவின் வெளியிடுகள்

41.1. தேர்தல் ஆணைக்குழுவின் 2017-2020 வரையான நான்காண்டு கால பங்கேற்பு மூலோபாயத் திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட கவன ஈர்ப்பு பகுதிகளின் கீழ் ஆணைக்குழுவின் பணிகளையும் கடமைகளையும் ஒட்டியதாக காலாண்டு அடிப்படையில் "புள்ளடியின் பலம்" எனும் செய்திச் சஞ்சிகை வெளியிடப்பட்டது. அச்சஞ்சிகையின் மலர் 07 இதழ் 03 (அக்டோபர் - திசெம்பர் 2023), மலர் 08 இதழ் 01 (சனவரி - ஏப்ரல் 2024), மலர் 08 இதழ் 02 (மே - ஆகஸ்ட் 2024) அச்சிடப்பட்டுள்ளது.



41.2. தேர்தல் ஆணைக்குழுவின் 2023 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கையை உரிய காலப்பகுதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.



பகுதி III

2025 ஆம் ஆண்டில் அமுல்படுத்த எதிர்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்களும் செயற்பாடுகளும்

1. 2026 - 2030 காலச்சட்டத்திற்கு உரிய ஆணைக்குழுவின் மூலோபாயத் திட்டத்தைத் தயாரித்தல்.

2. தகைமை பெறும் பிரசைகள் அனைவரும் உள்ளடங்கும் விதத்தில் 2025 பிரதான தேருநர் இடாப்பையும் குறைநிரப்பு தேருநர் இடாப்புகளையும் தயாரித்தல்.

3. உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தலையும் மாகாண சபைத் தேர்தலையும் நடத்துவதற்கு அவசியமான பூர்வாங்க நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தலும்ரூபவ் செயல் திட்டத்தைத் தயாரித்தலும்ரூபவ் அதன்படி மாவட்ட வாரியாக அலுவலர்களுக்கு பயிற்சியளித்தலும்.

4. 2024 சனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான அறிக்கைகளைத் தயாரித்தல்.

5. வாக்காளர்களை அறிவுறுத்துவதற்கான நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்தல்.

6. மாணவர் பாராளுமன்ற நிகழ்ச்சித்திட்டத்திற்காக கல்வி அமைச்சோடு இணைந்து செயலாற்றுதலும் தேவைப்படும் ஒத்தாசையை வழங்குதலும்.

7. தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தை வலுவாக்கம் செய்வதற்கு உரிய மாவட்ட வாரியான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல்.

8. வலிமையிழந்தோர், இளைஞர்கள், பெண்கள்ரூபவ் விளிம்புநிலை இனக்குழுமங்கள் முதலான பிரசைகள் அனைவரும் உள்ளடங்கும் வாக்காளர் கல்வித் திட்டத்தை அமுல்படுத்தல்.

9. தேர்தல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளை ஒழுங்குபடுத்துவதற்கான ஒருங்கிணைந்த பணிச்சட்டமொன்றை அறிமுகப்படுத்தும் நோக்குடன் அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கான வழிகாட்டல்களை முன்வைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல்.

   அரசியல் கட்சிகளின் உள்ளக நிருவாகத்தை முறையாக முன்னெடுத்துச் செல்வதற்கும்ரூபவ் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் அங்கத்தவர் ஒவ்வொருவருக்கும் சம வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்து சனநாயக மூலக் கோட்பாடுகளோடு ஒத்திசைவதற்கும் உரிய ஒருங்கிணைந்த வழிகாட்டலொன்றைத் தயாரித்தல்.

10. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளை கிரமமாக முன்னெடுத்துச் செல்வதற்காக அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒவ்வொன்றினதும் அடையாளத்தை உறுதிப்படுத்துகின்றவாறு தொடரிலக்கமொன்றைக் குறிப்பிடுதல்.

11. 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டம், 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டம், உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) தேருநர் இடாப்புகளில் பெயர்களை உட்சேர்ப்பதோடு தொடர்புடைய ஏற்பாடுகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடுரூபவ் அது குறித்து மேற்கொண்டு நடவடிக்கைக் எடுக்கப்படவுள்ளது. அதேபோல், தொடர்ந்தும் அவசியமான திருத்தங்கள்

அடையாளம் காணப்பட்டு வருகிறது. அதன்படி, திருத்தப்பட வேண்டிய சட்டங்களை மேலும் அடையாளம் காணல்.

12. தேர்தல் சட்டங்களில் திருத்தங்களைக் கொண்டுவரும் பொருட்டு நியமிக்கப்பட்ட பாராளுமன்ற விசேட தெரிகுழுவினதும் விசேட சனாதிபதி ஆணைக்குழுவினதும் யோசனைகளின்படியும், தேர்தல் சட்டங்களை அமுல்படுத்தும்போது அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள் அடங்கிய தற்போதைய தேர்தல் சட்டங்களில் தேவையான திருத்தங்களை மேற்கொள்ளலும், பின்வரும் சட்டமூலங்களை சட்டவாக்கத்துறை மூலம் அனுமதித்துக்கொள்ளலும்.

- தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களின் வைப்புப் பணத்தொகைகளை அதிகரித்தல்,
- தோதான குறியீட்டினால் அடையாளமிடும் முறைமைகளை அனைத்து தேர்தல் சட்டங்களிலிருந்தும் நீக்குதல்.
- முன்கூட்டியே வாக்களிப்பதற்கு அவசியமான வசதிகளை அளித்தல்.
- நடமாடும் வாக்களிப்புக்கு அவசியமான வசதிகளை அளித்தல்.
- வாக்களிப்பதற்கு விசேட நிலையங்களை நிறுவுதல்,
- தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் ஒழுக்கநெறிகளுக்கான சட்ட அடிப்படையொன்றை வழங்குதல்.
- தேர்தல் காலப்பகுதியில் தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் ஊடக வழிகாட்டிநெறிகளை அரச மற்றும் தனியார் ஊடகங்கள் அனைத்திற்கும் செயல்வலுப்படுத்தல்.

13. தகவல் தொழில்நுட்பப் பாவனைக்கு (இ-சேவைகள்) உரிய செயற்பாடுகள்.

- தேருநர்களைப் பதிவுசெய்வதற்கான நடமாடும் நிகழ்நிலை முறையொன்றை உருவாக்குதல்.
- பதிவுசெய்வதை உறுதிப்படுத்தும் தானியங்கி குறுந்தகவல் முறைமையொன்றை உருவாக்குதல்.
- நிகழ்நிலையாக தேருநர்களைப் பதிவுசெய்யும் முறை பற்றி பொதுமக்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல்.
- பிரசைகளுக்கு எளிதாக அடையக்கூடியவாறு தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளத்தின் தகவல்களை வெளியிடுதலும் இற்றைப்படுத்துதலும்.
- இலத்திரனியல் வாக்கு அடையாளமிடும் மற்றும் வாக்கெண்ணும் முறைகள் இலங்கையின் தேர்தல் சூழமைவுக்கு ஏற்ற விதத்தில் உள்ளதா என்பதைப் பரிசோதிப்பதற்கான சாத்தியவள ஆய்வொன்றை மேற்கொள்ளல்.
- நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவை இயலச் செய்யும் விதத்தில் அவசியமான சட்டத் திருத்தங்களை மேற்கொள்ளல்.
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட பணியாட்குழுவுக்கு மென்பொருள்களை அடையாளம் காண்பதற்கான பயிற்சித் தேவைப்பாட்டு மதிப்பீடொன்றை மேற்கொள்ளல்.
- வருடாந்தம் மாகாண மட்டத்தில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல்.
- தேருநர் இடாப்பு முகாமைத்துவ முறைமையை முன்னேற்றுதல்.
- இன்றைய தேர்தல் பணியாட்குழு (தேர்தல் அலுவலர்) முகாமைத்துவ முறைமையை முன்னேற்றுதல்.

- தேர்தல் முகாமைத்துவ செயன்முறையில் பங்கீடுபாட்டாளர்கள் அனைவருக்கும் இலத்திரனியல் நிகழ்நிலைச் சேவைகளையும் இலத்திரனியல் சேவைகளையும் முன்னேற்றுதல்.
- அவசியமான பாதுகாப்பு நிலைமைகளுக்கு ஏற்ப தற்போதைய மின்னஞ்சல் முறைமையை முன்னேற்றுதல்.
- பங்கேற்பு மூலோபாயத் திட்டத்தின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக தேர்தல் ஆணைக்குழுவில் கண்காணிப்பு அலகிற்கு உதவுவதற்காக இலத்திரனியல் நிகழ்நிலைக் கண்காணிப்பு முறைமையொன்றை விருத்திசெய்தலும் பராமரித்தலும்.
- காலப்பொருத்தமுள்ள தகவல்களுடன் இணையத்தளத்தை இற்றைப்படுத்துதல்.
- வலிமையிழந்த ஆட்களின் நட்புறவான உத்தியோகபூர்வ இணையத்தளமொன்றை பராமரித்தல்.
- சமூக ஊடக பாவனைக்குரிய மூலோபாயங்களை வகுத்தல்.
- இற்றைப்படுத்திய தகவல்களை வழங்குவதற்காக தற்போதைய சமூக ஊடக தளத்தை முன்னேற்றுதல்.
- வலிமையிழந்த ஆட்களின் நட்புறவான உத்தியோகபூர்வ சமூக ஊடக தளங்களைப் பராமரித்தல்.
- வழிகாட்டுநெறிகளைத் தயாரித்து சம்பந்தப்பட்ட திறத்தவர்களுடன் பரிமாறிக்கொள்ளல்.
- தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் பொருட்டு பங்கீடுபாட்டாளர்களுக்கான (Stakeholders) நோக்குநிலை நிகழ்ச்சித்திட்டங்களை (Orientation Programmes) ஒழுங்கு செய்தல்.
- பயன்பாடுகளை அவதானித்தலும் அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு பணியாட்குழுவுக்கு பயிற்சியளித்தலும்.

14. சனநாயகம, சர்வசன வாக்குரிமைரூபவ் மக்களின் இறைமை என்பன குறித்து சமுதாயத்தைப் பலப்படுத்துவதற்கு ஆராய்ச்சி அமர்வையும் (Research Symposium) குறும் திரைப்பட விழாவொன்றையும் (Short Film Festival) நடத்துதல்.

15. பணியாட்குழுவினரின் இயல்திறன் விருத்தி கருதி முறைசார்ந்த திட்டமொன்றின் கீழ் உள்நாட்டு, வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் உயர்கல்வி வாய்ப்புகளையும் வழங்குதல்.

16. தேர்தலை இலக்காக கொண்டு அரச ஊழியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

17. வெளிநாட்டு தேர்தல் முகாமைத்துவ நிறுவனத்துடனான ஒருங்கிணைப்பும் வேளைக்கேற்றவாறு வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பு மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் அலுவலர்களை கலந்துகொள்ளச் செய்தலும்.

18. ஆணைக்குழு வசமுள்ள பௌதிக வளங்களை முன்னேற்றுதலும் பராமரித்தலும்.

19. நிநி நிர்வாகத்தைப் பலப்படுத்தல்/ முறைவலுப்படுத்தலும் உள்ளக கணக்காய்வுத் திட்டத்தை அமுல்படுத்துதலும்.

20. தேர்தல் ஆணைக்குழுவின் கடமை பணிகளை உள்ளடக்கிய வருடாந்த மற்றும் காலாண்டு வெளியீடுகளைவெளியிடுதல்.

මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission

මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

(+94)112868441-42-43 (+94)112868426 info@elections.gov.lk www.elections.gov.lk
elecomsl SriLankaElectionCommission Election Commission of Sri Lanka Election Commission of Sri Lanka

මැතිවරණ කොමිෂන් සභාවේ ප්‍රකාශනයකි
தேர்தல் ஆணைக்குழுவின் வெளியீடு
PUBLISH BY ELECTION COMMISSION